

கயூம் தங்ரிகுலீயெவ்

# தங்க வட்டில்



C333.
N. C. B. H.
MADRAS-98
Rs 18.-00

Presented To

C. R. Prasanth

On The Occassion

Of His 7th

Birthday On

6th August 1993.

By His

Grand Father

C. S. P.

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

அன்புள்ள சிறுவர் சிறுமிகளே,

இந்த நூலின் ஆசிரியர் கயூம் தங்ரிகுலீயெவ் பிரபலமான சோவியத் கவிஞரும் உரைநடை எழுத்தாளரும் ஆவார். அவரைப் பார்க்க வேண்டும் என்று நீங்களும் நானும் முடிவு செய்தால், ஓர் இரயில் வண்டியில் நாம் ஏற வேண்டி இருக்கும். அல்லது இன்னும் சிறப்பானது ஒரு விமானத்தில் செல்வது. சோவியத் யூனியனின் தென் கோடியிலுள்ள வெப்பமிக்க துருக்மேனியாவுக்கு நாம் பறக்க வேண்டும்.

அது ஓர் அதிசயமான நாடு. நகரத்தின் தெருக்களில் பலவண்ணங்களில் கார்களைப் பார்ப்பதுடன், சுமையேற்றப்பட்டு நடந்து செல்கிற பெருமைமிக்க ஒட்டகத்தையோ, கண்களில் துயரம் வழியச் செல்லும் கழுதையையோ காண முடியும். வயல்களில் பருத்தி விளைவதைக் காணலாம். அதிலிருந்து அருமையான துணிகள் நெய்யப்படுகின்றன. பிறகு அவை இளைஞர்களுக்கும் வயதானவர்களுக்கும் உடைகளுக்குப் பயன்படுகின்றன. பழத்தோட்டங்கள் எல்லாவகையான மணமும் ருசியும் மிகுந்த பழங்களால் நிறைந்து காணப்படுகின்றன: சிவப்பு ஆப்பிள்கள், பழுப்புநிறப் பேரிக்காய்கள், பழுத்த விதைகள் கொண்ட மாதுளம் பழங்கள், சாறுமிக்க திராட்சைக் கொடிகள், ஆப்ரிகாட் பழங்கள் மற்றும் வாதாங்கொட்டைகள். மிகப்பெரிய, இனிப்பான முலாம் பழங்கள் வயல்களில் பழுத்துக் கிடக்கின்றன. சுவைமிக்கதும் நலமிக்கதுமான இந்தப் பழங்கள் எல்லாம் துருக்மேனிய மக்களால் விளைவிக்கப்படுகின்றன. நடுவதிலும் நீர்பாய்ச்சுவதிலும் அவற்றை நன்கு பார்த்துக்கொள்வதிலும் அதிகமான உழைப்புச் செலவாகிறது. சேகரிப்பு நேரத்தில் கூட அதிகம் உழைக்க வேண்டி இருக்கும்.

இவை எல்லாவற்றையும் பற்றி கயூம் தங்ரிகுலீயெவ் எழுதுகிறார். காராகூம் பாலைவனத்திற்கு அதிகத் தொலைவில் இல்லாத ஒரு துருக்மேனிய கிராமத்தில்தான் அவர் பிறந்து வளர்ந்தார். அவரது குழந்தைப் பருவ காலந் தொட்டே தனது பெற்றோர்களுக்கு வயல்களிலும் பழத்தோட்டங்களிலும் உதவி செய்தார். தனது சொந்தக் கண்களாலேயே ஒரு புதிய ஆறு—காராகூம் கால்வாய்—தரிசு நிலத்தில் எப்படி வெட்டப்பட்டது என்பதையும், வறண்ட பாலை நிலமானது பச்சை வயல்களாகவும், பூக்கள் நிறைந்த பழத் தோட்டங்களாகவும் மாறுகின்றன என்பதையும் கண்டார். இவற்றைப் பற்றி மற்ற சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சொல்ல வேண்டும் என்று கயூம் ஆர்வங் கொண்டார்.

இப்போது இருபத்தைந்து ஆண்டுகளாக சோவியத் குடியரசுகளையும் பல வெளிநாடுகளையும் சேர்ந்த குழந்தைகள் கயூம் தங்ரிகுலீயெவுடைய மகிழ்ச்சிமிக்க பாடல்களையும் கவர்ச்சிமிக்க கதைகளையும் படித்து மகிழ்கிறார்கள். இந்தக் கதைகளைப் படித்த பிறகு, ஆசிரியருடைய சொந்த நாட்டில் இருப்பது போல இளம் வாசகர் அநேகமாக உணரலாம். கயூம் தங்ரிகுலீயெவ், உங்களுக்கு மிக்க நன்றி!

**யா. அக்கீம்**

கயூம் தங்ரிகுலீயெவ்

# தங்க வட்டில்

படங்கள்: கியோர்கி யூதின்

மொழிபெயர்ப்பு: நா. முகம்மது செரீபு, எம். ஏ.



Тангрыкулиев К.

ЗОЛОТАЯ ЧАША

*На тамильском языке*

Tangrykuliev K.

A GOLDEN CUP

*In Tamil*

## பொருளடக்கம்


தங்க வட்டில் . . . . . . 5

மணி கட்டிய ஆட்டுக் குட்டி . . . . . . . . . . . 33

பாலைவனக் கதைகள் . 69

தேவதைக் கதைகள் . 85




© தமிழ் மொழிபெயர்ப்பு, ராதுகா பதிப்பகம், 1989



சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-002336-X


தங்க வட்டில்



## கிஸில்-அயாக்

உலகில் வேறு எந்த ஒரு கிராமமும் நான் பிறந்த் கிஸில்-அயாக்கைப் போல அவ்வளவு அழகானது அன்று. அதனுடைய குரல் அமுதாரியா நதியின் முடிவில்லாத பாடலாகும். அதனது இனிய, தூய்மையான நீரை ஒருமுறை பருகினால் சுவையை மறக்கவே முடியாது.

நான் சிறுவனாக இருந்த போது, கிஸில்-அயாக் என்ற வார்த்தைகளை வளர்ந்தவர்கள் எப்படி அருத்தம் கண்டார்கள் என்பதை என்னால் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருகால் எனது உறவினர்கள் குற்றம் சாட்டப்படலாம். அவர்கள் வருகை தந்த போதெல்லாம் என்னை இம்மாதிரி கேலி செய்தார்கள்:

“நல்லது, உன்னுடைய பாதங்களை நாங்கள் பார்க்கலாம்! நீ உண்மையான கிஸில்-அயாக் சிறுவனாக இருந்தால், உனது பாதங்கள் தங்கமாக இருக்க வேண்டும்!”

துருக்மேணிய மொழியில் ‘கிஸில்’ என்ற சொல் சிவப்பைக் குறிக்கும், ஆனால் ‘பொன்மயமான’ என்பதைக் குறிப்பிடவும் அது பயன்படும். ‘அயாக்’ என்ற சொல் பாதத்தைக் குறிக்கும், ஆனால் அண்டை மக்களின் மொழியில் அது ‘வட்டில்’, ‘கிண்ணம்’, ‘கோப்பை’ என்றும் பொருள்படும். தேவதைக் கதை ஷா ஜிம்சித் ஒரு மந்திரத் தங்க வட்டில்—‘கிஸில்-அயாக்’ வைத்திருந்தான். அந்த வட்டிலுக்குள்ளாக அவன் பார்த்த போது, பூமியில் நடந்து கொண்டிருந்த ஒவ்வொன்றையும் அவனால் பார்க்க முடிந்தது.

அநேகமாக கிராமம் தனது பெயரை அதனது முன்னாளைய குடியிருப்பாளர்களின் செல்வம் காரணமாகப் பெற்றது. ஒருமுறை செம்மறியாட்டு மந்தை இந்த மணலை புயல்சூழ்ந்த வானத்தில் உள்ள மேகங்களைப் போல போர்த்தின என்று சொல்லப் பட்டது. ஆனாலும் அந்த மந்தைகள் அனைத்தும் ஓரிரு பணக்கார நிலக்கிழார் களுக்கே சொந்தமாக இருந்தன. அதிகாரத்தை மக்கள் தங்களுடைய சொந்தக் கை களில் எடுத்துக் கொண்ட போது, உடைமைகள் பறிக்கப்பட்ட நிலக்கிழார்கள் தங்க ளது மந்தைகளையும் உடன் எடுத்துக்கொண்டு எல்லையைக் கடந்து ஆப்கனிஸ்தா னுக்குச் சென்றார்கள்.

வளம்மிக்க கிஸில்-அயாக்கின் கைவிடப்பட்ட நிலங்களில் குடியேறிய அறுபது முன்னோடி விவசாயிகளில் என் தந்தையும் ஒருவர். அவர்கள் ஒன்றுசேர்ந்து 'துயாஸே துனியா' அல்லது 'புதிய உலகம்' என்ற பெயரில் கூட்டுப்பண்ணை ஒன்றை அமைத்தார்கள்.

அதற்குப் பிறகு பல ஆண்டுகள் கடந்து விட்டன. இன்று எனது கிராமம் உண்மையிலேயே தங்க வட்டில். கசப்பும் பொறாமையும் கொண்டு தங்களது நிலத்தைக் கைவிட்டு விட்டு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டுப் போனவர்கள் இப்போது வருந்துவார்கள்.

## முதலாவது மோட்டார் வாகனங்கள்

எங்களது வீடு கிராமத்தை விட்டுத் தொலைவில் இருந்தது. நாங்கள் வசித்த பகுதியில் சாலைகள் கூட கிடையாது. எங்களது வீட்டின் பின்புறத்தில்தான் பசுமையான புதர்க்காடுகள் தொடங்கின. எங்களது வீட்டுக்கு அண்மையில் அண்டைவீட்டுக்கார அன்னாலியின் வீடு இருந்தது. ஆனால் என் நண்பன் யாஸ்லியுடன் பேசுவதற்கு நான் ஒரு மரத்திலோ கூரையிலோ ஏறவேண்டி இருந்தது. அன்று காலையில் யாஸ்லிதான் முதலாவதாகக் கூரை மீது இருந்தான்.

''கா-யூ-ம்!'' பலமாகச் சத்தம் போட்டான்.

என்னுடைய பால் குவளையைக் கீழே வைத்துவிட்டு வெளியே முற்றத்திற்கு ஓடினேன்.

''எ-ன்-ன!'' பதிலுக்குக் குரல் கொடுத்தேன்.

''இங்கே வா!'' என்று யாஸ்லி கத்தினான். ''அப்பா இரும்பு வண்டி வைத்திருக்கிறார்!''

என் நண்பனுடைய வீட்டுக்கு விரைந்தேன். முற்றத்தில் விநோதமான இரும்புப் பொருள் பெரிய இரும்புச் சக்கரங்களின் மீது நின்றது.

''இது நெருப்பைத் தின்னும்!'' என்று கிசுகிசுத்த யாஸ்லி, நொடியில் அதன் இருக்கை மீது ஏறினான். ''மேலே ஏறு! கவலைப்படாதே, நீ நெருப்புக் கொடுக்காதவரை அது எங்கேயும் போகாது.''

அச்சத்தால் பீடிக்கப்பட்டவாறு நான் இன்னமும் அங்கேயே நின்று கொண்டிருந்த போது, அன்னாலி வீட்டை விட்டு வெளியே வந்தார். ''யாஸ்லிக்குப் பக்கத்தில் உட்கார், தம்பி'' என்றார்.

கடினமான இருக்கையின் மீது ஏறுவதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. அன்னாலி என்ஜினை முடுக்கினார். ஒரு குலுங்கலுடன் டிராக்டர் உயிர்பெற்றது. நான் யாஸ்லியைப் பற்றிப் பிடித்துக்கொண்டேன். பலமான 'கடகட' ஓசையுடன் நாங்கள் புறப்பட்டுச் சென்றோம். வயலை நாங்கள் அடைந்த போது, இரும்பு வண்டியின் வாசனைக்கும் அதனது 'கடகட' ஓசைக்கும் 'கணகண' ஒலிக்கும் நான் ஏற்கெனவே பழகிப் போய்விட்டேன். வெட்டுத் தகடு போன்ற பற்களுடன் கூடிய மற்றுமொரு இரும்புக் கருவி எங்களுக்குப் பின்னால் இழுத்துக் கொண்டு வந்ததையும் நான் கவனித்தேன். நான் உற்றுப் பார்த்ததை அன்னாலி பார்த்தார்.

''இது என்ன என்று உனக்குத் தெரியுமா?'' எனக் கேட்டார்.

''தெரியும்!'' என்று விரைந்து சொன்னேன். ''இது இரும்பு வண்டியினுடைய குட்டி!''

அன்னாலி மனம் விட்டுச் சிரித்தார்.

''இது கலப்பை தம்பிகளே, கலப்பை! இப்போது நீங்கள் இருவரும் வீட்டுக்கு ஓடுங்கள்—எனக்கு வேலை இருக்கிறது. நிறைய உழ வேண்டும்.''

இரும்பு வாகனத்துடனான எனது முதலாவது அறிமுகம் இது.

* * *

யாஸ்லி என்னை விடச் சற்று வயதானவன். அவன் போன இடங்களுக்கெல்லாம் அவன் பின்னே சென்றேன். அவனது வழிகாட்டலை எப்போதுமே நம்பிக்கையோடு பின்தொடர்ந்தேன்.

''நான் கண்டுபிடித்து விட்டேன்!'' அதிமதுரச் செடிப் புதருக்குக் கீழே தரையிலிருந்து பூவிழைக் குடை கொண்ட காளான் ஒன்றைப் பிடுங்கியவாறு யாஸ்லி கத்தினான். ''நமது முழங்கால்களைத் தேய்த்துக் கொள்ளலாம்.''

''எதற்காக?''

''அப்போதுதான் நாம் விரைந்து ஓட முடியும். 'சைத்தானின் சக்கரம்' நம்மை எட்டிப்பிடிக்க முடியாது.''

நான் சுற்றிலும் பார்த்தேன்.

''எங்கே அது?''

''என் மாமாவினுடைய வீட்டில்! அவர் அதன் மீது உட்கார்ந்து தனது கால்களைச் சுழற்றுகிறார். குதிரை மீது சவாரி போவதை விட விரைவாகப் போகிறார். அடுத்த முறை அவர் இங்கே வரும் போது, உனக்குக் காட்டுகிறேன்.''

பூவிழை குடைக் காளானை எங்களது முழங்கால்களில் வைத்துத் தேய்த்தோம்; பிறகு நீண்ட குச்சிகள் சிலவற்றை ஒடித்துக்கொண்டு முழுமூச்சுடன் ஓட்டம் எடுத்ததில் எங்களது பாதையில் புழுதி மேகம் எழுந்தது.

திடீரென்று நாங்கள் நிலைகுலைந்து நின்றோம். எங்களது பாதையின் குறுக்கே ஒரு பாம்புத் தடம் சென்றது—ஒரு மர்திரியான அடையாளங்கள் கொண்ட பாம்பு. அதனது தடத்தைப் பின்தொடர ஆரம்பித்தோம், ஆனால் அதற்கு முடிவே இல்லாதது போலக் காணப்பட்டது. எங்களது வேகத்தைக் குறைத்து சுற்றிலும் நோக்கினோம், ஆனால் தடம் யாஸ்லி மாமாவின் வீட்டை நோக்கித் திரும்பிச் சென்றது.

வீட்டுக்கு முன்னால் 'சைத்தானின் சக்கரம்'—சைக்கிள்—நின்றது.

இது எனது சொந்த அநுபவத்திலும் உண்டு. ஆனால் அநேகமாக என் தலைமுறையைச் சேர்ந்த எல்லாருமே வாகனங்கள், மின்சாரம், எரிவாயு ஆகியவற்றுக்குப் பழகிப்போய் இருந்தாலும் ஒருசமயம் சைக்கிளின் தடத்தை பாம்பின் தடமாக எடுத்துக் கொண்டதுண்டு. நாங்கள் இன்னமும் எங்களது முதியப் பருவத்தை அடையவில்லை! கடந்த ஐம்பது ஆண்டுகளில் மக்கள் எவ்வளவு சாதித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் தலை சுற்றும். மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்கள் மிகவும் கற்பனையான தேவதைக் கதையையும் விஞ்சிவிட்டன.

# நினைவுகள்

எனது குழந்தைப் பருவத்தின் நினைவுகளை மனத்தில் திரும்பவும் எண்ணிப் பார்க்கையில், பாப்ளார் மரங்கள், பழைய கோட்டையின் இடித்து போன களிமண் சுவர்கள், தோத்தி பாட்டி ஆகியன நினைவுக்கு வருகின்றன. சிறுவர்களாகிய எங்களை வழக்கம் போலக் கவனித்துக்கொண்டாள், எங்களைப் பிணித்து வைக்கக் கதைகள் சொன்னாள். ஏழை விவசாய மக்களுக்கு செம்மறியாடுகள் எப்படி வழங்கப்பட்டன என்பதை என்னால் நினைத்துப்பார்க்க முடிகிறது. புதிய சொந்தக்காரர்கள் உடனடியாக அவற்றின் முதுகுகளின் மேல் சிறப்பு அடையாளங்கள் தீட்டினார்கள். தங்களுடைய விலங்குகளுடன் அண்டை அயலவர்களுடைய விலங்குகள் கலந்து விடக் கூடாது என் பதற்காக அழியாத மையினால் அவற்றின் மேல் அடையாளமிட்டார்கள். வர்ணந் தீட்டப்பட்ட அந்தச் செம்மறியாடுகள் தான் அநேகமாக எனது குழந்தைப் பருவத் திலிருந்து மிகத் தெளிவாக இருக்கக் கூடிய நினைவு.

யாஸ்லி என்னை ஏமாற்றிய நேரத்தையும் நினைத்துப்பார்க்கிறேன். ‘‘கதை கேட்க விருப்பமா?’’ எனக் கேட்டுத் தொடங்கினான்: ‘‘முன்னொரு காலத்தில் கிழவன் ஒருவன் வாழ்ந்தான். அவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் ஐத்—‘பேசு’ என்றும் மற்றவன் ஐத்மா—‘பேசாதே’ என்றும் அழைக்கப்பட்டனர். ஐத் தன் தந்தையினுடைய உத்தரவுகளைப் பிழையின்றி நிறைவேற்றினான். ‘ஐத், சுத்தியல் எடுத்துவா!’ அவன் அப்பா சொல்வதுண்டு. ஐத்தும் அதைக் கொண்டுவருவான். ‘ஐத், எனக்கு ஒரு பாட்டுப் பாடு!’ ஐத் பாடுவான். ஐத் புத்திசாலிப் பையன். ஆனால் மற்றவனோ... அவன் எப்படி அழைக்கப்பட்டான்?’’ யாஸ்லி தனது கைகளால் தன் தலையைப் பிடித்தான்.

‘‘ஐத்மா!’’ என்று நானாகச் சொன்னேன்.

‘‘அப்படியானால் சரி, வேறு வார்த்தை நான் பேச மாட்டேன்!’’

நான் எளிதில் ஏமாற்றப்பட்டேன் என்பதையும் மேற்கொண்டு கதை இருக்காது என்பதையும் உணர்ந்த போது கண்ணீர் பெருக்கினேன். இன்று வரையும் அதைப் பற்றி நான் நினைக்கும் போது கசப்பான உணர்வு பேரலையாய் பெருகும்.

அதன் பிறகு உண்மையான அச்சத்தை முதலாவதாக நான் உணர்ந்த நேரமும் உண்டு. முன் வசந்தத்தில் அது வெதுவெதுப்பான நாளாக இருந்தது. மரங்களில் இலைகள் தளிர்த்துக்கொண்டிருந்தன, சிறு குன்றுகளில் பூக்கள் தோன்றியிருந்தன. மந்தமான, தங்களது காய்கறித் தோட்டத்தில் சேர்ந்திருந்த காய்ந்த அடித்தாள்களை அகற்ற மக்கள் மூட்டியிருந்த நெகிடிகளினின்றும் வந்த புகையின் தூய்மைப்படுத்தும் மணத்தால் காற்று நிறைந்திருந்தது. காற்றில் வசந்தத்தின் முதல் வாசனை யை—மலருகின்ற இலைகளின் நறுமணம், மழையில் நனைந்த பூமி மற்றும் புகை—நான் நுகர்ந்த போது ஊர் திரும்ப வேண்டும் என்ற ஆசை என்னை உந்தியது.

விறகுக்காக காய்ந்த குச்சிகளைச் சேகரித்து வர நாங்கள் அனுப்பப்பட்டிருந்தோம். ஏற்கெனவே மாலை நேரமாகிவிட்டது. நாங்கள் மூன்று பேர் இருந்தோம்: யாஸ்லி, ஜுமா, நான். ஜுமா பக்கத்து வீட்டுப் பையன், யாஸ்லியைவிட வயதானவன். விறகைத் தூக்கி உதவ சில நேரங்களில் கழுதையோடு வருவான்.

நாங்கள் பாசன வாய்க்காலின் பழைய படுகைக்குச் சென்றோம். வெகு சீக்கிரமே ஒவ்வொருவரும் ஒரு கட்டுச் சேகரித்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்படவிருந்த போது, தொலைவில் தனியாக நின்ற ஒரு பழைய ஆப்ரிகாட் மரத்தை ஜுமா சுட்டிக்காட்டினான். அந்த மரத்திற்கு மேலாக ஏதோ ஒருவிதப் பெரிய பறவைகள் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

''நாம் ஓடிச் சென்று கூட்டைப் பார்க்கலாம்!'' என்று ஜுமா கத்தினான்.

எங்களுடைய கட்டுகளையும் கோடரிகளையும் பிடித்துக்கொண்டு தனித்த மரத்தை நோக்கி நாங்கள் ஓடினோம்.

''யார் அங்கே முதலில் போவது என்பதை நாம் பார்க்கலாம்!'' என்று ஒரு புதிய போட்டியை அறிவித்தவாறு ஜுமா கூக்குரலிட்டான்.

யாஸ்லியும் நானும் கஷ்டப்பட்டு மூர்க்கத்தனமாக காய்ந்த கிளைகளின் ஊடாகச் சென்றோம். ஜுமா சிறிது கூட அசைந்து கொடுக்கவில்லை என்பதைக் கவனிக்கவில்லை. ஓரிரு நொடியில் யாஸ்லி என்னைத் தோற்கடித்தான். நாங்கள் கூண்டுக்குள்ளாக உற்றுப்பார்த்த போது மூன்று முட்டைகளைக் கண்டோம். அவை இளநீலநிறத்தில் சிறிய புள்ளிகளுடனும் நுனி ஒடுங்கியும் கோழி முட்டையினுடைய அளவில் இருந்தன. அவற்றில் ஒன்றை எடுப்பதற்கு நான் உடலை வளைத்து விட்டேன். திடீரென்று ஏதோ கூர்மையாகவும் கடினமாகவும் என் தொப்பியை அடிப்பது போல உணர்ந்தேன். யாஸ்லியோ பச்சைப்பாம்பைப் போல மரக்கிளைகளை விட்டு கீழே வேகமாக இறங்கிக் கொண்டிருந்தான். ''கயூம்! கீழே இறங்கு! அது உன்னைத் திரும்பவும் தாக்கும்!'' என்று கத்தினான்.

நான் விரைந்து கீழே இறங்கும் போது என் கைகளையும் முழங்கால்களை யும் சிராய்த்துக் கொண்டேன். தரையில் இறங்கிய போது எனது கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

ஜுமா வாய்விட்டுச் சிரித்தான்.

''சரி, பிணந்தின்னும் கழுகை உனக்கு எப்படிப் பிடித்திருக்கிறது?''

மரத்திலின்றும் சற்றுத் தொலைவுக்கு ஓடி ஓய்வெடுக்க உட்கார்ந்தோம். தீப்போன்றதும் செந்நிறமானதுமான சூரியன் தொடுவானிற்குக் கீழே மூழ்கிக் கொண்டிருந்தது. எங்களது கோடரிகளால் பழைய கட்டைகளைத் துண்டு துண்டாக வெட்டத் தொடங்கினோம், ஆனால் அந்திக் கருக்கல் அதிகமாகி, விரைவில் மேலே நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கின. நாங்கள் வீட்டிற்கு விரைந்து புறப்பட்டோம். ஜுமா முன்னே நடந்தான், நான் கடைசியாகச் சென்றேன். திடீரென்று பலமான காற்று வீசியது. எங்களது கட்டுகள் முட்களாகவும் கனமாகவும் இருந்ததால், காற்றின் ஒவ்வொரு வீச்சும் எங்களைத் தடுமாற வைத்தது.

நாங்கள் அகன்ற, புழுதி படிந்த மேய்ச்சல் நிலத்திற்கு வந்த போது, நான் திரும்பிப் பார்த்து அதிர்ந்து போனேன்: எங்களைப் பின் தொடர்ந்து முழுவீச்சில் மூன்று ஓநாய்கள் வந்து கொண்டிருந்தன.

''ஓநாய்கள்!'' நாக்குழறினேன். ஆனால் ஓடுவதற்குப் பதிலாக புழுதியில் உட்கார்ந்து விட்டேன். என் நண்பர்கள் ஓடத் தொடங்கி விட்டனர், ஆனால் நான் அவர்களுடன் வரவில்லை என்பதைக் கவனித்ததும், ஓடாமல் நின்று, நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு விரைந்து வந்தார்கள்.



‘‘எழுந்திரு!’’ என்றான் ஜுமா. ‘‘ஓநாய்களை எங்கே பார்த்தாய்?’’

நான் எனது கண்களைத் திறந்து இருட்டில் அசைந்த உருவங்களைச் சுட்டிக்காட்டினேன். ஜுமா துணிச்சலுடன் ஓடி ‘ஓநாய்’களில் ஒன்றைக் காலால் உதைந்தான். அது கடந்த ஆண்டு வளர்ந்து காய்ந்து போய் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்ட செடிகளின் உருண்டை.

மிகுந்த ஆர்வத்துடன் நாங்கள் திரும்பினோம், ஆனால் அந்த இரவில் வெகுநேரம் வரையில் எனக்குத் தூக்கம் வரவில்லை. முதலாவதாக, ஒரு கோழையைப் போல நடந்து கொண்டேன், இரண்டாவதாக, ஜுமா எப்படிப்பட்டவன் என்பதைப் புரிந்துகொள்ளத் தொடர்ந்து முயன்றேன். பிணந்தின்னும் கழுகின் கூட்டிற்கு எங்களை ஏறும் அளவுக்குத் தூண்டிவிட்டான். அந்தப் பிணந்தின்னும் கழுகு எங்களது கண்களைக் கொத்தியிருக்க முடியும். ஆனால் ஓநாய்களுடைய கருணைக்கு என்னை நான் ஆட்பட்டிருந்தபோது, அவன் என்னைக் கைவிட்டு விடவில்லை. எனது முன் வாசல் வரை எனக்குத் துணையாக வந்தான். ஆகவே அந்த இரவில் எந்த இறுதி முடிவுக்கும் என்னால் வர முடியவில்லை.

## நான்கு கண் நாய்

சந்தையிலிருந்து என் அப்பா திரும்பிய போது யாஸ்லியும் நானும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். கழுதையினின்றும் பிரகாசமான வண்ணத்திலான பொதிமூட்டைகளை கவனமாக இறக்கினார். ஒரு சாக்கில் பரங்கிக்காய் ஒன்றும் சில பொட்டலங்களும் இருந்தன, ஆனால் மற்றொன்றில் ஏதோ பெரியதாகவும் உயிருள்ளதாகவும் இருந்தது. அப்பா அதைத் தரையில் வைத்துக் கட்டளையிட்டார்:

‘‘படு!’’

செம்பட்டை வண்ணத்திலான விலங்கு ஒன்று, வாலும் தொங்கிய காதுகளுமாக, பணிவுடன் அவரது காலடியில் படுத்தது.

‘‘உனக்கு ஒரு வேட்டைநாய் கொண்டு வந்திருக்கிறேன், மகனே’’ என்றார் என் அப்பா. ‘‘இதன் பெயர் ஜெக். புத்திசாலி நாய். நீ சொல்வதை அது புரிந்து கொள்ளும்.’’

அப்பா ஒரு சவுக்கை நாய் மோர்ந்து பார்க்க நீட்டி, பின்னர் தொலைவில் இருந்த புதர்களுக்குள்ளாக வீசினார்.

‘‘போய் அதை எடு, ஜெக்!’’ உத்தரவை நிறைவேற்ற நாய் பாய்ந்து சென்று, தனது வாயில் அந்தச் சவுக்கைக் கவ்வியபடி விரைவிலேயே திரும்பி வந்தது.

இந்தக் காட்சியைக் கவனித்த யாஸ்லி வீட்டுக்கு ஓடி சில நிமிடங்களுக்குப் பிறகு தன் தந்தை அன்னாலியுடனும் மாமா ஜாகுலுடனும் திரும்பி வந்தான். அற்புதமான நாயைப் பார்ப்பதற்காக வெகு சீக்கிரமே ஒரு கூட்டம் சேர்ந்துவிட்டது.

அன்னாலி உடனடியாக என் அப்பாவுக்கு அறிவுரை வழங்கத் தொடங்கினார்:

‘‘தங்ரிகுலீ அவர்களே, அந்த நாயினுடைய வாலும் காதுகளும் கத்தரிக்கப்பட வேண்டும்.’’

“அது சரிதான்” கருத்த முகங்கொண்ட வயதான மனிதர் ஒருவர் ஒப்புக்கொள்வது போலத் தலையை அசைத்தார். “ஓநாய் எப்போதுமே நாயினுடைய வாலையோ காதுகளையோ தான் முதலில் பிடிக்கும்.”

ஒவ்வொருவரும் தங்கள் கருத்தைச் சொல்லி முடிக்கும் வரை காத்திருந்தார் அப்பா, பிறகு தனது தொப்பியைக் கழற்றி, தனது மழித்த தலையை தடவியவாறு சொன்னார்:

“எனது நண்பர்களே, ஓநாய்களுடன் சண்டையிடுகின்ற வேலை ஜெக்கிற்குக் கிடையாது. அதனுடைய வேலை கொல்லப்பட்ட கவுதாரி, காடை, காட்டு முயல்களைத்



தேடிக் கொண்டுவருவதுதான். அதனது வலிமை என்பது அதன் பலம் அன்று, ஆனால் மோப்பம் பிடிக்கும் ஆற்றல். ஒரு மைலுக்கு அப்பால் இருக்கும் காட்டுக் கோழியை அதனால் மோப்பம் பிடிக்க முடியும். பிறகு அந்த இடத்தைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி அழைத்துச் செல்லும்.”

என் நண்பன் ஜுமா முன்னுக்கு நகர்ந்தான்:

“தங்ரிகுலீ அவர்களே, இந்த நாய் மனிதப் பேச்சைப் புரிந்துகொள்ள முடியும் என்பது உண்மையா?”

“தம்பி,” என்று புன்முறுவலுடன் என் அப்பா சொன்னார், “ஓர் அருமையான வேட்டை நாயால் தனது எசமானனது முகத்தைப் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஜெக் இன்னமும் இளையதாகவே இருக்கிறது, ஆனால் அது ஏற்கெனவே பயிற்சி பெற்றது. எனது துப்பாக்கியை தரையில்

வைத்து அதைப் பாதுகாக்கும்படி அதற்கு உத்தரவிட்டால் அந்த இடத்தை விட்டு நகரவே நகராது.''

ஆனால் ஜுமா இன்னமும் திருப்தியடையவில்லை.

''அதற்கு இரண்டு ஜோடிக் கண்களா?''

''ஜெக்குடைய கண்களுக்கு மேலாக மங்கலான ஒட்டுகள் இருப்பதை நீ பார்த்தாயா? அவை பொய்யான கண்கள், காட்டு விலங்குகளை தன்வயப்படுத்தி மயக்குவதற்காக அவற்றை அது பயன்படுத்துகிறது.''

மறுவாரம் முழுக்க அற்புதமான 'நான்கு கண்' நாயைப் பார்க்க மக்கள் எங்களது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார்கள்.

## திரைப்படம்

நான் 1930இல் பிறந்தேன். அந்நேரத்தில் சர்க்கரை பெரிய பாளங்களில் கிடைத்தது. ஆனால் அது மிக அபூர்வமாக இருந்தது. தேநீருக்காகத் தாயார் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஆப்ரிகாட் பழத்தின் பருப்பு அளவுக்கு ஒரு துண்டு சர்க்கரை தந்து எப்போதுமே சொன்னாள்: ''ஒவ்வொரு கடைசித் துணுக்கு வரைக்கும் சாப்பிடுங்கள், கீழே போடாதவாறு கட்டாயம் பார்த்துக்கொள்ளுங்கள்! அன்புப் பறவை நமக்காக அதை விட்டுச் சென்றது.''

எங்களது தேநீரைப் பருகிய பின்பு முதுகுகளை வீட்டுப் பக்கம் காட்டியவாறு வெளியே வெயிலில் உட்கார்ந்து அன்புப் பறவைக்காகக் காத்திருந்தோம். அரிதான சமயங்களில்தான் அம்மா அதைப் பார்த்திருக்கிறாள். ஆனால் நாங்கள் பார்த்ததே இல்லை.

உறைகளில் சாக்லேட் மிட்டாய்கள், குறிப்பாக வெள்ளி அல்லது பொன்நிற உறைகளில் சுற்றப்படுவது போன்ற விஷயங்களை நாங்கள் கேள்விப்பட்டது கூடக் கிடையாது. ஆகவேதான் எங்களது குழந்தைகள் பாதி தின்ற சாக்லேட்டுகளை வீடு முழுக்கப் போடுவதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

திரைப்படம்... இப்போதெல்லாம், குறுநடை போடும் குழந்தை கூட பார்க்க ஆர்வமூட்டும் நிகழ்ச்சிக்காக தொலைகாட்சி சேனலை திருப்பமுடிகிறது. நான் ஏற்கெனவே பள்ளிப் பையனாக இருந்த போது திரையரங்கிலே எனது முதலாவது திரைப்படத்தைப் பார்த்திருக்கிறேன்.

மண்டலத் தேர்தல்களில் வாக்களிக்க அப்பா, அம்மா, அன்னாலி, அவர் மனைவி ஆகியோரை கூட்டிச்செல்ல எங்களது மாட்டு வண்டி தயாராக இருந்ததை என்னால் நினைவுகூர முடிகிறது.

''உங்களோடு என்னையும் கூட்டிப் போங்கள்!'' என்று கெஞ்சினேன். ''நீங்கள் என்னைக் கூட்டிப் போகவில்லை என்றால், பின்னால் உங்களைத் தொடர்ந்து வருவேன்!''

அன்றைய தினம் அப்பா நல்ல மனநிலையில் இருந்தார்.

''சரி'' என்றார். ''உனது தொப்பி, காலணிகள் மற்றும் புதிய கோட் ஆகியவற்றை அணிந்துகொள்.''

கிராம சோவியத் அலுவலகத்தின் முன்னால் எங்களது வண்டி நின்றது. கட்டடத்திற்கு அருகே மிகப்பெரிய பித்தளைக் கெண்டிகளில் சூப்பும் புலவும் சமைத்துக் கொண்டிருந்தார்கள். மற்ற குழந்தைகள் சுற்றிலும் ஓடிவந்தவாறு பிஸ்கட்டுகளைத் தின்று கொண்டிருந்தார்கள். ஆனால் நானோ என் அப்பா பக்கத்திலேயே ஒட்டிக்கொண்டேன். அவரிடம் சில காகிதத் துண்டுகளைத் தர, அவற்றை அவர் ஒரு சிவப்புப் பெட்டிக்குள்ளாகப் போட்டார்.

''ஆக எப்படி வாக்களிக்கப்படுகிறது என்பது இப்போது உனக்குத் தெரியும்'' என்று அப்பா மகிழ்ச்சியுடன் சொன்னார்.

எனக்கு எதுவுமே புரியவில்லை, ஆனால் கேட்பதற்கு மிகவும் வெட்கப்பட்டேன். அப்பா என் கையைப் பிடித்துக்கொண்டு ஓர் இருட்டு அறைக்குள்ளாக அழைத்துச் சென்றார். ஒரு வெள்ளைச் சுவரில் ஆட்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களது வாய்களைத் திறந்துகொண்டும் உதடுகளை அசைத்துக்கொண்டும் இருந்தார்கள், ஆனால் ஒரு வார்த்தை கூட எனக்குக் கேட்கவில்லை.

''அப்பா, அவர்கள் நமக்கு என்ன சொல்ல முயல்கிறார்கள்?'' சுவரில் இருந்த ஆட்களைப் பற்றி என் அப்பாவிடம் கேட்டேன்.

''அது திரைப்படம், மகனே. ஊமைப் படம். பேசுகின்ற திரைப்படங்களை ஏற்கெனவே தயாரித்து விட்டதாகக் கூறுகிறார்கள். அவை நம்மிடம் வரும்போது, நாம் போய் அவற்றைப் பார்க்கலாம்.''

## சைத்தானின் சக்கரம்

வெகு சீக்கிரத்திலேயே புதிய காலத்தின் அதிசயங்களில் ஒன்று எங்கள் வீட்டில் தோன்றியது. என் மூத்த சகோதரன் 'சைத்தானின் சக்கரம்' ஒன்றை வாங்கி வந்தான். சிறுவர்களாகிய எங்களுக்கும் வயதானவர்களுக்கும் கூட இரும்பு வாகனங்கள் அபூர்வமான உயிருள்ள பிராணிகள் போலத் தோன்றின. என்ன வேலை செய்தாலும் மக்கள் அதை நிறுத்திவிட்டு அவற்றை வெறித்துப் பார்ப்பார்கள். கிராமப் பெரியவர்கள் கூட ஒரு வாகனம் வேகமாகச் சென்றால் மரியாதையுடன் வெறித்துப் பார்ப்பர்.

ஆரம்பத்தில் என் அண்ணன் அவனது சைக்கிளுக்கு அருகே வர யாரையும் விடவில்லை, அதை அதிகம் ஓட்டாதது போலவும் காணப்படவில்லை. பிறகு எங்களை சவாரி போக கூட்டிச் செல்லத் தொடங்கினான். மிக அருமையான சைக்கிளை விலைக்கு வாங்கி வைத்திருந்தான், அதில் முன் விளக்கும் இருந்தது.

மையிருட்டில் நாங்கள் எப்படி நெடுகிலும் விரட்டிக் கொண்டு சென்றோம் என்பதை இன்று வரை என்னால் நினைவுகூர முடிகிறது; விறகு எரிகின்ற வாசனை காற்றில் வந்தது, முன் விளக்கின் நடுங்கிக் கொண்டிருந்த ஒளிக்கற்றை சாலையின் ஒரு சிறிய துண்டுப் பகுதிக்கு வெளிச்சம் தந்தது, தூசிகளின் பிரகாசமான வெள்ளைப்



RAJESH

புள்ளிகளாலும் வெளிச்சத்தை நோக்கி இழுக்கப்பட்ட கொசுக் கூட்டத்தாலும் காற்று நிறைந்திருந்தது.

சுற்றித் திரியும் நாடோடிப் பாடகனின் உச்சத் தொனியின் இனிமையான குரலை நான் நினைவு வைத்திருக்கிறேன்.

நாடோடிப் பாடகனின் குரல் வந்த திசையில் ஹாஞ்சாவினுடைய வீட்டை நோக்கி நாங்கள் சென்றோம்.

மண்ணெண்ணெய் விளக்கின் மஞ்சள் ஒளியில் மரமேடை மீது நெருக்கமாக



உட்கார்ந்திருந்த ஆட்களின் உருவங்களை என்னால் பார்க்க முடிந்தது. வழக்கமாக புலவுத் தட்டோ சூப்புச் சட்டியோ இருக்கும் இடத்தில், மேடையின் மத்தியில் பெரிய விரிப்பின் மீது 'நாடோடிப் பாடகன் எந்திரம்' இருந்தது. கிராமத்தில் கிராமபோனை அப்படித்தான் அழைத்தனர்.

இசைத் தட்டுகளை மாற்றிய போது, இசை நிகழ்ச்சி நாயகனைப் போல ஹாஞ்சா அடுத்த பாட்டையும் அதைப் பாடியவரையும் அறிவிப்பார். பிறகு சாவி கொடுத்து ஊசியை மாட்டி இசைத் தட்டின் மீது வைப்பார். அவரோ உள்ளங்கையில் முகவாய்க் கட்டையை வைத்து அசையாமல் கேட்பார்.

"ஓர் உண்மையான அதிசயம்!" அவரது விருந்தினர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். "பூமியில் இதற்கு முன்னர் ஒருபோதும் பார்த்திராத ஒன்று. இதைக் காண நாம் உயிர்வாழ்வது எவ்வளவு மகிழ்ச்சியானது!"

# என் அப்பா

வட்டமான முகமும் செம்பட்டைத் தாடியும் கொண்டு அகன்ற தோள்களையுடையவர் என் அப்பா. வெளித் தோற்றத்தில் மெதுவாக நடக்கக் கூடியவராகவும் நிதானமானவராகவும் காணப்பட்டார். ஆனால் உண்மையில் தனது விரைவூக்கத்தையும் சுறுசுறுப்பையும் மற்றவர்களிடமிருந்து மறைத்து வந்தார். இதை ஸ்டெப்பிக்காகவும் வேட்டைக்காகவும் வேலைக்காகவும் அவர் பாதுகாத்து வந்தார். என் அப்பா ஒரு மாடுமேய்ப்பன்.

நான் சிறுவனாக இருந்த போது என் அப்பாவை அரிதாகத்தான் பார்த்தேன். மந்தையுடன் அவர் புறப்பட்டுப் போன போது அந்த இனிமையான காலை நேரக் கனவுகளை நான் இன்னமும் கனவு கண்டு கொண்டிருந்தேன். அவர் மாலையில் வீடு திரும்பிய போது, நான் ஏற்கெனவே நன்கு தூங்கிப் போய்விட்டேன்.

நான் பள்ளிக்குப் போக ஆரம்பித்த போதுதான் உண்மையில் என் அப்பாவை அறிந்துகொண்டேன். அவருக்குப் படிக்கவோ எழுதவோ தெரியாதபோதும் தனது குழந்தைகள் அனைவருக்கும் கல்விகற்பித்தார். அவரால் முடிந்த ஒரே விஷயம் தனது பெயர் தங்ரிகுலீயை லத்தீன் எழுத்துகளில் எழுதத் தெரிந்ததுதான். அவர் எழுதி முடித்துவிட்டிருந்த போது, அவரது நாக்கு எப்போதுமே நீலமாக இருந்தது. அழியாத மை கொண்டு எழுதினார். ஒவ்வொரு எழுத்தையும் எழுதும் முன்னால் தனது நாக்கு நுனியில் எப்போதுமே பேனாவை லேசாகத் தட்டிக்கொள்வார்.

தனது தொண்டையை சரி செய்தவாறு அப்பா வீட்டைச் சுற்றி வந்த போது, அல்லது உட்கார்ந்து தனது மென்மயிர்த் தொப்பியைக் கழற்றி நன்கு மழித்த தலையை தடவிய போது அவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்பது எனக்குத் தெரியும். துணிச்சலாக அவரை நெருங்கி எதை வேண்டுமானாலும் நான் கேட்க முடியும். ஆனால் அவர் பார்வையைத் தவிர்த்து கைகளை ஒரு சேரத் தேய்த்துக் கொண்டிருந்தால் அதன் பொருள் அவர் நிலைகுலைந்தோ கோபமாகவோ இருந்தார் என்பதாகும். அந்த நேரங்களில் அவரது பார்வையில் படாமல் இருப்பதே நல்லது.

உண்மையைச் சொன்னால், பல ஆண்டுகளில் நான் படிப்படியாக இதைத்தான் கற்றுக்கொண்டேன்.

'சைத்தானின் சக்கரங்கள்', மோட்டார் சைக்கிள்கள், கார்கள், லாரிகள், டிராக்டர்கள், புதிய வேகங்கள், புதிய வழிகள், புதிய எதிர்பார்ப்புகள். மிக நல்ல பந்தயக் குதிரைகளைப் பற்றி கனவு காண்பதை நிறுத்திவிட்டு, எந்திரங்களைப் பற்றிக் கனவு காணத் தொடங்கிவிட்டோம்.

நாங்கள் மூவரும்—யாஸ்லி, எனது மூத்த சகோதரன், நான்—நான்கு சக்கரவண்டி ஒன்றைக் கட்டினோம். அதற்கு 'ஸ்டீயரிங்-வீல்' கூட இருந்தது. எங்களது விநோதமான வண்டியை உயரமான குன்றின் உச்சிக்குக் கொண்டு சென்று கீழே சந்தை வரை ஓட்டி வருவோம். அதைவிடச் சிறந்த இடத்தை எங்களால் கற்பனை செய்ய முடியவில்லை.

சந்தையில் மக்கள் கூட்டத்தைக் கண்டோம்; அங்கே எங்களது பெற்றோர்கள் எங்களுக்காக இனிப்புகளும் புதிய ஆடைகளும் வாங்கினார்கள்.

எங்களது வண்டி எங்கள் நண்பர்கள் எல்லாரையும் பொறாமை கொள்ளச் செய்தது. கேட்டவர்கள் எல்லாரையும் அதில் ஏற்றிக் கொண்டோம். ஆனால் ஒருமுறை நான்கு வயது ஸாரி குன்றுவரை கஷ்டப்பட்டு வந்து சவாரி கேட்டான். நான் மறுத்து விட்டேன்: கீழே செல்வது என்பது முற்றிலும் ஆபத்து இல்லாதது இல்லை—வண்டி குடைசாயக்கூடும், யாருக்கேனும் கையோ காலோ உடைந்து போகலாம்.

"உன்னால் பயணம் செய்ய முடியாது" என்றேன். "பெரிய ஆளாகும் வரை பொறுத்திரு."

அன்று மாலை ஸாரியினுடைய அப்பா எங்களை வந்து பார்த்தார்.

"உங்களுடைய கயூம் சிறிய குழந்தைகளை முரட்டுத்தனமாக நடத்துகிறான்" என்று என் அப்பாவிடம் கூறினார். "அவன் ஸாரியை அடித்தான். பையனோ இன்னமும் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறான்."

உண்மையில் என்ன நடந்தது என்பதை நான் விளக்க முயன்றேன், ஆனால் என் அப்பா அதைக் கேட்கவில்லை. அந்த இடத்திலேயே அப்பா எனக்குச் சரியான சாட்டையடி கொடுத்தார். ஏனெனில் குற்றவாளி முறையாக தண்டிக்கப்பட்டான் என்பதில் ஸாரியின் அப்பாவுக்கு சந்தேகம் வரக்கூடாது என்பதால்.

ஸாரியின் அப்பா கோபம் தணிந்து புறப்படும் சமயம் என் பக்கம் திரும்பிச் சொன்னார்:

"இது போலத் திரும்பவும் நீ முறைகேடாக நடப்பதாக நான் கேள்விப்பட்டால், உன் முதுகுத் தோலை உரித்துவிடுவேன்!"

எனக்கு ஏற்கெனவே எட்டு வயது ஆகிக் கொண்டிருந்தது. ஸ்டெப்பி நரிக்கோ குள்ளநரிக்கோ நான் பயந்தது இல்லை. ஆனால் அன்று சூது நிறைந்த ஆட்களுக்கு—பொய் சொல்லும் ஆட்களுக்கு—பயப்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.

இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால் இந்தக் கசப்பான பாடமானது மகிழ்ச்சியற்றதாகத் தொடர்ந்தது.

கால்நடைப் பட்டியை அடுத்து மேடுபள்ளமற்ற காலியிடம் இருந்தது. அங்கே பள்ளி முடிந்த பிறகு எல்லாக் குழந்தைகளும் 'பேஸ்பாலு'க்கு ஒப்பான 'லப்தா' ஆடுவார்கள். எங்களுடைய பந்து கந்தல்களால் ஆனது. எனவே லேசாகத்தான் சென்றது. ஆனால் ஒவ்வொருவரும் இந்த விரைவான ஆட்டத்தை விரும்பினார்கள்.

நான் சிறுவனாக இருந்ததாலும் மிகவும் அநுபவம் வாய்ந்த பெரிய பையன்களுக்குச் சுலபமாக இரையானதாலும் அரிதாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஒருமுறை யாரோ ஒருவன் மஞ்சள் நிற ரப்பர் பந்து ஒன்றை நகரத்திலிருந்து கொண்டுவந்தான். அதைத் தரையில் அடிக்கவுமே தலைக்கு மேலாக எழும்பியது. அன்றும் நான் வழக்கம் போல ஆடாமல் வெளியே இருந்தேன். அருகே நின்று பெரிய பையன்கள் விளையாடுவதை பொறாமையோடு கவனித்தேன். திடீரென்று யாரோ ஒருவன் பந்தை பலமாக அடித்தான். அது எனது பாதத்தில் சரியாக விழுந்தது. அது

திரும்பத் துள்ளியபோது பிடித்துக்கொண்டேன். அந்த அதிசயப் பந்து எனது கைகளில் இருக்க, இதில் வைத்த கண் வாங்காமல் இருந்தேன்.

''அதை இங்கே எறி!'' மற்றவர்கள் கத்தினார்கள்.

''நீங்கள் என்னை விளையாட விடவில்லை என்றால் பந்தை நான் திரும்பத் தரமாட்டேன்!'' என்று கத்தினேன்.

''உன் கால்கள் பெரிதாகும் போது நீ விளையாட முடியும்'' என்று பதிலளித்தனர். ''எங்களிடம் பந்தைக் கொடு.''

கையை வேகமாக ஆட்டி கால்நடைப் பட்டிக்குள்ளாக வேலிக்கு மேலாகப் பந்தை வீசி எறிந்தேன்.

பந்துக்குச் சொந்தக்காரன் என்னிடம் ஓடிவந்து எனக்குச் சரியான அறை கொடுத்தான். திடீரென்று ஸாரியுடன் ஏற்பட்ட நிகழ்ச்சி எனது நினைவுக்கு வரவே, என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக வீட்டுக்கு ஓடினேன்.

''அப்பா!'' என்று அழுது கண்ணீர் விட்டேன். ''பையன்களில் ஒருவன் என்னை அடித்துவிட்டான். அவன் என்னைவிடப் பெரியவன். நாம் போய் அவனுக்குச் சரியாகக் கொடுக்க வேண்டும்!''

தனது மகனை அழவிட்ட அந்தக் குற்றவாளியைத் தண்டிக்க விரைந்து போவார் என்று நினைத்தேன், ஆனால் அப்பாவோ அங்கேயே அமைதியாக உட்கார்ந்து தனது தேநீரைப் பருகிக் கொண்டிருந்தார், நான் சொன்னதைக் கேளாதவர் போல நடித்துக்கொண்டு.

''அப்பா!'' நான் அலறினேன். ''அவர்கள் என்னை அடித்துவிட்டார்கள்!''

''நீ அடிபடாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினால், உன் வயதுப் பையன்களுடன் விளையாடு, பெரிய பையன்களிடத்தில் குறுக்கிடாதே.'' இந்த வார்த்தைகளுடன் என் பக்கம் முழுமையாக முதுகைத் திருப்பிக்கொண்டார்.

சற்று நேரம் அங்கேயே நின்ற நான் பிறகு புறப்பட்டுச் சென்றேன்.

## கழுத்து இல்லாத ஒட்டகம்

மேய்ச்சல் நிலத்திலிருந்து அப்போது தான் என் அப்பா மந்தையை வீட்டுக்குத் திரும்ப ஓட்டி வந்திருந்தார். வழக்கம் போல, அம்மா அவருக்கு ஒரு குவளைத் தேநீரும் சுரெக்கும்—தட்டையான ரொட்டி—கொண்டுவந்தாள். தேநீரை விழுங்கிய பிறகு மிகுந்த களைப்புடன் எங்கள் எல்லாரையும் உற்று நோக்கினார்.

''மகனே,'' என்று எனது மூத்த சகோதரனிடம் சொன்னார், ''கொம்பில்லாத பசு இன்னமும் புதர்க்காட்டில் இருக்கிறது. அது படுசேற்றில் மாட்டிக்கொண்டது. அதை வெளியே இழுக்க நான் இரண்டு மணி நேரமாக முயன்றேன். நீயும் கூட வந்து உதவி செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.''

அவர்கள் புறப்படத் தயாராக இருந்த போது, கிராமப் பெரியவர்களில் ஒருவர், சாம்பல் நிறத்தாடி கொண்ட கிழவர், எங்களைப் பார்க்க வந்தார்.

தேநீருக்குத் தனது விருந்தினரை அழைப்பதைத் தவிர அப்பாவுக்கு வேறு வழியில்லை. அவர்கள் விரிப்பின் மேல் அமர்ந்தார்கள். கிழவரோ மரியாதைமிக்க, அவசரமில்லாத உரையாடலைத் தொடங்கினார்.

“அல்லாவினுடைய கருணைக்காக அவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். நமக்கு எந்த வியாதியும் வர வேண்டாம் என்று வேண்டிக் கொள்வோம். தீய கண், கெட்ட நாக்கு, தீய ஆவிகள், பூதகணங்கள் இவற்றினின்றும் அல்லா நம்மைக் காப்பாற்றட்டும். சமீபத்தில் பலர் தீய ஆவிகளால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.”

“யார் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்?!” என்று எனது மூத்த சகோதரன் குறுக்கிட்டுக் கேட்டான்: பசு காப்பாற்றப்பட்டாக வேண்டும், நமது விருந்தினர், கிராமப் பெரியவராக இருந்தாலும், வாயாடி என்ற கீர்த்தியை எப்போதோ பெற்றுவிட்டார்.

கிழவர் தனது உதடுகளை மென்றார், இளைஞருடைய மதிப்புக் குறைவினால் அமைதி குலைந்து போனார். தனது மூக்கை உறிஞ்சினார், ஒரு வாய் தேநீர் பருகினார், கொஞ்சம் புகையிலையைத் தனது நாக்கிற்குக் கீழாக வைத்தார், அதன் பிறகே அவர் பதிலளித்தார்:

“மரியாதைக்குரிய ஸாரியின் மகன் நெருப்பைத் தின்னும் சைத்தானுடைய வண்டி வைக்கப்பட்டுள்ள சைத்தானுடைய கொட்டகைக்கு அருகே செல்லும் போது கழுத்து இல்லாத ஒட்டகம் ஒன்றைப் பார்த்தான். துணிச்சலான இளைஞன் நடுங்கிப் போய் நோய்வாய்ப்பட்டு விட்டான். யாராக இருந்தாலும் இப்படித்தான் நடக்கும்.”

“அதிகாலையிலும் பின்னிரவிலும் கொட்டகை வழியாக நான் செல்கிறேன், ஆனால் அதுபோல கழுத்து இல்லாத ஒட்டகத்தை நான் கவனிக்கவே இல்லை” என்று என் அப்பா சொன்னார்.

அவரும் கூட பொறுமையிழக்கத் தொடங்கினார், ஆனால் விருந்தோம்பலின் விதிகளை அவரால் மீற முடியவில்லை. அதே வேளை கிராமப் பெரியவரோ தனக்கு விருப்பமான விஷயத்தில் அக்கறை காட்டிக் கொண்டிருந்தார்.

“தங்ரிகுலீ அவர்களே,” என்றார் தன் தாடியைத் தடவியபடி, “நீங்கள் ஒட்டகத்தைப் பார்க்கவில்லை என்பதில் வியப்படைய ஏதுமில்லை. பூதகணங்கள் வெறுமனே தங்களை யாருக்கும் காட்டிக்கொள்ளாது. இளைஞனாக இருந்த போது அவற்றை நான் அடிக்கடி பார்ப்பது வழக்கம். ஒருமுறை பூதகணத்தை பெண்ணின் வடிவத்தில் வெள்ளைத் தலைமுடியைச் சீவிக் கொண்டிருக்கக் கண்டேன். அமுதாரியாப் புதர்க்காடுகளில் அந்தப் பூதகணத்தைக் கண்டேன். மற்றொரு முறை ஓநாய் பூதகணம் ஒன்றைப் பார்த்தேன்...”

“ஆனால் அது உண்மையான ஓநாயாக இருக்கலாம்!” என்று சொன்னேன். “பூதகணம் என்பது கட்டுக்கதை என்று பள்ளியில் எங்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள்.”

“மகனே, பெரியவர்கள் பேசும் போது குறுக்கிடக் கூடாது!” என்று என் அப்பா கண்டிப்புடன் அமைதிப்படுத்தினார்.

“உன் அப்பா சொல்வது முற்றிலும் சரி, தம்பி,” பெரியவர் அறிவுரை கூறத் தொடங்கினார். “ஒன்றுக்கும் லாயக்கில்லாத, பண்பாடு பற்றி எதுவும் அறியாத பண்புகெட்ட அநாகரிகனே மூத்தவரின் வார்த்தைகளைச் சந்தேகிப்பான். நீ அவ்வளவு

துணிச்சல் உள்ளவனாக இருந்தால், சைத்தானுடைய கொட்டகைக்கு ஓர் இரவு போ. ஆனால் உனக்குத் துணிச்சல் கிடையாது என்பது எனக்குத் தெரியும். துணிவு கொள்ள நீ இன்னும் மிகவும் சிறுவனாக இருக்கிறாய். சூடான சுரெக் தவிர்த்து என்ன பார்த்திருக்கிறாய்?''

தாயாருடைய முந்தானையோடு நான் இன்னமும் கட்டப்பட்ட சிறுவன் எனச் சுட்டிக்காட்டி கிராமப் பெரியவர் என்னை வெட்டிவிடப் பார்த்தார், ஏனெனில் சுரெக் சுடுவதும் அடுப்பிலிருந்து அதை எடுப்பதும் பெண்களுக்குப் பொருத்தமான வேலை என்று கருதப்பட்டது.

''தீய ஆவி விரைந்து பெருகியது ஏனெனில் தீய ஆற்றில் மக்கள் மணல்வாரிக் கொண்டு இருக்கிறார்கள்.''

''நீங்கள் கால்வாயைக் குறிப்பிடுகிறீர்களா?'' என்று என் மூத்த சகோதரன் மிகுந்த கோபத்தோடு கேட்டான்.

''ஆறுகள் ஆண்டவனால் உருவாக்கப்பட்டன!'' முகஞ்சுழித்தவாறு கிராமப் பெரியவர் சொன்னார். ''அல்லாவினுடைய பணியில் குறுக்கிட மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.''

கிழவிகளின் இத்தகைய கட்டுக்கதைகளுக்கும் உரைகளுக்கும் பிறகே கிராமப் பெரியவர் தனது வருகையின் உண்மையான காரணத்தைச் சொன்னார். அவரது பாதி டஜன் பசுக்களை மந்தைக்கு எடுத்துக் கொள்ளுமாறு அப்பாவிடம் கேட்டார். கிழவர் நல்ல பணக்காரர், புதிய வாழ்க்கைக்கு அஞ்சுகிறார்.

## தோத்திப் பாட்டியின் கதைகள்

அப்பாவும் அண்ணனும் பசுவைக் காப்பாற்றச் சென்றிருந்த போது தோத்திப் பாட்டி எங்களைப் பார்க்க வந்தாள்.

விரிப்பின் மீது அமர்ந்த அவள் சீக்கிரமே நூற்புக் கதிரையும் கொஞ்சம் நாரையும் வெளியே எடுத்து நூற்கத் தொடங்கினாள்.

''முதலில் கொஞ்சம் தேநீர் அருந்துங்கள்'' என்றாள் அம்மா. ''சூப்பு சீக்கிரமே தயாராகிவிடும்.''

அந்நேரத்தில் அப்பாவினுடைய கடைசிப் பிடியில் கிடைத்த காட்டுக் கோழிகளைக் கொண்டு அம்மா தயாரித்த சூப்பின் மணம் கமழ்ந்தது. அம்மா அடுப்படிக்குச் சென்றிருந்த போது, குழந்தைகள் எல்லாரும் தோத்திப் பாட்டியைச் சுற்றிக் கூடினோம். நாங்கள் எதற்காகக் காத்திருந்தோம் என்பது அவளுக்குத் தெரியும். தனது நூற்புக்கதிரை பக்கத்தில் வைத்துவிட்டு, ஒருவாய் தேநீர் பருகிய அவள் கதையைத் தொடங்கினாள். முதலில் அவள் பெருந்தீனிக்காரனான அரசன் ஒருவனைக் கொன்று, தானே அரசனாகிய ஓர் இளைஞனுக்கு உதவிய கபட நரியைப் பற்றிய கதையைச் சொன்னாள். பிறகு லுக்மானைப் பற்றி எங்களுக்குச் சொன்னாள்.

''லுக்மானுக்கு மிகமிக வயதான தந்தை இருந்தார்'' என்று தனது மெல்லிய குரலில் தோத்திப் பாட்டி தொடங்கிய போது நாங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு



உட்கார்ந்திருந்தோம். ''கடைசியில் அவருக்கு அதிக வயதாகவே, ஸ்டெப்பி இன மக்களின் பண்டைய விதிகளின் படி, தளர்ந்து போன கிழவரை அவரது மகன் மலையின் மறுபுறத்திற்கு எடுத்துச் சென்று சாவதற்காக அங்கே விட்டுவிட்டு வர வேண்டியிருந்தது. ஒருநாள் லுக்மான் நிறைந்த சாக்குடன் மலைக்கு அப்பால் புறப்பட்டுச் சென்றதையும், பின்னர் அவன் திரும்பி வந்த போது சாக்கு காலியாக இருந்ததையும் ஒவ்வொருவரும் கண்டனர். 'தன் அப்பாவை அவன் தூக்கிப் போய்விட்டான்' என்று மக்கள் நினைத்தனர், பிறகு அது பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை. ஏனெனில் இந்தக் கொடுமையான பழக்கம் எல்லாருக்கும் சட்டமாக இருந்தது. நோயாளியைக் குணப்படுத்தும் திறமையை கிழவர் லுக்மான் பெற்றிருந்தார். இளைய லுக்மானுக்கும் சரியான எல்லா மூலிகைகளும் தெரியும் என்பதையும் எந்த வியாதிக்கும் பரிகாரம் தெரியும் என்பதையும் விரைவிலேயே மக்கள் கவனிக்கத் தொடங்கினார்கள். குணப்படுத்துபவன் என்ற முறையில் தனது திறமைக்காக ஸ்டெப்பி முழுவதிலும் லுக்மான் புகழ் பெற்றிருந்தான். ஒருமுறை அவனிடம் கேட்டார்கள்:

'''நீயோ இன்னமும் இளைஞனாக இருக்கிறாய்; எல்லா மூலிகைகளைப் பற்றியும் குணப்படுத்தும் மருந்து பற்றியும் எங்ஙனம் நீ அறிந்து வைத்திருக்கிறாய்?' 'என் அப்பாவைப் பற்றி நீங்கள் மறந்து விட்டீர்களா?' இளம் லுக்மான் கேட்டான். 'ஒவ்வொரு வியாதியையும் எப்படிக் குணப்படுத்துவது என்று என் அப்பாவுக்குத் தெரியும். சாவதற்காக மலையின் மறுபுறத்திற்கு என் அப்பாவை நான் எடுத்துச் செல்லவில்லை. பழைய செம்மறியாட்டுத் தோல்கள் கொண்ட சாக்கை நான் எடுத்துக்கொண்டேன்! தனது எல்லா ரகசியங்களையும் என் அப்பா எனக்குச் சொன்னார்.'

''மக்கள் ஆலோசிக்கத் தொடங்கி, அவனது தளர்ந்து போன கிழத் தந்தையுடன் லுக்மானை நாட்டை விட்டுத் துரத்துவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய முயன்றார்கள், ஆனால் வியாதிகளைக் குணப்படுத்த வல்ல மருத்துவன் இல்லாமல் இருக்க அஞ்சினார்கள்.

''ஆகவே இனத்தின் தலைவனாக லுக்மான் ஆனான். மக்கள் தங்களைப் பற்றி வெட்கப்பட்டார்கள், அன்றைய நாளிலிருந்து முதியவர்களை அவர்களது இறப்புநாள் வரையில் போற்றி நன்கு பார்த்துக்கொண்டார்கள்.''

தோத்திப் பாட்டியின் கதைகளைக் கேட்க விரும்பினேன், ஆனால் இந்த முறை பொறுமையில்லாதபடி கேட்டேன்.

''பாட்டி,'' நான் கேட்டேன், ''நீ பூதகணத்தைப் பார்த்திருக்கிறாயா?''

''அல்லா கருணை காட்டினார்!'' என்று பாட்டி பதிலளித்தாள்.

''ஆனால் தோத்திப் பாட்டி, உனக்கு எதாவது மந்திர வித்தை தெரியுமா?'' என்று விடாது கேட்டேன்.

''துருக்மேனிய மக்களாகிய நமக்கு ஒருவேளை நூறு அல்லது இருநூறு பெயர்கள் இருக்கலாம், அதே வேளை பாம்புகளுக்கும் ஆயிரம் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும்'' என்று பாட்டி சொன்னாள். ''ஒரு பாம்பு தன் பெயரை யாருக்கும் வெளிப்படுத்தாது. ஒரு பாம்பின் பெயரை நீ அறிந்து கொண்டால், அது உனக்குத் தலை வணங்கி உனது நம்பிக்கைக்குரிய வேலைக்காரனாக மாறும்.''

நான் மேலும் கேட்டிருப்பேன், ஆனால் அந்த நேரத்தில் ஒரு பெரிய சூப்புச் சட்டியைத் தூக்கிக் கொண்டு அம்மா உள்ளே வந்தாள். நாங்கள் உண்ணத் தொடங்கினோம், ஆனால் தோத்திப் பாட்டி இரண்டு மூன்று கரண்டிகள் எடுத்துச் சாப்பிட்டுவிட்டு தனது சுரெக்கை மிகவும் மெதுவாக அசைபோடத் தொடங்கினாள்.

''கொஞ்சம் இறைச்சி எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அம்மா. ''இது காட்டுக் கோழி—மிகவும் ருசியானது.''

''நன்றி'' என்றாள் பாட்டி, ஆனால் இன்னமும் அவள் இறைச்சியைத் தொட வில்லை.

அம்மா கொஞ்சம் இறைச்சி எடுத்து பாட்டியினுடைய தட்டில் தானே வைக்க, பாட்டி தின்னத் தொடங்கினாள். தோத்திப் பாட்டிக்கு அதிக வயதாகிவிட்டது. அவளோ மிகமிகப் பழமையான நடை முறைகளைப் பின்பற்றினாள்.

## பாம்பு, ராட்சசப் பல்லி, எங்களது மந்தை

ஒவ்வொரு நாளும் யாஸ்லியும் நானும் செம்மறியாடுகளுக்கு தீவனம் அறுப்பதற்காக அரிவாள்களுடன் வெளியே சென்றோம். ஒருமுறை நல்ல, மிகவும் சத்துள்ள புல்லாகத் தேடுகிற எங்கள் முயற்சியில் தொலைதூரத்து முலாம்பழ வயல்களுக்குச் சென்றோம்.

'சாத்தானின் சக்கரத்'தை வைத்திருந்த யாஸ்லியின் மாமா ஜாகுல் இந்த வயல்களைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பில் இருந்தார்.

ஏதோ காரணத்திற்காக மறைவுக்கு முன்னால் வெளியே உட்கார்ந்திருந்தார். எனினும் ஏற்கெனவே சூரியன் கொளுத்திக் கொண்டிருந்தது.

''அமைதியாக!'' என்று நாங்கள் நெருங்கி எங்களது சாக்குகளைக் கீழே போட்ட போது கிசுகிசுத்தார். ''மறைவில் பாம்பு இருக்கிறது. யாரிடமிருந்தோ தப்ப முயல்வது போலக் காணப்படுகிறது. இங்கே அமைதியாக உட்காருங்கள், என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.''

ஜாகுல் சொன்னது சரி. ஒரு ராட்சசப் பல்லி மறைவுக்குள்ளாக பயங்கரமாகச் சீறியபடி விரைந்து நுழைந்தது. பாம்பு தனது வாலை அடித்து நகர முயன்றது, ஆனால் ராட்சசப் பல்லியோ அதைப் பற்றிப் பிடித்து அப்பால் இழுக்கத் தொடங்கியது. நாங்கள் அமைதியாகப் பின்தொடர்ந்தோம். பாம்பினுடைய முதுகில் ராட்சசப் பல்லி தனது பற்களைப் பதித்து அதைக் கொன்றது. அப்போது அது எங்களைக் கவனித்தது. அப்பால் ஓட முயன்றது. ஆனால் நாங்கள் அதைப் பிடித்து ஒரு கயிற்றால் கட்டி, கன்றுக்குட்டியை போல முளையில் கட்டினோம். பிறகு கொஞ்சம் மாமிசத்தைத் தூக்கி எறிந்து அது விழுங்குவதைக் கவனித்தோம்.

கூட்டுப்பண்ணை அலுவலகத்திற்கு ஜாகுல் போய்விடவே, மறைவின் நிழலில் நாங்கள் அமர்ந்து பழுத்த முலாம் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டும் ராட்சசப் பல்லியைக் கவனித்துக்கொண்டும் இருந்தோம். தனது கட்டுத் தளையிலிருந்து தன்னை

விடுவித்துக் கொள்ள எப்படி முயல்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று மற்றொரு ராட்சசப் பல்லி மணல் மேட்டின் பின்னிருந்து வெளியே வந்தது. தளைப்பட்டிருந்த ராட்சசப் பல்லியைப் பக்கவாட்டில் கடித்து, பிறகு துள்ளிப் பாய்ந்து சென்றது.

எங்களது ராட்சசப் பல்லிக்கு உதவ விரைந்தோம்; அதனது காயத்திலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அதை நாங்கள் வீட்டிற்குத் தூக்கிச் சென்று, காயத்தில் அயோடின் வைத்து, ஒரு பெட்டிக்குக் கீழாக வைத்தோம். நாங்களும் பெரியவர்களும் நாளொன்றுக்குப் பத்து முறை அதற்கு உணவளித்தோம். சீக்கிரமே ராட்சசப் பல்லி நலமடைந்தது. இப்போது அது எங்களது விளையாட்டுத் தோழனாக இருக்கும் என்று நினைத்தோம். ஆனால் நாங்கள் பெட்டியை உயர்த்திய உடனேயே ராட்சசப் பல்லி புற்களுக்குள்ளாக நழுவிப்போனது. எங்கள் பார்வையினின்றும் மறைவதற்கு முன்னால் தனது பற்களைக் கடுமையான முறையில் எங்கள் பக்கம் கடித்துக் காட்டிவிட்டுச் சென்றது.

* * *

யாஸ்லிக்கும் எனக்கும் சரியான வேலையை எங்கள் பெற்றோர்கள் கண்டு பிடித்தார்கள். இப்போது நாங்களும் கூட எனது தந்தையைப் போல மேய்ப்பர்கள் தாம். உண்மை, எங்களுடைய கால்நடை—வெள்ளாடும் செம்மறியாடும்—அளவில் கொஞ்சம் சிறியதுதான். குறைவாகத்தான் இருந்தது—மொத்தத்தில் பதினேழு தலைகளே. பள்ளி விட்ட பிறகு என் அப்பா போகும் அதே பாதை நெடுகிலும் எங்களது மந்தையை ஓட்டிச் செல்வோம். உண்மையான மேய்ப்பர்களைப் போல, நாங்கள் எப்போதுமே கொஞ்சம் சுரெக்கும் முலாம் பழமும் உணவாக எடுத்துச் சென்றோம். எங்களுக்குச் சாதனங்கள் கூட இருந்தன: யாஸ்லி திசை காட்டும் கருவி வைத்திருந்தான், என்னிடத்தில் பறவை செதுக்கப்பட்ட கைப்பிடியுடன் கூடிய பேனாக்கத்தி இருந்தது. எங்களிடம் மேய்ப்பனுடைய வளைதடிகளும் இருந்தன.

எங்களுடைய மந்தையை நதிக்கரை நெடுகிலும் உள்ள புதர்க்காட்டிற்குள்ளாக ஓட்டிச் செல்வோம். அதிமதுரச் செடிப் புதர்களுக்குக் கீழாக செழிப்பான புற்கள் வளர்கின்றன.

நதி எங்களுடைய நண்பன்; எங்களுடைய செம்மறிகளாலும் வெள்ளாடுகளாலும் அதை நீந்திக் கடக்க முடியாது, அதே நேரம் பின்னுக்குத் தங்கிவிட்டவைகளைத் தேடுவதில் நீண்ட நேரத்தைச் செலவிட்டோம். ஒருமுறை சுர்மினெக் என்ற செம்மறிக்கடா இல்லாமல் நாங்கள் திரும்பினோம். பக்கத்து இடங்களில் அதைத் தேடுகின்ற எங்களது முயற்சி தோல்வியடைந்தது. இரவு நெருங்கவே புதர்க் காட்டிற்குள்ளாக அதைத் தேடிப் போகப் பயந்தோம். இருட்டில் மந்தையை ஓட்டி வந்தோம். தோளோடு தோள் சேர்ந்து நாங்கள் நடந்தாலும் வேண்டுமென்றே உரத்த குரலில் பேசிக்கொண்டோம். இந்த முறையில் எந்தக் கொடிய விலங்கையும் அச்சுறுத்தி ஓட்டலாம் என்று நம்பினோம்.

மறுநாள் காலை பள்ளிக்குப் போகாமல், கழுதை மீது ஏறிக்கொண்டு காணாமற் போன செம்மறிக்கடாவைத் தேடிப் புறப்பட்டேன். அடர்ந்த புதர்களில் தனது பின்

ணங்கால்கள் சிக்குண்டு சுர்மினெக் கிடந்தது. அதை நான் கடைசியாகக் கண்டு பிடித்த போது, தலை கீழே கிடக்க, மூச்சு விட முடியாதவாறு படுத்துக் கிடந்தது. புதரைச் சுற்றியிருந்த பகுதியானது குள்ளநரித் தடங்களால் நிறைந்து கிடந்தது. சிக்கலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவாறு, சுர்மினெக் தீவிரமாகப் போராடி இருக்க வேண்டும், கோழைத்தனமான குள்ளநரிகள் அதைத் தாக்க பயந்து போயிருக்க வேண்டும் என்பது போலக் காணப்பட்டது. தண்டுகளை வேர்களில் வெட்டினேன், பின்னர் தீவனப் புல் வயலுக்கு அதை ஓட்டிவந்தேன். அதை நான்



செய்ய வேண்டியது இல்லை என்பது எனக்குத் தெரியும், ஆனால் அத்தகைய பயங்கரமான இரவில் வாழ்ந்த பிறகு சுர்மினெக்கிற்கு ஏதோ ஒருவித வெகுமதி தேவை என்று நினைத்தேன்.

## காட்டுப்பன்றி

எங்களுக்கு முன்னால் தரையில் ஒரு துணியைப் பரப்பி வைத்துக் கொண்டு, முலாம் பழத்தைச் சாப்பிட்டவாறு சம்மணம் போட்டபடி தரையில் உட்கார்ந்திருந்தோம். எங்களுடைய மந்தை பக்கத்தில் இளந்தளிர்களை நிம்மதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. ஓர் இலேசான இலையுதிர் காலத் தூறல், எங்கள் பகுதிக்கு அபூர்வமான ஒன்று, விழுவது அப்போதுதான் நின்றது. பூமியானது மீண்டும் பச்சை நிறமாக, காற்றில் வசந்தகால மணம் வீசியது. யாஸ்லியும் நானும் அவசரமின்றி, எங்களது வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்தவாறு, பெரியவர்களைப் போல, வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கோ புதரிலிருந்து சுடுகின்ற ஓசை வந்தது.

''ஒருகால் உன் அப்பாதான்!'' என்றான் யாஸ்லி.

''இருக்கலாம்.''

''உங்கள் குடும்பத்தில் இத்தகைய ஒரு நல்ல வேட்டைக்காரர் இருப்பது உனக்கு அதிருஷ்டம்.''

''சரிதான்!'' நான் ஒப்புக் கொண்டேன். ''நாங்கள் இறைச்சி எதுவும் வாங்க வேண்டியது இல்லை. ஒரு செம்மறியை வெட்ட வேண்டியதும் இல்லை.''

''உன் அப்பாவால் பறவையின் கண்ணைப் பார்த்துச் சரியாகச் சுட முடியும் என்று சொல்கிறார்கள். ஒரே குண்டில் அவரால் இரண்டு அல்லது மூன்று காட்டுக் கோழிகளை வீழ்த்த முடியுமாமே. உண்மையா இது?''

''எனக்குத் தெரியாது. வேட்டையைப் பற்றி அப்பா என்னிடம் அதிகம் பேசமாட்டார். ஆனால் ஒருமுறை உன் அப்பாவிடம் ஒரே குண்டில் இரண்டு பறவைகளைக் கொல்லக் கூடியவனே உண்மையான வேடன் என்று சொல்லக் கேட்டேன்.''

''அவரது துப்பாக்கியில் எத்தனை தோட்டாக்கள் பிடிக்கும்?''

''அப்பாவினுடையது ஒற்றைக்குழல் துப்பாக்கி, ஆக அது ஒரு தோட்டாதான் பிடிக்கும். அவருக்கு இரட்டைக்குழல் துப்பாக்கி தேவைப்பட்டால், கட்டாயம் ஒன்று வாங்குவார்.''

திடீரென்று யாஸ்லி வீறிட்டான்: ஓர் உரத்த, முரிகின்ற ஓசை எங்களுக்கு அருகில் இருந்த புதர்களிலிருந்து வந்தது.

நாங்கள் குதித்து எழுந்தோம். எங்களுடைய வெள்ளாடுகளும் செம்மறிகளும் கண நேரம் நிறுத்தி திரும்பவும் இளந்தளிர்களை மேயத் தொடங்கின. ஆனால் நான் இன்னமும் நடுங்கிப் போய் இருந்தேன்.

''ஒருவேளை ஓநாயாக இருக்கலாம்!''

‘‘எய்!’’ என்று கத்தியவாறு யாஸ்லி, தனது வளைதடியை அசைத்துக் கொண்டு புதர்களை நோக்கி ஓடினான். அடுத்த விநாடியே அவன் திரும்பத் தாவினான். ‘‘கயூம், அங்கே ஏதோ மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது!’’

எனது அச்சத்தை அடக்கிக்கொண்டு, எனது வளைதடியை எடுத்துக் கொண்டு யாஸ்லியை நோக்கி நடந்தேன். அந்நேரத்தில் மிகப்பெரிய காட்டுப்பன்றி ஒன்று புதர்களை விட்டு வெளியேறி வந்தது. அது எங்களைக் கடந்து ஓடி நாணல்களுக் குள்ளாகச் சென்றது. பிறகு அமைதி நிலவியது. அடுத்த நொடியே என் அப்பாவினுடைய குரலைக் கேட்டேன்:

‘‘ஜெக்! ஜெக்!’’

வேட்டைநாயும் புதர்களை விட்டு வெளியே ஓடிவந்து நாணல்களுக்குள்ளாக ஓடியது.

‘‘அப்-பா!’’ கத்தினேன்.

‘‘கயூம்?!’’ புதர்கள் மீண்டும் முறிந்தன, அப்பா எங்களை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தார். ‘‘நீங்கள் பத்திரமாக இருக்கிறீர்களா?’’

‘‘நாங்கள் நன்றாக இருக்கிறோம்!’’ என்று வியப்புடன் கூறினோம்.

‘‘காட்டுப்பன்றி எங்கே? அது அடிபட்டது, மிகவும் ஆபத்தானது.’’

ஜெக்குடைய குரைப்பு நாணல்களிலிருந்து ஒலித்தது. தனது துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தவாறு அப்பா நாணல்களை நோக்கிச் சென்றார். துப்பாக்கி வெடிப்பு ஓசையை எதிர்பார்த்து நாங்கள் காத்திருந்தோம். ஆனால் அப்பா சீக்கிரமே திரும்பிவிட்டார், அவரது துப்பாக்கி இப்போது தோளிலேயே கிடந்தது.

‘‘எல்லாம் முடிந்துவிட்டது. காயம் பயங்கரமானது!’’ அப்பா எங்களது தலைகளைத் தடவிக் கொடுத்தார். அவரது கை லேசாக நடுங்கியதை என்னால் உணர முடிந்தது.

‘‘நாங்கள் ஓடிப்போய் வலோஷினை அழைத்து வர வேண்டுமா?’’ எனக் கேட்டேன்.

‘‘போய்க் கூட்டிவாங்க. உங்களது மந்தையை நான் பார்த்துக் கொள்கிறேன்.’’

வலோஷினைக் கூட்டி வருவதற்காக நாங்கள் கிராமத்திற்கு விரைந்தோம். காட்டுப்பன்றி வீட்டுப் பன்றியைப் போன்றது. ஆகவே கிராமத்தில் யாரும் அதன் கறியைச் சுவைத்தது இல்லை. காட்டுப்பன்றி வேட்டைக்கு அப்பா அரிதாகத்தான் சென்றார். ஆனால் ஒருமுறை மிகப்பெரிய பெண் காட்டுப்பன்றியைக் கொன்று பிணத்தை வலோஷினிடம் கொடுத்தார். அவரோ இறைச்சியைச் சுட்டு நகரத்தில் விற்றுவிட்டார். தனது வருமானத்தின் ஒருபாதியைத் துணியில் சுற்றியவாறு கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தார். அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ள அப்பா மறுத்துவிட்டார். வலோஷின் பொட்டலத்தை சூட்டடுப்பின் மீது வைத்துவிட்டுப் போய்விட்டார். இரண்டாவது முறை இறைச்சிக்காகவும் வலோஷின் பணத்தைச் சேர்த்து வைத்திருந்த போதிலும் ஒருவரும் பொட்டலத்தைத் தொடவில்லை.

வரிவசூலிப்பவர்கள் எங்களுடைய வீட்டிற்கு வருகின்ற நாள் வரையும் அந்தப் பணம் அங்கேயே இருந்தது. அப்பா அந்தப் பொட்டலத்தைச் சுட்டிக்காட்டி தேவையான பணத்தை எடுத்துக் கொள்ளும் படி அவர்களிடம் சொன்னார். அந்தப் பணத்தை அப்பா ஒருமுறை கூடத் தொடவில்லை.

# நகரம் செல்லுதல்

ஞாயிற்றுக் கிழமையன்று சூரிய உதயத்திற்கு முன்னமேயே அப்பா என்னை உசுப்பிவிட்டார். கொஞ்சம் பச்சைத் தேநீர் அருந்திய பிறகு நாங்கள் கழுதை மீது ஏறி நகரம் புறப்பட்டோம்.

அது குளிர்காலம். வெப்பமான துருக்மேனியாவில் இப்பருவத்தில் கடுமையான குளிர் இருக்கும். காற்று வீசுகின்ற போது குளிர் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

என் அப்பாவுக்குப் பின்னே நான் சவாரி செய்து கொண்டிருந்தாலும், குளிரினால் என் காதுகளும் கைகளும் சில்லிடத் தொடங்கின. காதுகளை மூட தொப்பியை இழுத்துவிட்டேன், ஆனால் என்னிடத்தில் கையுறைகள் இல்லை. ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையை நெஞ்சுக்கு மேலாக வைத்து வெதுவெதுப்பாக்கிக் கொள்ள வேண்டி இருந்தது.

''அப்பா'' என்று இழுத்தேன், ''சந்தையில் எனக்கு ஏதாவது கையுறை வாங்குங்கள்.''

''சரி. உனக்கு உண்மையாகவே குளிராக இருந்தால், நாம் சற்று தங்கி நெருப்பு மூட்டுவோம்.''

நகரத்தை விரைவில் காண நான் மிகவும் ஆர்வமாக இருந்ததால் சொன்னேன்:

''எனக்குக் குளிரவே இல்லை!''

காலைக்கருக்கல் பரவிக் கொண்டிருந்தது. பூம்பனிகள் காற்றில் சுழன்று கொண்டிருந்தன.

''நாம் சரியாகப் பாதி தூரத்தைக் கடந்துவிட்டோம்'' என்றார் அப்பா. ''காற்றில் பனி வாசனையை நான் எப்போதோ நுகர்ந்துவிட்டேன். பனி பெரிதாக விழுந்தால் சந்தை நடக்காது.''

சற்று முன்னோக்கி ஓர் ஒடுக்கமான குன்று இருந்தது.

''அது அன்னாகுலி தேபேயின் கோட்டை'' என்று அப்பா விளக்கினார்.

அமைதியாக நாங்கள் திரும்பவும் புறப்பட்டோம். ஸ்டெப்பி நிலத்தைக் கடக்கையில் நான் பேசாமல் பொறுமையுடன் இருந்தேன், ஆனால் நாங்கள் கொர்கிக்கு வந்த போது கிழிந்த சாக்கிலிருந்து வரும் தானியத்தைப் போல என்னிடமிருந்து கேள்விகள் பறந்தன.

நகரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கடை இருக்கும் என்றும் நகர வாசிகள் தங்களது சன்னல்களுக்கு அருகே அமர்ந்து பன்களையும் கோதுமை ரொட்டிகளையும் தின்று கொண்டிருப்பார்கள் என்றும் நான் நினைத்தேன்.

''அப்பா,'' அச்சத்தோடு கேட்டேன், ''நகரத்தின் வழியாகத் தங்களது கழுதைகளில் செல்ல மக்களுக்கு அநுமதி உண்டா?''

''ஆமாம்'' அப்பா பதிலளித்தார்.

அது உண்மைதான். இரண்டு சக்கர மாட்டு வண்டிகளும் கழுதைகளும், எங்களது சொந்த கிராமத்தைப் போலவே பெரும்பாலும் ஒற்றை மாடிக் கட்டடங்கள் கொண்ட இந்நகரின் தெருக்களில் சென்று வந்தன.

நீண்ட காது கொண்ட எங்களது கழுதையை நகரின் மறு கோடியில் வசித்த அப்பாவினுடைய நண்பர் ஜோரபாய் வீட்டிற்கு ஓட்டிச் சென்றோம்.

புதிய வீட்டின் அடித்தளத்திற்கு கான்கிரீட் போடுவதில் அவர் முனைப்பாக இருந்தார்.

''ஹும்! இதற்குக் களிமண் பொருந்தி வராது'' என்ற அப்பா சாம்பல் நிறக் கான்கிரீட்டை தனது பாதத்தால் ஓர் அழுத்து அழுத்தினார். ''நமது வாழ்க்கை முன்னேறிக் கொண்டிருக்கிறது. எதையும் செய்வதற்கான வலிமையை நாம் பெற்றிருக்கிறோம்.''

பிறகு நாங்கள் சந்தைக்குச் சென்றோம். அப்பா கொஞ்சம் துப்பாக்கி மருந்தும் காரீயமும் வாங்கினார். எனக்காக ஒரு ஜோடி கையுறையும் ரப்பர் பந்தும் புதிய புத்தகம் ஒன்றும் வாங்கினார். பிறகு நாங்கள் கடை கடையாக ஏறி இறங்கி, கொஞ்சம் கற்கண்டும் பணியாரமும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டோம்.

நான் பார்த்த முதலாவது நகரம் கெர்கிதான்.

## போர்

நிகழ்ச்சிகள் என் நினைவிலே ஆழ்ந்த, இருண்ட குழியைப் போலத் தொடர்ந்தன. அடுத்து வந்தது போர்.

முதலாவது நாளை இன்னமும் என்னால் தெளிவாக நினைவுகூர முடியும்.

வயலுக்கு நீர் விடுவதற்காக அதிகாலையில் பாசன வாய்க்காலுக்குச் சென்றேன். பிறகு பட்டுப் பூச்சிகளுக்காகக் கொஞ்சம் முசுக்கட்டைச் செடிகள் வெட்டினேன். எங்கள் கிராமத்தில் மக்கள் பட்டுப்பூச்சி வளர்த்தார்கள்.

எனது தலையில் சுமையுடன் நான் வீட்டை நெருங்கிய சமயம் யாஸ்லியைச் சந்தித்தேன்.

''கயூம்! போர்!'' என்று கத்தினான்.

''நல்லது தான்'' என்றேன். ''நமது செஞ்சேனை ஆட்கள் எல்லாரும் பதக்கங்கள் பெறுவார்கள்.''

யாஸ்லி தனது பாதத்தை ஓங்கி மிதித்தான்:

''முட்டாள்! இப்போது விஷயம் எல்லாருக்குமே பயங்கரமானது! ஏழு முதல் எழுபது வயது வரையிலான ஒவ்வொருவரும் இராணுவச் சேவைக்கு அழைக்கப்படுவார்கள்.''

''யார் சொன்னது?''

''முல்லா. வீட்டுக்குப் போனதும் நீயே தெரிந்து கொள்வாய்.''

யாஸ்லி ஏன் அந்தளவுக்கு நிலைகுலைந்து போனான் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளுமே நாங்கள் 'போர்' ஆட்டம் விளையாடினோம். எல்லா விளையாட்டுக்களிலும் மிகவும் ஆர்வமானது அதுதான்.

நான் வீட்டிற்குள்ளாகச் சென்றபோது அங்கே யாஸ்லியின் அம்மாவும் வேறு பெண்களும் ஏற்கெனவே இருக்கக் கண்டேன். அவர்கள் எல்லாரும் அழுது கொண்டிருந்தார்கள்.

அப்பாவைப் பார்க்க வந்திருந்த முல்லா சொன்னார்:

''ஜெர்மானியர்கள் மிகவும் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டவர்கள். அவர்கள் ஏற்கெனவே பத்து நாடுகளுக்கு மேலாக வென்றுவிட்டார்கள். அவர்களை எதிர்த்து ஒருவராலும் நிற்க முடியவில்லை.''

தனது குரலை உயர்த்தாமலேயே அப்பா பதிலளித்தார்:


''முல்லா அவர்களே, ஜெர்மானியர்கள் வேறு பல நாடுகளை வென்றிருக்கக் கூடும், ஆனால் நம்முடைய நாட்டை வெல்ல முடியாது.''

''உங்களால் எப்படிச் சொல்ல முடியும்!'' என்று முல்லா கத்தினார் தனது கைகளை உயரே வீசிக் கொண்டு. ''தோற்கடிக்கப்பட்ட எல்லா மக்களையும் ஜெர்மானிய இராணுவத்தின் முன்னணிப் படையாக ஆக்கிவிட்டது. ஒரு புயல் மேகத்தில் எந்தளவுக்கு மழைத்துளிகள் இருக்குமோ அந்தளவுக்குப் போர்வீரர்கள் இருக்கிறார்கள்!''

''நம்மை விட அவர்கள் அதிகம் இல்லை!'' என்று அப்பா மறுத்துரைத்தார்.

அப்பாவையும் எங்கள் குடும்பத்தையும் ஏசியபடி முல்லா புறப்பட்டுச் சென்றார். ஆனால் எனது இளமைப்பருவத்தைக் களவாடிக் கொண்டது அவருடைய சாபங்கள் அல்ல. அது போர்தான்.


மணி கட்டிய
ஆட்டுக்குட்டி



## ஓட்டைச் சாக்கு

அர்ஸ்லான் தனது தாத்தா ரகீம் மரத்திலிருந்து ஆப்ரிகாட் பழங்களைச் சேகரிப்பதைக் கவனித்தான். அவனுடைய தாத்தா பெரியவர் உயரமானவர், பழங்களோ சிறியதாக இருந்தன. அர்ஸ்லான் ஓர் எறும்பையும் கவனித்தான். மிகச் சிறிய அது தனது முதுகில் மிகப் பெரிய காய்ந்த புல்லைத் தூக்கிக்கொண்டு போவது கண்டு அதிசயித்தான்.

''தாத்தா! தாத்தா!'' அர்ஸ்லான் அழைத்தான்.

ரகீம் தாத்தா பேரனிடம் நடந்து வந்தார்.

''இங்கே பாருங்கள்'' என்று எறும்பைச் சுட்டிக்காட்டிச் சிறுவன் சொன்னான். ''அவ்வளவு பெரிய புல்லை அது எங்கே தூக்கிக்கொண்டு போகிறது?''

ரகீம் தாத்தா புன்னகை செய்து அர்ஸ்லானின் தலையில் தன் கையை வைத்தார்.

''பேரனே, பூமியில் எறும்புகள் மிகவும் சுறுசுறுப்பான உயிரி என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். அந்தப் புல் ஒரு புதிய எறும்புப்புற்று கட்டவோ உணவாகவோ பயன்படலாம். குளிர்காலம் வருகின்ற போது, தரையானது உறைபனியால் மூடப்படும், ஆனால் எறும்புக்குப் பயப்பட எதுவுமே இருக்காது. அதனது வீட்டிற்குள்ளாக அது வெதுவெதுப்பாகவும், போதுமான உணவுடனும் இருக்கும்.''

''நானும் கடுமையாக உழைக்கப் போகிறேன்'' என்றான் அர்ஸ்லான். ''ஆகவே குளிர்காலம் முடிய நாமும் போதுமான விறகும் உணவும் வைத்திருக்கலாம்.''

''நல்லது, பேரனே, அருமையான யோசனை'' என்று ரகீம் தாத்தா தனது பேரனைப் பாராட்டினார். ''இதோ வாளி, கீழே விழுந்து கிடக்கும் ஆப்ரிகாட் பழங்களைப் பொறுக்கு.''

தாத்தாவும் பேரனும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

ரகீம் தாத்தா அர்ஸ்லானுடைய வாளியைப் பார்த்துவிட்டு அங்கீகரிப்பது போலச் சொன்னார்:

''அருமையாக வேலை செய்திருக்கிறாய், பேரா! கிட்டத்தட்ட வாளி நிறையச் சேகரித்து

விட்டாய். இது ஒரு நாளைக்குப் போதுமானது. போய் கைகளைக் கழுவு. ஐகுல் அத்தையைப் பார்க்க நாம் சவாரி போகலாம்.''

''அவள் எங்கே வசிக்கிறாள்?''

''கிராமத்தில்.''

''ஆனால் கிராமம் எங்கே இருக்கிறது?''

''நாம் அங்கே போனதும் நீ பார்ப்பாய்.''

''நாம் அங்கே எப்படிப் போவது?''

''எனது மோட்டார் சைக்கிளில்.''

''சிவப்பு வண்டியிலா?''

''சரிதான்.''

''யார் அதை ஓட்டப் போவது?''

''நான் ஓட்டுவேன்.''

''நான் பக்க வண்டியிலா வருவேன்?''

''சரி, பக்க வண்டியில் சவாரி செய்.''

தாத்தா தனது பேரனை பக்க வண்டியில் உட்கார வைத்தார், ஆப்ரிகாட் வாளியை அவனது பாதங்களுக்கு அருகே வைத்து, என்ஜினை விரைந்து இயக்கினார். ஏனெனில் சாக்கு ஓட்டையிலிருந்து வெளிவருவது போல அர்ஸ்லானிடமிருந்து கேள்விகள் வந்து கொண்டிருந்தன.

வந்திருப்பவர்களை வழியனுப்ப மெங்லி பாட்டி வீட்டை விட்டு வெளியே வந்தாள். ரகீம் தாத்தா என்ஜினை நிறுத்திவிட்டு, பேரனுடன் கவனமாக ஓட்டுமாறு அவள் செய்த உரையைக் கேட்டார். அர்ஸ்லானுடைய அம்மாவும் அப்பாவும் நகரத்தில் உள்ள கல்லூரிக்குப் படிக்கச் சென்றார்கள். பாட்டியோ தனது கணவனிடமும் பேரனிடமும் கண்டிப்புடன் இருந்தாள்.

## ஒவ்வொரு கேள்விக்கும் விடை கிடையாது

தொழிலாளிகள் அதிமதுரச் செடி வேர்களைச் சேகரித்துக் கொண்டிருந்த வயல் களின் நெடுகிலும் பாதை சென்றது.

ஒரு டிராக்டர் கலப்பையை இழுத்துக்கொண்டு சென்றது. ஆனால் கோதுமை அல்லது பருத்தி வயல்களில் பயன்படுத்தப்பட்டது போல இந்தக் கலப்பை இல்லை. அது ஒரே ஒரு தகடுதான் கொண்டிருந்தது. அது நிலத்திற்குள்ளாக ஆழமாகப் பதிந்து அதிமதுரச் செடி வேர்களைத் தோண்டியது.

தொழிலாளிகள் இந்த வேர்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, பெரிய குவியலாகக் குவித்தார்கள்.

''எதற்கு வேர்கள் பயன்படுத்தப்படுகின்றன?'' அர்ஸ்லான் தனது தாத்தாவைக் கேட்டான்.

''மனிதனின் அனுகூலத்திற்கு அவை பயன்படுகின்றன'' என்று ரகீம் தாத்தா

பதிலளித்தார். ''அநேக மருந்துகள் அதிமதுரச் செடி வேரிலிருந்து தயாரிக்கப்படுகின் றன. கற்கண்டும் பீரும் தயாரிக்கவும் அது பயன்படுகிறது. நீ எப்போதாவது இருமல் மருந்து சாப்பிட்டிருக்கிறாயா?''

''ஆமாம். அது நன்கு இனிக்கிறது.''

''அதற்குக் காரணம் அது அதிமதுரச் செடி வேரிலிருந்து தயாரிக்கப்படுவதுதான்.''

''நமது அதிமதுரச் செடியா?''

''உண்மைதான்.''

''எனக்கு அது தெரியாது!'' என்று வியந்து சொன்னான் அர்ஸ்லான்.

மோட்டார் சைக்கிள் புதர்ச்செறிவுகளின் ஊடாகச் சென்றது. வண்டியானது திடீரென்று குலுங்கத் தொடங்கி, திரும்பவும் சாலை சமதளத்தை அடைகின்ற வரை அவர்கள் அப்படியே சென்றார்கள்.

''தாத்தா! தாத்தா!'' அர்ஸ்லான் கத்தினான்.

''என், பேரா?'' வேகத்தைக் குறைத்தவாறு ரகீம் தாத்தா கேட்டார்.

''நாம் அந்த மலைக்குச் செல்லலாம்!''

தொலைவில் நீலநிறமாகத் தோன்றிய மலைத் தொடர்களை ரகீம் தாத்தா உற்று நோக்கினார்.

''இல்லை, பேரனே, நம்மால் போக முடியாது. அது மிக உயரமாகவும் ஒடுக்கமாகவும் இருக்கிறது.''

''மலையின் மீது கருப்புத் திட்டாகத் தெரிவது என்ன?''

''அது ஜூனிப்பர் காடு.''

''அதை யார் நட்டது?''

''இயற்கைத் தாய்.''

''எப்படி இயற்கைத் தாய் அங்கே ஏறினாள்?''

ரகீம் தாத்தா வியப்புடன் தன் பேரனைத் திரும்பிப் பார்த்தார். ஆக்சிலேட்டர் பெடலை அழுத்துவதற்கு முன் வாய்விட்டுச் சிரித்தார். மோட்டார் சைக்கிள் கடகடவென மேலும் மிகுந்த வேகத்தில் விரைந்ததால், சாலையின் நெடுகிலும் இருந்த புதர்கள் ஒரே பச்சைத் தொடராகத் தெரிந்தது.

## சிறந்த நண்பன்

இரண்டு நாள்களுக்கு முழுமையாக ரகீம் தாத்தா கிராமத்தில் தங்கி விட்டார். முழு நேரத்தையும் கால்நடைப் பட்டியைச் சுற்றி வருவதிலேயே அர்ஸ்லான் செலவிட்டான். எல்லா விலங்குகளுமே மலைகளிலும் ஸ்டெப்பிகளிலும் உள்ள கோடை மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டப்பட்டிருந்தன. ஆனால் தாய் ஆடும் அதனது குட்டியும் அங்கேயே விடப்பட்டிருந்தன. ஆட்டுக்குட்டி முன்னந்தலையில் வெண்ணிற நட்சத்திரத்துடன் சாம்பல் நிறமாக இருந்தது. அர்ஸ்லான் அதைப் பார்த்த உடனேயே அதனிடம் நடந்து

சென்றான். கைநிறையத் தீவனப்புல்லை உருவி பட்டியின் ஊடே அதைத் திணித்துக் கூப்பிட்டான்:

''மே... மே... மே!''

குட்டியும் கூட உடனடியாகப் பையனிடத்தில் விருப்பங் கொண்டது போலக் காணப்பட்டது. வலமும் இடமுமாகத் துள்ளிக் குதித்து, உயர்ந்த வேகத்தில் வட்டமடித்தது. பிறகு திடீரென்று வேலியருகே அர்ஸ்லான் காத்துக் கொண்டிருந்த இடத்தில் நின்றது. மூஞ்சியை நீட்டி தீவனப்புல்லை வாங்கிக்கொண்டு அப்பால் ஓட்டமெடுத்தது.

மற்ற பையன்கள் அர்ஸ்லானை விளையாடும்படி அழைத்தார்கள். ஆனால் குட்டியை விட்டுப் போக அவனுக்கு விருப்பம் இல்லை.

வீட்டுக்குத் திரும்ப ரகீம் தாத்தா தயாரான போது, கால்நடைப் பட்டி அருகே அர்ஸ்லானைக் கண்டார். தனது புதிய நண்பனுக்குப் பையன் சுரெக் துண்டுகளை ஊட்டிக் கொண்டிருந்தான்.

''நாம் புறப்பட நேரமாகிவிட்டது, பேரனே!'' என்று அவனைப் பார்த்துக் கத்தினார்.

''தாத்தா, இந்தக் குட்டியை நம்முடன் எடுத்துச் செல்ல முடியுமா?'' என்று அர்ஸ்லான் கேட்டான். ''இதை எடுத்துச் செல்லப் போதுமான வலிமை கொண்டது மோட்டார் சைக்கிள்!''

''ஆமாம், அது வலிமையானது, ஆனால் குட்டியோ மிகவும் சிறியதாக இருக்கிறது'' என்று ரகீம் தாத்தா பதிலளித்தார். ''அதற்கு இன்னமும் தாய்ப்பால் தேவைப்படுகிறது. அது மேலும் கொஞ்சம் பெரிதாக வளர்ந்த பிறகு நாம் அதை எடுத்துச் செல்லலாம். நாம் போவோம்.''

''இல்லை, தாத்தா'' என்று அர்ஸ்லான் உறுதியாகப் பதிலளித்தான். ''என் நண்பனை நான் பிரியமாட்டேன். நான் இல்லாமல் திரும்பிப் போங்கள்.''

ரகீம் தாத்தா தனது பேரனை வியப்புடன் நோக்கினார். ''நீ இல்லாமல் நான் திரும்பினால், உன்னுடைய பாட்டி என்னை வீட்டிற்குள்ளாக விடமாட்டாள்!''

அந்நேரத்தில் ஐகுல் அத்தை பட்டியை நோக்கி நடந்து வந்தாள்.

''மருமகனே, விஷயம் இப்படி என்றால்'' எனத் தொடங்கினாள், ''உனக்குக் குட்டியையும் கூடவே அதற்கு ஒரு மணியையும் தருகிறேன். அடுத்த முறை நீ வரும் போது, உன்னுடன் அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம்.''

''ஐகுல் அத்தை!'' தனது கைகளை விரித்தவாறு அர்ஸ்லான் கத்தினான். ''உங்களுக்குப் புரியவில்லை! என்னால் போக முடியாது, எனது சிறந்த நண்பனை என்னுடன் அனுப்புங்கள்!''

''ஐகுல், பேரன் சொல்வது சரி!'' என்றார் ரகீம் தாத்தா. ''தாய், குட்டி இரண்டையும் நாங்கள் எடுத்துப் போக நீ அநுமதிப்பாயா? தாய் ஆட்டை நாங்கள் திரும்பக் கொண்டுவருகிறோம்.''

''தாத்தா, அது நல்ல யோசனை!'' அர்ஸ்லான் தனது கைகளைத் தட்டிக்கொண்டு கத்தினான். ''எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், ஐகுல் அத்தை! எங்கள் எல்லாரையும் எடுத்துப் போகும் அளவுக்கு மோட்டார் சைக்கிள் வலிமையானது.''

''நல்லது, ஆகட்டும்'' என்றாள் ஐகுல் அத்தை புன்முறுவலுடன். ''ஆனால் குட்டி

வளரும் வரை தாய் ஆட்டை நாள்தோறும் இளந்தளிர்களை மேய விடவேண்டும். ஆகவே தான் அதற்குக் கொடுக்க நிறையப் பால் சுரக்கும். உன்னால் அதைச் சமாளித்துக்கொள்ள முடியுமா?''

''என்னால் முடியும்!'' என்ற அர்ஸ்லான், நம்பவைப்பது போலக் கத்தினான். ''எங்களிடம் புல் ஏராளம் இருக்கிறது. அது மிகவும் உயரமாக வளர்கிறது. நான் கூட அதில் காணாமற் போகக் கூடும்.''

ஐகுல் அத்தை வீட்டுக்குள் நடந்து போய் ஒரு சிவப்பு நாடாவில் கட்டப்பட்ட சிறிய மணியுடன் வந்து குட்டியின் கழுத்தைச் சுற்றிக் கட்டினாள். குட்டியோ பட்டியைச் சுற்றிலும் உள்ளுக்குள் துரிதமாக வட்டமடிக்க, கணகணவென மணி ஒலித்தது. அது பாறையை விட்டுப் பாறை தாவும் மலை நீரின் ஓடையைப் போல ஒலித்தது.

## பறக்கும் பாம்பு

தாழ்வாக இருந்த கொப்புகளின் இலைகளை ஆட்டுக்குட்டி கடித்தது. தனது குட்டியையும் சிறுவனையும் ஒரு கண் பார்த்தபடி தாயோ அருகிலே இளந்தளிர்களை மேய்ந்தது.

தாய் ஆடு திருப்தியாக இருந்தது, ஏனெனில் பையனைப் போலக் குட்டியும் சரியாக நடந்து கொண்டது. முக்கியமான விஷயங்களில் பையன் முனைப்பாக இருந்தான், குட்டியும் அப்படியே. இலைகளை எப்படிக் கடிப்பது என்பதைக் குட்டி கற்றுக் கொண்டிருந்தது. அதனது சிறிய நண்பன் எதையோ கட்டிக் கொண்டிருந்தான்.

தாய் ஆட்டையும் அதனது குட்டியையும் தான் கவனித்துக் கொள்வதாக அர்ஸ்லான் நினைத்தான்; இப்போது எறும்புகளுக்கான சாலையைக் கட்டிக் கொண்டிருந்தான்.

எறும்புகள் செல்லும் தடம் புல்லில் ஏதோ புதிரான இடத்திலிருந்து மற்றொன்றுக்கு வளைந்து சென்றது. அவை எங்கிருந்து எங்கே விரைகின்றன என்பதை அர்ஸ்லானால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் உயரத்திலிருந்து பார்க்கையில் எறும்புகள் தேவையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை அவனால் காண முடிந்தது. அவை எல்லாமே கனத்த பாரங்களைச் சுமந்து சென்றன. அர்ஸ்லான் எறும்புகளில் ஒன்றைப் பிடித்து தான் உருவாக்கி இருந்த நேர் பாதையில் விட்டான். ஆனால் எறும்போ அர்ஸ்லானின் வழியில் செல்லவில்லை. தனது முன்னைய பாதையைக் கண்டுபிடிக்கும் வரை சுற்றிச் சுற்றி வந்தது. இரண்டாவது எறும்பும் செவிசாய்க்க மறுத்துவிட்டது. மூன்றாவதும் அப்படித்தான்.

எறும்புகளுடைய பாதையின் நடுவில் அர்ஸ்லான் ஒரு குழி பறித்தான். இப்போது அவை சுற்றிப் போக வேண்டி இருந்தன, இம்மாதிரி செய்வதன் மூலம் தங்களது பாதையை நேராக்கிக் கொள்ள முடியும். ஆனால் அந்த மாதிரி எதுவும் இல்லை! எறும்புகள் குழிக்குள்ளாக இறங்கி பெரும் சிரமத்துடன் தங்களது கனத்த பாரங்களுடன் ஏறி வெளியேறின.

''அடச்சே!'' என்றான் அர்ஸ்லான் எறும்புகளிடம்.

குழிக்குக் குறுக்காக மரச் சிராய் ஒன்றை வைத்தான். பாலத்தால் மகிழ்ச்சி யடைந்தன போலக் காணப்பட்ட எறும்புகள் கிளர்ச்சியுடன் வேலை செய்யத் தொடங்கின.

அர்ஸ்லானும் எறும்புகளை விட்டு விட்டு வேலை செய்யத் தொடங்கினான். மெங்லி பாட்டி குளிர்காலத்திற்கு தீவனம் தயாரிக்க அதுதான் நேரம் என்று அவனிடம் சொன்னாள். ஆட்டை மேயவிட சென்ற போது கூடவே எப்போதும் ஒரு சிறு பையை அர்ஸ்லான் எடுத்துக்கொண்டான். இப்போது கீழே விழுந்து கிடந்த முசுக்கட்டை இலைகளையும் கிளைகளையும் சேகரிக்கத் தொடங்கினான்.



திடீரென்று புல்லிலிருந்து ஒரு பாம்பு எழுந்தது! அது தனது இறக்கைகளை அடித்து தரையில் இறங்கியது.

அர்ஸ்லான் தனது பையைக் கீழே எறிந்துவிட்டு ஓடாமல் அப்படியே நின்றான். ஒருவேளை அவன் கற்பனை செய்திருக்கலாம்? தனது இறக்கைகளை அடித்து, தரைக்கு மேலாகத் தாவி திரும்பவும் புல்லுக்குள்ளாக பாம்பு விழுந்தது.

அர்ஸ்லான் வீட்டை நோக்கி முழுவீச்சுடன் ஓட்டமெடுத்தான்.

''தாத்தா!'' என்று கத்தியபடி வீட்டிற்கு ஓடிவந்தான். ''அங்கே! முசுக்கட்டை மரத்திற்குப் பக்கத்தில்!''

''என்ன அங்கே? ஓநாயா? குள்ளநரியா?'' தனது குறுந்தடியைத் தேடியவாறு தாத்தா கேட்டார்.

''இல்லை! பறக்கும் பாம்பு!''

''பேரனே! பாம்புகளுக்கு இறக்கைகள் கிடையாது!''

''ஆனால் நான் அதைப் பார்த்தேன்! எனது சொந்தக் கண்களாலேயே கண்டேன்! அது தனது இறக்கைகளை அடித்தது!''

தாத்தா தனது குறுந்தடியைக் கீழே போட்டுவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''இல்லை, பேரனே, அது பறக்கும் பாம்பு அன்று. அது பாம்புக்கு இரையான ஒரு பறவை. ஒன்றுக்கும் மேலாக நானே அதைப் பார்த்திருக்கிறேன்.''

''அந்தப் பறவைக்காக நான் வருத்தப்படுகிறேன்'' என்றான் அர்ஸ்லான்.

''ஆமாம். அது அப்படித்தான்'' ரகீம் தாத்தா தனது ஒப்புதலைத் தெரிவித்தார்.

இருவருமே அங்கே அமைதியாக நின்றார்கள், ஏனென்றால் பறவையைக் காப்பதற்கு மிகவும் சுணங்கிவிட்டது.

## ஆமை

இளந்தளிர்களை மேயவிடுவதற்குத் தனது குட்டியை அழைத்துப் போவதில் அர்ஸ்லான் மகிழ்ந்தான். அதிமதுரச் செடி வேர் சேகரிப்பாளர்களின் ஊரில் பல இளம் மேய்ப்பர்கள் இருந்தார்கள். குழந்தைகள் தங்களது இளம் வெள்ளாடு, செம்மறிக் குட்டிகளையும் பசுக்கன்றுகளையும் நேசித்தனர். புதர்ச் செறிவின் நடுவே மிகவும் பசுமையான இடங்களுக்கு அவற்றை ஓட்டிச் சென்றனர்.

அன்றைய தினம் அமுதாரியாவின் கரையில் தங்களது மந்தையை மேயவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அர்ஸ்லானுடைய குட்டி ஜப்பாருடைய குட்டியை விளையாட்டாக முட்டிக்கொண்டு கரை நெடுகிலும் ஓடிக் கொண்டிருந்தது. நதியின் கரைகள் ஆபத்தானதாக இருந்தன, ஏனெனில் அமுதாரியா தொடர்ந்து அவற்றை அரித்துச் சென்று கொண்டே இருந்தது. நதி விளிம்பை விட்டு குட்டியை அப்பால் துரத்துவதற்காக ஓடுகையில், அர்ஸ்லான் ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தான்.

கல்லை உற்றுப் பார்த்த அவன் வியப்பால் நிமிர்ந்தான்: அதற்குத் தலையும் கால்களும் இருந்தன.

''பயப்படாதே!'' என்று ஜப்பார் கத்தினான். ''அது ஆமைதான்! தீங்கு செய்யாது. அதை வீட்டுக்கு எடுத்துப் போய் முற்றத்தில் விடு.''

''என் குட்டியைக் கொஞ்சம் பார்த்துக்கொள், ஜப்பார்!'' என்றான் அர்ஸ்லான். ''ஆமையை என் தாத்தாவிடம் காட்ட விரும்புகிறேன்.''

ரகீம் தாத்தா திராட்சைத் தோட்ட நிழலில் மர மேடை மீது உட்கார்ந்து பச்சைத் தேநீர் பருகிக் கொண்டிருந்தார்.

''வெற்றிப் பொருள் கொண்டு வந்திருக்கிறாயா?''

''தாத்தா, இது ஆமை!''

''ஆமாம், ஆமைதான்.''

''இது வயதானதா?''

''இல்லை, பேரனே. உனது ஆமை இளமையானது. ஆமைகள் சுமார் நூறு ஆண்டுகள் வாழக் கூடியன. எப்போதாவது ஆமை முட்டைகளை உனக்குக் காட்டு கிறேன்.''

''ஆமை என்பது கோழி மாதிரியா?'' அர்ஸ்லான் வியப்புடன் கேட்டான்.

''இல்லவே இல்லை, ஆனால் இவையும் முட்டைகள் இடுகின்றன.''

''அவை எது போல இருக்கும்?''

''அவை பலவிதமானவை. சில கோழியினுடைய முட்டை போலிருக்கும், ஆனால் சற்று சிறியவை; உன் உள்ளங்கையில் வைத்துக் கொள்ளலாம். மற்றவை பட்டுப்பூச்சிக் கூடு போல இருக்கும்.''

''தாத்தா!'' என்று அர்ஸ்லான் கத்தினான். ''எனக்கு ஆமைக்குட்டி வேண்டும்!''

''அது இயலாது'' என்றார் ரகீம் தாத்தா. ''ஆமைக்குட்டிகள் முட்டையிலிருந்து வந்த உடனேயே, அடுத்து வசந்தம் வரும்வரை தாங்களாகவே மணலில் புதைந்துகொள்ளும். அவை செப்டம்பரில் முட்டையிலிருந்து வந்து இலையுதிர்காலம், குளிர்காலம் முழுக்க மணலுக்குக் கீழே இருந்து வெதுவெதுப்பான வசந்தகால நாள்கள் வரும்வரை காத்திருக்கின்றன.''


''நான் ஆமைக்குட்டி ஒன்று கண்டுபிடிக்கப் போகிறேன்'' என்று கோபத்துடன் சொன்ன அர்ஸ்லான் தனது பாதத்தை ஓங்கி மிதித்தான்.

'இல்லை' என்பது போல தாத்தா தன் தலையை அசைத்தார்.

''பேரா, ஆமையினுடைய முட்டைகளைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை. பெண் ஆமை அவற்றை மணலில் புதைத்து, ஒரு மந்திர வேலியால் சுற்றி வளைக்கிறது. அந்த வேலியை மனிதனாலோ விலங்காலோ ஊடுருவ முடியாது. எனினும், அதற்கு ஒரு வழி உண்டு. ஆனால் தனது நாக்கிற்குக் கீழாக ஆமை சுமந்திருப்பது போன்ற ஒரு விஷேடமான சிராய் தேவை.''

''ஆனால் முட்டையை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?'' என்று அர்ஸ்லான் கேட்டான். ''உங்களுடைய நாக்கைக் காட்டுங்கள். நீங்களும் சிராய் வைத்திருக்கிறீர்களா?''

ரகீம் தாத்தா வாய்விட்டுச் சிரித்தபடி, ''இல்லை, பேரனே, என்னிடத்தில் மந்திரச்




சிராய் கிடையாது! ஆனால் நான் வயதானவன். மூத்தவர்கள் மரியாதையும் நம்பிக்கையும் பெற்றிருக்கிறார்கள்'' என்றார்.

''ஏன்?''

''எனக்குத் தெரியாது, பேரனே, காலங்காலமாகத் தரப்படும் முறை அது.''

''எனக்குத் தெரியும்!'' தனது கைகளைத் தட்டிக்கொண்டு அர்ஸ்லான் கத்தினான். ''மூத்தவர்கள் மரியாதையும் நம்பிக்கையும் பெற்றிருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் புத்திசாலிகள்!''

''இல்லாடியே!'' ரகீம் தாத்தா பெருமையுடன் சொன்னார். ''உனக்கு உடம்பெல்லாம் மூளை!''



## அடுப்புக்கான விறகு

அர்ஸ்லான் கதவருகே மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றான். ''தாத்தா, விறகு சேகரிக்க மற்றவர்களுடன் நான் செல்லலாமா?''

ரகீம் தாத்தா தனது பேரனை தலை முதல் கால் வரைக் கடுமையாகப் பார்த்துவிட்டுப் புன்னகை செய்தார்:

''உண்மையான உதவியாளாக நீ மாறிவிட்டதாகத் தெரிகிறது. நேற்றுத்தான் சுரெக் சுடுவதற்கு விறகு சீக்கிரமே தீரப்போகிறது என்று பாட்டி சொல்லிக் கொண்டிருந்தாள். அநேகமாக எல்லாமே செலவாகிவிட்டது. அர்ஸ்லான், நீ நல்ல பையன். வீட்டைச் சுற்றி உதவி செய்வதற்கு நன்றி. விறகு பொறுக்க நீ போகலாம். ஆனால் மற்றவர்களுக்குப் பிந்தி விடாதே. கூடவே கொஞ்சம் ரொட்டியும் எடுத்துப் போ. வெளியே வேலை செய்யும் போது தயாராக எப்போதும் வைத்துக் கொள்வது நல்லது.''

''நன்றி, தாத்தா!'' கொஞ்சம் ரொட்டியும் கயிறும் எடுத்துக்கொண்டு மற்றவர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக அர்ஸ்லான் ஓடினான்; அவனது ஆட்டுக்குட்டி அவனுக்குப் பக்கத்தில் துரிதமாகச் சென்றது.

அவர்கள் முதலில் துணை ஆற்றங்கரையில் இருந்த புதர்களுக்குச் சென்றார்கள், ஆனால் சேகரிக்கப் போதுமானது அங்கே கிடைக்கவில்லை.

''நாம் நதியைக் கடந்து தீவுக்குச் செல்லலாம்'' குழுவில் மூத்தவனான யாக்மூர் முன்மொழிந்தான். யாக்மூருக்கு ஏற்கெனவே வயது ஏழாகி விட்டது. வரும் ஆண்டு அவன் பள்ளிக்குப் போவான்.

ஆற்றைக் கடக்கும் துறையில் நீர் ஆழமற்று இருந்தது, அர்ஸ்லானுடைய முழங்கால் வரைதான் வந்தது.

''மே... மே... மே!'' ஆட்டுக்குட்டி கத்தியது. அதனது சிறிய மணி துயரமாக ஒலித்தது. நீரைக் கண்டு குட்டி நடுங்கியது.

''வா, மணி, பயப்படாதே!'' தீவின் கரைமீது குதித்தவாறு அர்ஸ்லான் கத்தினான்.

''மே... மே... மே!'' பதிலுக்கு ஆட்டுக்குட்டி கத்தியது.

''நாம் அதைத் தூக்கி வரவேண்டும்'' என்றான் யாக்மூர். ''அது தானாகவே கடக்க முடியாது.''

''அதனால் வர முடியும்!'' என்று அர்ஸ்லான் சொன்னான். ''இரண்டு முறை அதனை நான் கூப்பிட்டால் அது கடந்து வந்துவிடும்.''

''அது பயிற்சி அளிக்கப்பட்டதா என்ன?'' சந்தேகத்துடன் கேட்ட யாக்மூர் அழைத்தான்: ''மணி!''

குட்டி தன் தலையைக் கூடத் திருப்பவில்லை.

''அப்படியா?'' என்று சொல்லி யாக்மூர் சிரித்தான்.

''அது அர்ஸ்லான் சொல்வதை மட்டுமே கேட்கிறது'' என்றான் ஜப்பார். ''அர்ஸ்லான், வந்து அதைக் கூப்பிடு!''

''மணி! மணி!'' அர்ஸ்லான் சத்தம் போட்டான். குட்டி நீரில் குதித்து இரண்டே பாய்ச்சலில் தீவை அடைந்தது.

''எவ்வளவு அற்புதமானது!'' என்று பையன்கள் சொன்னார்கள். ''அர்ஸ்லான் விலங்கு பயிற்றுவிப்பாளன்!''

தீவின் கரை நெடுகிலும் பாதை தெளிவாகச் சென்றது. சிறுவர்கள் புதர்களையும் பச்சைக் கோரைகளையும் கடந்து சென்றார்கள். சீக்கிரமே ஒரு திறந்த வெளிக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே வசந்த காலத்தில் வெள்ளமானது புதர், வேர் மற்றும் எல்லாவகையான புல் குவியல்களை விட்டுச் சென்றிருந்தது.

''கேளுங்கள், நண்பர்களே, இந்தச் சிறுதூறு புலவு செய்வதற்குச் சிறந்தது!'' என்று யாக்மூர் மகிழ்ச்சியுடன் கத்தினான்.

''ஆனால் அது அடுப்புக்கு நல்லதா?'' என்று அர்ஸ்லான் கவலையுடன் கேட்டான்.

''மிகச் சிறந்தது!''

பையன்கள் சிறுதூறுக் கட்டுகளைச் சேகரிக்கத் தொடங்கினார்கள். தனது எசமானனையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்த மணி திடீரென்று பின்னுக்குச் சென்று தனது தலையைத் தாழ்த்தி மூக்கைச் சீறத் தொடங்கியது.

''பாம்பு!'' என்று கத்திய அர்ஸ்லான், தனது விறகுக் கட்டைக் கீழே எறிந்தான்.

''அது வெறும் பச்சைப் பாம்புதான்'' என்ற யாக்மூர் சிரித்தான். ''தொடர்ந்து சேகரி, கவலைப்பட எதுவுமில்லை.''

தங்களது கட்டுகளைக் கட்டிமுடித்த சிறுவர்கள் கொஞ்சம் தின்பதற்கு வட்டமாக உட்கார்ந்தார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொருமே தங்களுடன் ரொட்டித் துண்டாவது சுரெக்காவது கொண்டு வந்திருந்தார்கள். எதுவும் கொண்டுவராதவர்களுடன் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

திடீரென்று வழியில் ஒரு கழுதை தென்பட்டது.

‘‘நாம் அதைப் பிடித்து நமது கட்டுகளை அதன் மீது ஏற்றலாம்’’ என்று யாக்மூர் யோசனை சொன்னான்.

உடனேயே எல்லாரும் கழுதையைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள், ஓடிப்போக வேண்டும் என்ற எண்ணம் துளியும் அதற்கு இல்லாது இருந்த போதும்.

‘‘இது யாருடைய கழுதை?’’ அர்ஸ்லான் கேட்டான்.

‘‘கட்டாயம் அது ஊர் சுற்றியாகத்தான் இருக்கும்’’ என்றான் யாக்மூர். ‘‘முதலில் கொஞ்சம் புல் கொண்டு அதன் முதுகில் திண்டு வைத்து, பிறகு சிறுதூர்களை அடுக்குவோம்.’’

ஒருவன் உபரிக் கயிறு வைத்திருந்தான். காய்ந்த சுள்ளிகளின் பெரிய கட்டைச் சேகரித்த பிறகு, அதைக் கழுதையின் முதுகுக்கு எல்லாரும் சேர்ந்து தூக்கினார்கள். பின்னர் ஆற்றை நோக்கி அதை ஓட்டினார்கள்.

கடக்கும் இடத்தை அவர்கள் அடைந்த போது, அதைத் தெரிந்து கொள்ளக்கூட இல்லை. நீரின் மட்டம் உயர்ந்து இப்போது அது தெளிவற்றும் சேறாகவும் இருந்தது.

‘‘இதை நாம் எப்படிக் கடந்து போகப் போகிறோம்?’’ என்று அர்ஸ்லான் அச்சத்துடன் கேட்டான்.

‘‘நாம் நீந்தலாம்! என்னுடன் சேர யார் விரும்புகிறீர்கள்?’’ யாக்மூர் துணிவுடன் கேட்டான்.

பையன்கள் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டு, கரைக்கு அப்பால் பின்னே நகர்ந்தார்கள். ஓடையானது இப்போது முப்பது மீட்டர் அகலத்தில் சென்றது.

‘‘நீயே நீந்திக் கட’’ என்று யாக்மூரிடம் ஜப்பார் சொன்னான். ‘‘பெரியவர்களை நீ கூட்டி வரும் வரை நாங்கள் இங்கே காத்துக் கொண்டிருப்போம்.’’

‘‘தனியாகச் செல்ல எனக்குப் பயமாக இருக்கிறது’’ என்று யாக்மூர் ஒப்புக் கொண்டான். ‘‘நீரோட்டம் சற்று பலமாகவே இருக்கிறது.’’

‘‘பிறகு நாம் என்ன செய்யப் போகிறோம்?’’ மணியை நெருக்கமாக அணைத்த வாறு அர்ஸ்லான் கேட்டான்.

அவர்கள் எல்லாரும் திரும்பி சூரியனைப் பார்த்தார்கள். அது ஏற்கெனவே தொடுவானத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. எந்த வார்த்தையும் பரிமாறிக் கொள்ளாமல் அவர்கள் எல்லாருமே சத்தம் போடத் தொடங்கினார்கள், அதை யாராவது கேட்கக் கூடும் என்ற நம்பிக்கையில்.

ஆனால் அவர்களுடைய கூக்குரல்களுக்கு யாரும் பதில் அளிக்கவில்லை.

‘‘இரவுப் பொழுதை நாம் தீவில்தான் கழிக்க வேண்டி இருக்கும் என்பது போலத் தெரிகிறது’’ என்று ஜப்பார் முணுமுணுத்தான்.

‘‘நாம் இன்னும் கொஞ்சம் கத்தலாம், இந்த முறை எல்லாருமாகச் சேர்ந்து!’’ என்று யாக்மூர் யோசனை சொன்னான்.

பையன்கள் ஒன்றுசேர்ந்தும் தனித்தனியாகவும் தங்களது அப்பாக்களை, சகோதரர்களை, அம்மாக்களை அழைத்து சப்தம் போட்டார்கள்.

கடைசியாகத் தீவின் உள்பகுதியில் இருந்து ஒரு மண்வாரியைச் சுமந்தபடி ஒரு மனிதன் வந்தான். அது பைராம்.

‘‘நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?’’ என்று பையன்களைக் கேட்டார்.

“நாங்கள் விறகுக்காக வந்தோம்!” என்று அனைவருக்குமாக யாக்மூர் பதிலளித்தான்.

“உங்களுக்குத் தேவையானது மறுபக்கத்தில் போதுமானது இல்லையா?” பைராம் கோபமாகக் கேட்டார். ஒவ்வொரு பையனாக மறுபக்கம் தூக்கிச் சென்றார். தனது தோள் மீது அவர்களது கட்டுகளையும் சேர்த்து ஒரு ராட்சசனைப் போலத் தூக்கிச் சென்றார். அர்ஸ்லானுடைய முறை வந்த போது, அவனது கட்டுடன் மணியையும் சேர்த்துத் தூக்கினார்.



கழுதையின் மீதிருந்த சிறுதூர் கட்டை பைராம் கீழே இறக்கி, அதை நீரைக் கடந்து தூக்கிச் சென்றார். கழுதையை மறுபடியும் தீவுக்குள்ளாகத் துரத்திவிட்டார்.

# குள்ளநரி

மறுநாள் குட்டியைக் கூட்டிக்கொண்டு யாக்மூரைப் பார்க்க அர்ஸ்லான் சென்றான். வெளியிலிருந்து தன் நண்பனை அழைத்தான்:

''யாக்மூர்! வெளியே வா!''

யாக்மூர் வீட்டைவிட்டு வெளியே வந்தான்.

''பார்த்தாயா?'' என்ற அர்ஸ்லான், தனது மார்பைச் சுட்டிக்காட்டினான். அவனது கழுத்தைச் சுற்றிலும் போர்க்கள பைனாக்குலர் தொங்கிக் கொண்டிருந்தது.

''விலங்குகளைக் கண்காணிக்க முடியும் என்பதற்காக என் தாத்தா இதை எனக்குத் தந்தார். கூடவர விரும்புகிறாயா?''

''எங்கே போக?''

''ஆற்றுவரை, அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்.''

''அம்மா!'' யாக்மூர் வீட்டிற்குள்ளாக அழைத்தான். ''நான் விறகு பொறுக்கப் போகிறேன்.''

யாக்மூரும் அர்ஸ்லானும் மணியுடன் புதர்களை நோக்கிச் சென்றார்கள். புதர்களுக்கு இடையே தாங்கள் ஒளிந்து கொள்வதற்கான இடத்தைக் கண்டுபிடித்தார்கள். அதே வேளை குட்டியானது இளந்தளிர்களை மேய அலைந்து திரிந்தது.

பைனாக்குலர் வழியாக முதலில் பார்த்தவன் யாக்மூர்தான். சில வாத்துகளைப் பார்த்தான். பிறகு அர்ஸ்லானுடைய முறை வந்தது, ஆனால் அவன் எதையும் காணவில்லை.

திரும்பவும் யாக்மூர் பைனாக்குலரை எடுத்தான்.

''பார், அங்கே ஒரு காட்டு வாத்து!''

அர்ஸ்லான் பைனாக்குலரைத் தனது கண்களுக்கு உயர்த்த, வியப்பினால் கத்தினான்:

''அது வாத்து இல்லை! குள்ளநரி!'' என்ற அவன் முற்றிலுமாக அதிர்ச்சியுற்றுத் தொடர்ந்தான்:

''அது ஒரு பந்து வைத்திருக்கிறது. பந்துடன் கூடிய குள்ளநரி!''

''குள்ளநரியை எங்கே பார்த்தாய்?'' யாக்மூர் பைனாக்குலரை கேட்டு வந்தான், ஆனால் அர்ஸ்லான் அதை வைத்துக் கொண்டான்.

''ஒரு நிமிஷம் பொறு! குள்ளநரி பந்தை உருட்டுகிறது!''

யாக்மூர் பைனாக்குலரை அர்ஸ்லானுடைய கைகளிலிருந்து பிடுங்கினான்.

''நீ சொன்னது சரி! அது குள்ளநரிதான்! முள்ளெலியைத்தான் உருட்டுகிறது. பார், அதை ஆற்றுக்குள்ளாகத் தள்ளிவிட்டது!''

அர்ஸ்லான் பைனாக்குலரை தன் நண்பனிடமிருந்து திரும்ப வாங்கினான்.

''எங்கே? எனக்கு எதுவும் தெரியவில்லை! நான் வாத்தைப் பார்க்கிறேன்.''

''சிவப்புப் புதர்களை நோக்கிப் பார்!''

''இப்போது தெரிகிறது. அது முள்ளெலிதான். அது கரையை நோக்கி நீந்துகிறது! ஓ!'' அர்ஸ்லான் பைனாக்குலரை கீழே எறிந்துவிட்டுக் கண்ணீர் விட்டான்.

“என்ன நேர்ந்தது?” யாக்மூர் பைனாக்குலரைத் தனது கண்களுக்கு உயர்த்தினான். “ஆ, அந்தக் குள்ளநரி! அது முள்ளெலியை விழுங்குகிறது!”

“நம்மால் அதைக் காப்பாற்ற முடியுமா!” குதித்துக்கொண்டு கத்தினான் அர்ஸ்லான்.

“ஏற்கெனவே மிகவும் சுணங்கிவிட்டது! நாம் அங்கே போய்ச் சேரும் போது ஊசிகளைத் தவிர எதுவும் எஞ்சியிருக்காது.”

“கொடுமையான பைனாக்குலர்!” கோபத்துடன் கத்தினான் அர்ஸ்லான்.

“அது போலக் கொடுமையானது எதுவுமில்லை. குள்ளநரிகள் எப்படி வேட்டையாடு இன்றன என்பதைப் பார்த்தோம்.”

“நாம் வீட்டுக்குத் திரும்பலாம். துப்பாக்கியில் தோட்டாப் போடுமாறு தாத்தாவிடம் சொல்வேன். குள்ளநரிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!”

“முள்ளெலிக்காக வருந்துகிறேன்” யாக்மூர் ஒப்புக்கொண்டான். “குள்ளநரிக் காகவும் வருத்தப்படுவேன்.”

அர்ஸ்லான் கணநேரம் சிந்தித்துவிட்டுப் பெருமூச்செறிந்தான்.

“ஆமாம். நீ சொல்வது சரிதான்.”

## தண்டிக்கப்பட்ட திருடன்

பாசன வாய்க்கால் கரை மீது உட்கார்ந்து கால்களைத் தொங்கவிட்டவாறு அர்ஸ்லான் களிமண்ணால் உருவங்கள் செய்து கொண்டிருந்தான். பெரிய முசுக்கட்டை மரம் சூரிய ஒளியைத் தடுத்து நிழல் தந்தது. அருகே மணி இளந்தளிர்களை மேய்ந்து கொண்டிருந்தது. அடிமரத்தின் மீது தனது முன்னங்கால்களைத் தாங்கியவாறு, தாழ்வான கிளைகளின் இலைகளைக் கடித்துத் தின்றது.

திடீரென்று மரத்தில் அமர்ந்த குருவிகள் மூர்க்கமாகக் கீச்சிட்டன. கோழிக்குஞ்சுகள் அதிமதுரச் செடிப் புதர்களுக்கு மத்தியில் அங்குமிங்கும் ஓடி உரக்கக் கொக்கரிக்கத் தொடங்கின்.

அர்ஸ்லான் வியப்பில் தன் தலையைச் சுற்றிலும் திருப்பி நோக்கினான். நடுத்தரப் பருமனுள்ள பறவை ஒன்று அச்சுறுத்தும் தோற்றத்துடன் தடித்த மரக்கிளை மீது அமர்ந்ததைக் கண்டான். அதனது அலகு கொக்கி போல அமைந்திருந்தது.

உடனடியாக அங்கு அமைதி நிலவியது. குருவிகள் முடங்கிப் போயின, கோழிக்குஞ்சுகளும் அதிமதுரச் செடிப் புதர்களுக்குக் கீழாகத் தங்களைத் திணித்துக் கொண்டன.

“ச்சூ!” அர்ஸ்லான் கத்தினான், அழைக்காத விருந்தாளியை நோக்கி களிமண் உருவத்தில் ஒன்றை வீசினான்.

பறவை தனது இறக்கைகளை அடித்துவிட்டு அப்பால் பறந்து சென்றது.

உடனடியாக எல்லாமே உயிர்பெற்று எழுந்தன. குருவிகள் தங்களது கிறீச்சிடலைத் தொடர்ந்தன, கோழிக்குஞ்சுகள் அங்குமிங்கும் ஓடத் தொடங்கின.

நடந்தவைகளைப் பற்றி தாத்தாவிடம் சொல்ல அர்ஸ்லான் ஓடினான்.

‘‘நான் பார்த்ததை உங்களால் ஊகிக்க முடியாது! அந்த மாதிரி அச்சுறுத்துகின்ற பறவை! அதனது அலகு! கோழிக்குஞ்சுகள் எல்லாம் ஒளிந்துகொண்டன, குருவிகள் தலையைக் கூட நீட்டவில்லை.’’

‘‘நீ பருந்தைப் பார்த்தது போலத் தெரிகிறது’’ என்று ரகீம் தாத்தா முடிவுசெய்தார். ‘‘சிறிய பறவைகள் முடங்கிக் கொண்டதன் மூலம் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டன. வானத்திலிருந்து ஊர்ந்து செல்கிற எறும்பைக் கூட கழுகால் பார்க்க முடியும் என்றும், ஆனால் அசைவற்ற ஒட்டகத்தை அதனால் கண்டுபிடிக்க முடியாது என்றும் கூறுகிறார்கள். பருந்தால் கூடப் பெரும்பாலும் அசையாத பொருளைக் காண முடியாது; ஆனால் கோழிக்குஞ்சுகளில் ஒன்று ஓடிப்போக முயன்றிருக்குமேயானால், உடனடியாக அதன் மீது பாய்ந்து பிடித்திருக்கும்.’’

கைவசம் எப்போதுமே தயாராக வைத்திருந்த பைனாக்குலரை ரகீம் தாத்தா எடுத்து வானத்தை நோக்கினார்.

‘‘இங்கே வா!’’ என்று அர்ஸ்லானை அழைத்து தாத்தா அவனிடம் பைனாக்குலரைக் கொடுத்தார். ‘‘வில்லோ மரத்திற்குச் சற்று உயரத்தில். அந்தப் பறவைதானா?’’

‘‘அப்படித்தான் நினைக்கிறேன்.’’

‘‘அதனது விஞ்ஞானப் பெயர் எனக்குத் தெரியாது, ஆனால் முதியவர்கள் அதை ‘திருத்தூதரின் குதிரை’ என்று அழைப்பார்கள்.’’

‘‘தாத்தா, பாருங்கள்!’’ என்று கத்திய அர்ஸ்லான் தாத்தாவிடம் பைனாக்குலரைத் திருப்பிக் கொடுத்தான். ‘‘‘திருத்தூதரின் குதிரை’ தாக்கப்படுகிறது!’’

‘‘அவை நீலக் காக்கைகள். அவற்றின் குஞ்சுகளில் ஒன்றை அநேகமாகத் திருடியிருக்கலாம். இப்போது திருடனுக்குப் பாடம் கற்பிக்கும்!’’

தனது பார்வைக்கு ஏற்ப அர்ஸ்லான் பைனாக்குலரில் வளையத்தைத் திருப்பினான்.

‘‘தங்களுடைய இறக்கைகளால் அதை அவை அடிக்கின்றன. தாத்தா, அது எதையோ கீழே போட்டது.’’

‘‘அது குஞ்சைப் போகவிட்டிருக்கும். அதற்கு வேறு வழியில்லை—காக்கையினுடைய இறக்கைகள் மிகவும் சக்திவாய்ந்தவை. சிறுவனாக இருந்த போது ஒருமுறை காக்கைக் கூடு வரை ஏறினேன், அவை எனக்குச் சரியாகக் கொடுத்தன. ஆகவேதான் அவற்றை மக்கள் ‘திருத்தூதரின் சாட்டை’ என அழைக்கிறார்கள்.’’

‘‘மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது!’’ என்றான் அர்ஸ்லான். ‘‘தாத்தா, நாம் எப்போது பைனாக்குலர் மூலமாக விலங்குகளைப் பார்க்கப் போகிறோம்? நான் கொஞ்சம் பெரியவன் ஆகும் போது நாம் போவோம் என்று நீங்கள் என்னிடம் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே வளர்ந்துவிட்டேன்!’’

ரகீம் தாத்தா அர்ஸ்லானை உற்றுப்பார்த்து சம்மதத்தில் தலையசைத்தார்.

‘‘நீ சொல்வது சரி. நீ உண்மையிலே வளர்ந்திருக்கிறாய். அடுப்பிற்கு விறகு கொண்டு வந்து உன் பாட்டிக்கு நீ உதவுகிறாய். நீ விரும்பினால் நாளை நாம் போகலாம்.’’

‘‘முலாம்பழ வயலுக்கா?’’ என்று கேட்ட அர்ஸ்லானின் கண்கள் பளிச்சிட்டன.

‘‘ஆமாம். மந்தையைப் பார்க்க இதுதான் நேரம். வெளியே போவதற்கான

தயாரிப்புகளை நான் செய்கிறேன். நமக்குக் கொஞ்சம் புத்தம்புதிய சுரெக் சுட்டுத் தரும்படி உன் பாட்டியிடம் போய்ச் சொல்.''

''மணியையும் நான் கூட அழைத்து வர முடியுமா?''

''நிச்சயமாக!'' என்றார் ரகீம் தாத்தா.

## இளையாறு

ரகீம் தாத்தாவும் அர்ஸ்லானும் மணியுடன் ஆற்றின் நெடுகிலும் சென்ற பாதையில் போனார்கள். அடர்ந்த புதர்களைச் சென்றடைந்தார்கள். அவர்கள் அங்கே போன போது, ஆறு ஏற்கெனவே தொலைதூரத்துக்குப் போய்விட்டது. ஆனால் அவர்களின் காலடியில் கண்ணாடி போன்ற நீலநிற நீர் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது இளையாறு.

இது மிகவும் சிறப்பான இளையாறு. ஆற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொண்டு வளைந்து திரும்பவும் நதியில் சேர்கிறது. இளையாற்றில் உள்ள நீரோட்டத்தை மிக அரிதாகவே கவனிக்க முடியும்; அமுதாரியாவின் வண்டல் நீர் படிந்து, ஊற்று நீரைப் போல அவ்வளவு தெளிவானதாக மாறுகிறது.

சமீப ஆண்டுகளில் அமுதாரியா மேன்மேலும் அப்பால் போய்விட்டது, இளை யாற்றுக்கும் ஆற்றுக்கும் இடையே ஒரு பெரிய தீவு உருவாகிவிட்டது. அங்கே அதிமதுரச் செடி வேர் சேகரிப்பவர்கள் மேயவிடுவதற்காகத் தங்களது கால்நடைகளை ஓட்டிச் சென்றார்கள், வளம் நிறைந்த மண்ணில் முலாம்பழங்களைப் பயிரிட்டார்கள்.

ரகீம் தாத்தாவும் அர்ஸ்லானும் மணியுடன் கரை மீது நின்றார்கள்; அங்கே புதர் நன்கு வளர்ந்து மண்டிக்கிடந்தது.

எதிர் கரையிலிருந்து ஒரு படகு புறப்பட்ட போது அதன் எந்திரத்தின் கடகட ஒலி கேட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு, ரகீம் தாத்தாவை மரியாதையுடன் வணங்கிய இளைய படகோட்டி அவர்களையும் ஆட்டையும் எந்திரப் படகில் ஏற்றிக்கொண்டான். இளையாற்றுக்குள் நெடுகிலும் முலாம்பழ வயலை நோக்கி அவர்கள் விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

''இந்த ஆண்டு அங்கே விரால்மீன் பிடித்தோம்!'' நாணல்கள் மண்டிக்கிடந்த ஒரு சிற்றோடையைச் சுட்டிக்காட்டி அந்தப் பையன் கத்தினான்.

''எந்திரத்தை நிறுத்து! என்னால் கேட்க முடியவில்லை!'' என்று ரகீம் தாத்தா உரக்கக் கூறினார்.

பையன் எந்திரத்தை நிறுத்தினான். படகு உடனடியாக நீரில் அமிழ்ந்து நின்றது. இளையாற்றில் அமைதி நிலவியது.

''இந்த ஆண்டு அந்தச் சிற்றோடையில் விரால்மீன் பிடித்தோம் என்று சொன்னேன். பன்னிரண்டு கிலோ!''

''மோசமில்லை!'' என்று ரகீம் தாத்தா கூறினார். ''நீங்கள் வலை உபயோகித் தீர்களா?''

‘‘இல்லை. தூண்டில் தான் போட்டோம். அந்த நாணல்களில் அவை முட்டையிட்டன. மீன் சிணைப்பு, நூலில் கட்டப்பட்ட கருப்பு மணிகள் போல, நாணல்களிடையே தொங்கியது. மீன்களே அருகிருந்து கவனித்துக் கொண்டன. சிறிய மீன் ஒன்றைப் பிடித்து, ஒரு கொக்கியில் மாட்டி ஓடைக்குள்ளாகத் திரும்ப எறிந்தோம். அது சுற்றிலும் அடித்துக் கொண்டு நீரில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது. மின்னல் வேகத்தில் ஒரு விரால்மீன் தோன்றியது. தனது சிணைப்பை அது விழுங்கக்கூடும் என்று பயந்தது. அது உடனே மீனைத் துரத்திச் சென்று பிடிபட்டது. எங்களது படகை ஆற்றைச் சுற்றிலும் இழுத்து, தப்பிப் போகவிருந்தது.’’

‘‘எங்களையும் நீ இங்கே இறக்கி விடலாம்!’’ என்றார் ரகீம் தாத்தா. ‘‘எஞ்சிய தூரத்தை நாங்கள் நடந்து செல்வோம்.’’

தீவில் புற்புதர்கள் உயரமாக வளர்ந்திருந்தன. அவற்றிற்கு இடையே பேரிச்ச மரங்கள் நீண்டு நின்றன.

தங்களது கால்களுக்குக் கீழிருந்து காட்டுப் பறவைகள் திடீரென்று பறந்து வர, அர்ஸ்லான் ‘ஓ’ என்று பயந்து அலறினான். அடுத்த நிமிடமே அது மகிழ்ச்சிக் குரலாக மாறியது, ஏனெனில் நவரத்தினங்கள் போல அவற்றின் இறகுகள் பிரகாசித்தன.

‘‘ஜோ-கூர், ஜோ-கூர்!’’ அவற்றினுடைய கவர்ந்திழுக்கும் கூவல் ஒலித்தது.

‘‘தாத்தா!’’ அர்ஸ்லான் கத்தினான். ‘‘நாம் இங்கே வந்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!’’

ரகீம் தாத்தா புன்னகை செய்து, சிறுவனுடைய தோள் மீது தனது கையை வைத்தார். அர்ஸ்லான் தனது கையை மணியினுடைய கழுத்தில் வைத்தான். தீவின் அதிசயங்களைப் பார்த்தபடி அவர்கள் தங்களது நடையைத் தொடர்ந்தார்கள்.

‘‘இந்த நாணலைப் பார்!’’ ரகீம் தாத்தா தன் பேரனிடம் சொன்னார். ‘‘இதில் அருமையான பாய் செய்யலாம். இப்பொழுதெல்லாம் சிலர் மட்டுமே இந்தத் தொழிலைச் செய்கிறார்கள்.’’

அவர்களுக்குக் குறுக்கே ஒரு காட்டு முயல் வேகமாகச் சென்றது.

‘‘தாத்தா, இங்குதான் போன ஆண்டு நீங்கள் காட்டு முயல்களைக் காப்பாற்றினீர்களா?’’

‘‘அங்கே சரிவில் வில்லோ மரம் உனக்குத் தெரிகிறதா? போன வசந்தகாலத்தில் இங்கே எல்லாவற்றையும் வெள்ளம் சூழ்ந்து கொண்டது. தீவு முழுக்க மூழ்கிப் போய்விட்டது. எல்லாக் காட்டு முயல்களுமே வில்லோ மரத்தைச் சுற்றி நெருக்கி நின்றன. தண்ணீர் உயர்ந்து கொண்டே இருந்தது. நாங்கள் எல்லாவற்றையும் சாக்குகளுக்குள் போட்டுக்கொண்டு மறுகரைக்குத் தூக்கிச் சென்றோம். சாக்குகளை நாங்கள் அவிழ்த்த போது அவை எல்லாமே மின்னல் வேகத்தில் வெளியே பாய்ந்தன.’’

பழைய முசுக்கட்டை மரம் ஒன்று கீழே சாய்ந்ததால் அவர்களின் பாதை அடைபட்டுப் போயிற்று.

‘‘நாம் இங்கே உட்கார்ந்து கிளையாற்றின் சலசலப்பைக் கேட்போம்’’ என்றார் ரகீம் தாத்தா.

அர்ஸ்லான் கீழே அமர்ந்தான். அதே வேளை அருகிருந்த புதர்களின் இளந்தளிர்களை மணி தின்னத் தொடங்கியது. கரையுடன் உரையாடுவது போல தண்ணீர்ச் சிதறல் மென்மையான ஒலி எழுப்பியது.



# வெளிப்பக்கம் பச்சை, உள்பக்கம் சிகப்பு

முலாம்பழ வயலின் ஓரத்தில் சில இளம் வில்லோ மரங்களுக்குக் கீழாக தற்காலிகப் புகலிடம் ஒன்று இருந்தது. காய்ந்த நாணல் தண்டுகள் நான்கு தூண்களோடு கட்டப்பட்டு, இரு பக்கங்களில் சுவர்போல இருந்தன. கூரையாக ஒரு பாய் இருந்தது. வேகமாக வீசும் காற்று அதைத் தூக்காதவாறு சில கற்கள் ஓரத்தில் வைக்கப் பட்டிருந்தன.

''நல்லது, நாம் வந்து சேர்ந்துவிட்டோம்!'' என்று அறிவித்த ரகீம் தாத்தா, ஒரு பழைய கம்பளத்தின் மீது மறைவுக்குக் கீழே இருந்த நிழலில் உட்கார்ந்தார். ''எனக்குத் தாகமாக இருக்கிறது. முலாம்பழம் ஒன்று கொண்டுவா.''

வில்லோ மரத்திற்குக் கீழாகத் தனது ஓய்விடத்திலிருந்து எழுந்த மணி, தனது எசமானனைப் பின்தொடரத் தயாராக இருந்தது; ஆனால் அர்ஸ்லான் தனது கையை அசைத்துக் காட்டிச் சொன்னான்:

''இங்கேயே இரு! நான் ரொம்ப தூரம் போகவில்லை.''

குட்டி கீழ்ப்படிந்தது, ஆனால் அர்ஸ்லான் திரும்பி வருவதைப் பார்த்த போதுதான் அது திரும்பப்படுத்தது.

''இந்த ராட்சசப் பழத்தைப் பாருங்கள், தாத்தா! இதை நான் கஷ்டப்பட்டுத் தூக்கி வருகிறேன்!''

அர்ஸ்லான் முலாம் பழத்தைத் தரை மீது போட்டு மறைவுக்குக் கீழாக உருட்டினான்.

''தாத்தா, பாருங்கள்!'' காய்ந்து போன ஒரு தண்டைச் சுட்டிக்காட்டி அர்ஸ்லான் சொன்னான். ''இது மண் சில்வண்டால் வெட்டப்பட்டிருக்க வேண்டும்.''

''இங்கே ஏராளமான மண் சில்வண்டுகள் இருக்கின்றன'' என்று தாத்தா ஒப்புக்கொண்டார். ''ஆனால் பிரச்சினைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. தண்டுகள், வேர்கள் இவற்றை வெட்டுவதன் மூலம் நிறையச் சேதம் விளைவிக்கின்றன, ஆனால் அவை நன்மையும் செய்கின்றன.''

''அவற்றால் என்ன நன்மை செய்ய முடியும்?'' என்று வியப்பில் கேட்டான் அர்ஸ்லான்.

ரகீம் தாத்தா கத்தியை உருவி எடுத்து, தனது கண்களில் கள்ளத்தனத்தைக் காட்டியபடி தன் பேரனை உற்றுப் பார்த்தார்.

''வெளிப்பக்கம் பச்சை, உள்பக்கம் சிகப்பு. இந்தப் புதிருக்கு உன்னால் விடையை ஊகிக்க முடியுமா?''

''முலாம் பழம்!'' என்று உடனே பதிலளித்தான் அர்ஸ்லான். பிறகு அவனது கண்கள் அச்சத்தால் விரிந்தன. ''ஆனால் வெள்ளையாக இருந்துவிட்டால்?'' எனக் கேட்டான்.

''இருக்க முடியாது!'' என்று கூறிய ரகீம் தாத்தா முலாம்பழத்தைப் பாதியாக

நறுக்கினார். ‘‘பார், தீக்கொழுந்தைப் போல சிவப்பாக இருக்கிறது. இது வெப்பமாக இருக்காது ஆனால் இனிப்பானது. முதல் துண்டு உனக்குத்தான்! கடி!’’

செந்நிறத்தில் பாதிப் பிறை வடிவத்தில் இருந்த பழத்தைக் கடித்த அர்ஸ்லான், மகிழ்ச்சியால் தனது கண்களைச் சுருக்கினான்.

‘‘தேனை விட இனிப்பானது!’’ பிறகு திடீரென்று தனது குட்டியை நினைவுகூர்ந்து சொன்னான்: ‘‘தாத்தா, மணிக்கும் நாம் கொஞ்சம் கொடுக்க வேண்டும். அதுவும் பெரும்பாலும் தாகத்துடன் இருக்கும்.’’

குட்டியும் சுவையான முலாம்பழத்தில் தனது பங்கைப் பெற்றுக்கொண்டது. இதை அங்கீகரிப்பது போல அதனுடைய மணி ஒலித்தது.

‘‘தாத்தா, மண் சில்வண்டுகளினால் என்ன நன்மை ஏற்படுகிறது என்பதை நீங்கள் இன்னமும் எனக்குச் சொல்லவில்லை’’ என்றான் அர்ஸ்லான்.

‘‘இதோ, கேளு. சிலநேரங்களில் தளிர்கள் எல்லாம் நன்கு வளரும். பிறகு திடீரென்று அவற்றில் சில கருகத் தொடங்கும். மற்றவை யாரோ கத்திரியால் வெட்டிவிட்டது போலக் காணப்படும். அது உப்பு—நமது மண்ணின் நோய். அடிமண் நீர் பூமியின் ஆழத்திலிருந்து உப்பை மேலே கொண்டுவரும் போது, தாவரங்கள் மடியத் தொடங்குகின்றன. மற்றொரு நோய் சூரியன். இப்போது மண் சில்வண்டுகள் உதவி செய்கின்றன. மண்ணுக்குள் அவை சுரங்கப்பாதைகள் தோண்டுகின்றன; ஆகவே காற்று மண்ணுக்குள்ளாகச் சேர்ந்து அதை வளப்படுத்துகிறது. அத்தகைய நிலத்தில் சுவாசிப்பது தாவரங்களுக்குச் சுலபமானது. மண் சில்வண்டுகள் எப்போதுமே தங்களது சுரங்கப்பாதைகளை நேராகத் தோண்டுகின்றன. அவற்றினுடைய பாதையில் வேர் இருந்தால், அதைத் துண்டித்து விடும்; அல்லது ஒரு மரமாக இருந்தால், அதன் ஊடாகத் துளை போடும். மண் சில்வண்டு ஏராளமாக வளரும்போது விவசாயியின் உதவிக்கு குயில் வந்து சேர்கிறது. குயிலுக்கு மண் சில்வண்டு சுவையான கவளமாகும். மண் சில்வண்டைப் பிடிப்பது மற்ற பறவைகளுக்குக் கடினமானது, ஆனால் தரைக்குள்ளும் குயிலால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியும் எனத் தோன்றுகிறது. தனது அலகால் இரண்டு அல்லது மூன்று துவாரங்கள் இட்டு, சுரங்கப்பாதையை எட்டி, ஒவ்வொரு முறையும் மண் சில்வண்டைப் பிடித்துக் கொள்கிறது.’’

முலாம் பழத்தைத் தின்று முடித்த அர்ஸ்லான், நெருப்பு மூட்ட குச்சிகள் சேகரிக்க ஓடினான். தாத்தாவோ பாத்திரம் ஒன்றை எடுத்துக் கொண்டு தண்ணீர் எடுக்கப் புறப்பட்டார்.

## நாசூக்கான சாப்பாட்டுப் பிரியன்

‘‘தண்ணீர் சூடாகிக் கொண்டிருக்கும் வேளையில்’’ என்றார் ரகீம் தாத்தா, ‘‘நாம் வயலுக்குப் போகலாம். முலாம்பழங்கள் பழுத்து இருக்கின்றன. அவற்றை ஒரு பார்வையிட்டு வரலாம். முக்கியமான விஷயம், சோளப்பயிர் எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.’’

முலாம்பழ வயலைச் சுற்றி சோளப்பயிர் ஒரு சுவர் போல எழும்பியிருந்தது. கதிருடன் தண்டுகள் தரையிலிருந்து மூன்று மீட்டர் உயரத்திற்கு வளர்ந்திருந்தன. அந்த உயிருள்ள வேலி அழைக்கப்படாத விருந்தாளிகளுக்கு எதிரான பாதுகாப்பு. சோளப்பயிரின் விதைகள் தினைப்பயிரின் விதைகளை ஒத்திருக்கின்றன.

ரகீம் தாத்தா தேன் சோளத்தை வளர்த்தார். குழல் போன்ற அதனது தண்டுக்குள்ளாக இனிய இனிப்புத் திரவமிருக்கிறது. ஒருசமயம் தேன் சோளம் குழந்தைகளின் விருப்பமான இன்ப விருந்தாக இருந்தது. ஆனால் பின்னர் சர்க்கரையும் கற்கண்டும் அரியனவாக இல்லாமற் போயின. தேன் சோளம் மறக்கப்பட்டு, மறைந்து போனது.

மறந்து போன தேன் சோளத்தை ரகீம் தாத்தா உயிர்ப்பிக்க விரும்பினார். கடைசியாக ஒரு முதிய விவசாயியின் தோட்டத்தில் ஒரே ஒரு செடியைக் கண்டுபிடித்தார். மூன்று ஆண்டு காலத்தில் தேன் சோளத்தை உயிர்ப்பிப்பதில் அவர் வெற்றியடைந்தார். இப்போது விதைகளைக் கூட்டுப்பண்ணைக்குக் கொடுக்கப் போகிறார்.

ரகீம் தாத்தா தனது பயிர்களைப் பார்த்துவிட்டு முடிவு செய்தார்:

''அறுவடைக்கு இது நேரம். தானியம் முற்றி இருக்கிறது. பறவைகள் வீணாக்கி விடும். அவற்றிற்கு இடங்கொடுக்கவே கூடாது.''

''தாத்தா, பாருங்கள்!'' அர்ஸ்லான் தரையிலிருந்து முலாம்பழத் தோல் ஒன்றை எடுத்தான். ''யாரோ முலாம்பழ வயலுக்கு வந்திருக்கிறார்கள்.''

''அவை முற்றி விட்டன என்பதற்கு அது நல்ல அடையாளம்!'' என்றார் ரகீம் தாத்தா வாய்விட்டுச் சிரித்தவாறு.

''ஆனால் யார் தின்றது? இதோ மற்றொரு தோல்! அநேகமாக காட்டுப்பன்றியாக இருக்கலாம்.''

''வயலுக்கு வந்தது காட்டுப்பன்றியாக இருந்திருந்தால், எல்லாவற்றையுமே அது மிதித்து நாசப்படுத்தி இருக்கும். இல்லை, நமது முலாம்பழங்களை ஒரு குள்ளநரிதான் சாப்பிட்டிருக்கிறது. எல்லாப் பழங்களிலும் நன்கு பழுத்ததை மோப்பம் பிடித்து தின்னும்; மிகவும் நாசூக்கானது.''

''ஆ! மறுபடியும் அதே குள்ளநரி!'' என்று அர்ஸ்லான் கத்தினான். ''முதலில் அது முள்ளெலியை விழுங்கியது, இப்போது நமது முலாம்பழங்களைத் தின்று கொண்டிருக்கிறது. தாத்தா, அதற்கு கண்ணி வைய்யுங்கள்.''

''கண்ணியில் பிடிபடாத அளவுக்கு குள்ளநரிகள் மிகவும் புத்திசாலித்தனமானவை; ஏதோ ஒரு அப்பாவி காட்டு விலங்கு கண்ணியில் மாட்டி மடிந்து போகும். நாம் சோளக்கொல்லை பொம்மை ஒன்று வைப்போம். குள்ளநரி ஆள் இருப்பதாக நினைத்து விலகிப் போகும்.''

இது போலவேதான் அவர்கள் செய்தார்கள். தேநீர் பருகிய அவர்கள், குள்ளநரி இனம் முழுவதையும் அச்சுறுத்தி விரட்ட, காய்ந்து போன நாணல்களால் ஒரு சோளக்கொல்லை பொம்மை செய்தார்கள்.

# மூன்றுவிரல் பெண் ஓநாய்

சூரியன் மறைந்தவுடன் தாத்தாவும் பேரனும் தூங்குவதற்காகப் படுத்தார்கள். மணியும் வில்லோ மரங்களுக்குக் கீழே படுத்துக்கொண்டது.

அன்று நடந்த அனைத்தையும் நினைத்தவாறு அர்ஸ்லான் படுத்திருந்தான். தனது வாழ்விலேயே அதுதான் சிறந்த நாளாக அவனுக்குத் தோன்றியது. அன்று அவனும் அவனுடைய தாத்தாவும் உண்மையான கண்டுபிடிப்பாளர்கள்.

திடீரென்று குள்ளநரியின் பலமான ஊளை கேட்டது. ஆட்டுக்குட்டியினுடைய மணி எச்சரிக்கையுடன் ஒலித்தது.

''மணி! மணி!'' அர்ஸ்லான் அழைத்தான்.

குட்டி மறைவிடத்திற்கு விரைந்து வந்து தனது இளம் எசமானனுக்கு அருகே படுத்துக்கொண்டது. அர்ஸ்லான் மணியினுடைய நெற்றியைத் தடவிக் கொடுத்து விட்டு ஒருபுறமாகத் திரும்பிக்கொண்டான். திடீரென்று அவனது கண்கள் அகல விரியக் கேட்டான்:

''தாத்தா! குள்ளநரிகள் நம்மைத் தாக்காது என்பது நிச்சயமா?''

''தாக்காது, பேரனே! அவை பயந்தாங்கொள்ளிக் கூட்டம்.''

''ஓநாய்கள் வந்தால் என்ன?''

''ஓநாய்கள் கோடையின் போது மனிதர்களைத் தாக்காது.''

''மூன்றுவிரல் பெண் ஓநாயைப் பற்றி நீங்கள் எனக்குச் சொன்ன கதை நினைவிருக்கிறதா? அதைத் திரும்பச் சொல்லுங்கள்!''

''நேரமாகிவிட்டது. நாளைக்கு உன்னை நான் அதிகாலையில் எழுப்புகிறேன்.''

''தாத்தா!'' அர்ஸ்லான் கெஞ்சினான். ''இந்த ஒரு கதையை மட்டும் எனக்குச் சொல்லுங்கள். மேற்கொண்டு எதையும் நான் கேட்கமாட்டேன்.''

''சரி'' ரகீம் தாத்தா ஒப்புக்கொண்டார். ''இது வெகுகாலத்திற்கு முன்னால் நடந்தது.''

''எவ்வளவு நாளைக்கு முன்னால்?''

''சொல்கிறேன். நமது ஊர் ஏற்படுவதற்கு முன்னால். அப்போது பள்ளி இல்லை, டிராக்டர்களோ வாகனங்களோ கிடையாது.''

''சைக்கிள்கள்?''

''சைக்கிள்கள் கூட கிடையாது. அந்த நேரத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் எல்லாரும் படித்த ஒரு விசேடப் பள்ளிக்கு நான் போய்க் கொண்டிருந்தேன். அந்த ஆண்டுகளில் எழுதவும் படிக்கவும் தெரிந்த ஓர் ஆள்கூட நமது கிராமத்தில் கிடையாது. பள்ளிக்கூடம் பக்கத்து கிராமத்தில் அமைந்திருந்தது. சாலையில் போவது நீண்ட தூரம்; ஆகவே குறுக்குவழியில் போவோம். ஒருநாள் அந்த வழியில் விநோதமான மூன்றுவிரல் தடத்தைப் பார்த்தோம். ஒன்று ஓநாயாக இருக்க வேண்டும் அல்லது பெரிய நாயாக இருக்க வேண்டும். நமது கிராமத்தில் மூன்றுவிரல் நாயே கிடையாது. சிறிது நேரங்கழித்து பறவை வேட்டைக்கு வந்த இரு இளைஞர்கள் நாணலுக்கு மத்தியில் ஓநாய்க் குகையைக் கண்டனர்.''

‘‘குகையில் மூன்று குட்டிகள் இருந்தன!’’ என்றான் அர்ஸ்லான்.

‘‘சரி. குட்டிகள் அநேகமாக நன்கு வளர்ந்து இருந்தன. அவற்றை எடுப்பதற்குப் பையன்கள் பயந்து, கிராமத்திற்குத் திரும்ப ஓடினார்கள். இதைப் பற்றிப் பேசி, ஒன்றுசேர்ந்து, துப்பாக்கிகளில் தோட்டாக்களை நிரப்பிக்கொண்டு வருவதற்குள் பெண் ஓநாயும் அதன் குட்டிகளும் மறைந்து விட்டன. ஆனால் மறுநாள் பட்டியிலிருந்து ஆட்டுக்குட்டி காணாமற் போனதை கண்டுபிடித்தார்கள். அடுத்த நாள் ஒரு செம்மறியும் அதற்கும் அடுத்த நாள்களில் வேறு சிலவும் காணாமற் போயின.’’

‘‘தாத்தா! மூன்றுவிரல் பெண் ஓநாய் நன்கு கொழுத்த செம்மறிகள் பத்தை இழுத்துப் போய்விட்டது’’ என்று சொல்பவரைத் திருத்தினான் அர்ஸ்லான்.

‘‘அப்படித்தான், பேரா! அம்முறையில் தான் நடந்தது. பெண் ஓநாய்க்காகப் பகலும் இரவும் வேட்டையாடினார்கள், ஆனால் எந்த வெற்றியும் இல்லை. பிறகு மேய்ப்பர்கள் வந்து கிராமத்தினர்க்கு விஷயங்களை விளக்கினார்கள். கிராமத்தினர் பெண் ஓநாயைப் பயமுறுத்தி விரட்டியிருக்கவே கூடாது. கிராமத்தின் அருகே வசித்தபோது, வீட்டு விலங்குகளை அது தொட்டதே இல்லை, அது ஸ்டெப்பியில் வேட்டையாடியது. ஆனால் பெண் ஓநாய் அறிவுமிக்கது. ஆட்டுப்பட்டிகளுக்குச் செல்கிற எல்லாப் பாதைகளும் அதற்குத் தெரியும். நன்கு வளர்ந்த தனது குட்டிகளை ஸ்டெப்பிக்குள்ளாக விடும்போது, அது கிராமத்திலேயே வேட்டையாடத் தொடங்குகிறது. அது தந்திரமான வேட்டைக்காரி.’’

‘‘அது பிடிபடவே இல்லை’’ தாத்தாவினுடைய கதையை முடிப்பது போல அர்ஸ்லான் சொன்னான்.

‘‘அது சரி, அவர்கள் அதைப் பிடிக்கவே இல்லை. இப்போது உனக்குத் தூங்கப் போகும் நேரம்.’’

வசதியாக இருக்க முயன்றபடி நிம்மதியின்றி புரண்ட அர்ஸ்லான் பிறகு அமைதியாக இருந்தான். ஆனால் அவன் தூங்கிவிடவில்லை. வெளியே விநோதமான ஒடித்தல் ஓசையைக் கேட்டான். முதலில் ஓர் இடத்திலும் பிறகு மற்றோர் இடத்திலும் கேட்டது, நிலத்தில் ஓடுவது போல அது இருந்தது. அர்ஸ்லான் முழங்கைகளால் தன்னைத் தாங்கி நிறுத்திக் கொண்டு இருட்டுக்குள்ளாக உற்றுப் பார்த்தான். எந்த நெருப்பும் காணப்படவில்லை. ஒருவேளை குள்ளநரிகள் மறைவிடத்தை நோக்கி ஊர்ந்து வரலாம், அல்லது இன்னும் மோசமாக தந்திரக்கார ஓநாய்களாகவும் இருக்கலாம்.

‘‘தாத்தா, அந்த ஓசையைக் கேட்கிறீர்களா?’’

‘‘ஆமாம், பேரனே. முலாம்பழங்கள் படபடக்கின்றன. அவை பழுக்கின்றன.’’

அர்ஸ்லான் புன்னகை செய்தான், திரும்பப்படுத்து முறுவலித்தபடி சீக்கிரமே நன்கு தூங்கிப் போய்விட்டான்.



# முள்ளம்பன்றி

''அர்ஸ்லான்! எழுந்திரு!''

அர்ஸ்லான் தனது கண்களைத் திறந்தான். சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. குட்டியினுடைய கணீரென்ற மணி ஓசை கேட்டது. பக்கத்துப் புதர்களின் இலைகளை அந்தக் குட்டி அதிகாலையிலிருந்து மேய்ந்து கொண்டிருந்தது.

''எல்லாவிதமான காட்டு விலங்குகளையும் நீ பார்க்க விரும்பியதாகச் சொன்னாய்'' என்றார் தாத்தா. ''ஆகவே நாம் காலை உணவாக ஒரு முலாம்பழமும் கொஞ்சம் தேநீரும் சாப்பிடலாம்; பிறகு விலங்குகள் சிலவற்றை நான் உனக்குக் காட்ட முயல்கிறேன். நீ இன்னமும் தூங்கிக் கொண்டிருந்ததால் நான் வெளியே போய் ஒன்றைக் கண்டுபிடித்தேன்...''

''அது ஓடிப் போவதற்கு முன்னால் நாம் விரைந்து போகலாம்!'' என்று அர்ஸ்லான் கத்தினான்.

''அது எங்கேயும் ஓடிப் போகாது. பழைய முள்ளம்பன்றி வளை ஒன்றைப் பார்த்தேன்.''

முள்ளம்பன்றியினுடைய வளை மிகவும் சிறப்பானது: மூன்று தனிப்பட்ட அறைகளைக் கொண்டது. அப்பாவும் அம்மாவும் முதலாவதிலும் குட்டிகள் இரண்டாவது அறையிலும் வசிக்கின்றன. சாமான்களைப் பாதுகாக்க மூன்றாவது அறை பயன்படுகிறது.

வளை சிதைந்து மூன்று அறைகளுமே வெளித்தெரிந்தன. சாமான் வைக்கும் அறையில் இன்னமும் வேர்களும் கிழங்குகளும் ஒழுங்காக இருந்தன.

''அவை மக்களைப் போலவே வசிக்கின்றன!'' என்று வியந்து சொன்னான் அர்ஸ்லான்.

''முன்னொரு காலத்தில் முள்ளம்பன்றி மனிதனாக இருந்தது'' என்றார் தாத்தா. ''அந்தத் துயரக் கதையை மெங்லி பாட்டி உனக்குச் சொல்லவில்லை?''

''இல்லை.''

''அவ்வாறானால் கேள். மிகமிக நீண்ட காலத்திற்கு முன்னால் ஒரு மனிதன் தனது அண்டைவீட்டானிடமிருந்து இரண்டு கம்பளி நூற்கண்டுகளைக் கடனாக வாங்கினான். ஆனால் தனது கடனைத் திருப்பிச் செலுத்த நேரம் வந்தபோது, அவன் பேராசைப்பட்டு, ஒரு நூற்கண்டை முன்பு இருந்ததை விடச் சிறிதாகச் செய்தான். அண்டை வீட்டுக்காரனோ இந்த வஞ்சகத்தை உடனடியாகப் புரிந்துகொண்டு கோபமடைந்தான். சிறிய நூற்கண்டில் கோணி ஊசியைச் சொருகி ஏமாற்றியவன் மீது எறிந்து சொன்னான்: 'இந்தக் கோணி ஊசி உனது உடலை ஓர் அம்பு போலத் துளைக்கட்டும்!'

''இந்த நூற்கண்டு அந்த மனிதனின் உடலைத் தொட்ட உடனேயே அவனது உடம்பு முழுவதும் அம்புபோன்ற முள்களால் மூடப்பட்டது. அத்தகைய நிலையில் மற்றவர்களுக்கு முன்னே வர வெட்கப்பட்டு, யாரும் தன்னைப் பார்க்காத ஓர் இடத்திற்கு வெகுதூரத்திற்குச் சென்றான். இன்று வரை, அவனது மரியாதைக் குறைவான

செயலுக்கு வெட்கப்பட்டு, இரவில் எல்லாரும் தூங்குகின்ற போது மட்டுமே அவன் தனது வளையைவிட்டு வெளியே வருகிறான்.''

''பாருங்கள், தாத்தா! முள்ளம்பன்றியின் முள்!'' என்று அர்ஸ்லான் கத்தினான். ''அது துல்லிதமாக கோணி ஊசி போலவே காணப்படுகிறது! அதை நான் எடுக்கலாமா?''

''எடுத்துக் கொள்'' என்றார் தாத்தா. ''ஒரு நினைவுப் பொருளாக அதை வைத்துக்கொள். பேராசைப்பட வேண்டும் என்று நீ உணர்ந்தால், இந்தச் சோகக் கதையை நினைவு வைத்திரு.''



## சண்டை

ரகீம் தாத்தாவும் அர்ஸ்லானும் மணியுடன் தீவின் மையப்பகுதியை நோக்கிச் சென்றார்கள். அங்கே கடந்த வசந்தகால வெள்ளத்தின் போது காட்டு முயல்கள் காப்பாற்றப்பட்ட அதே வில்லோ மரம் இருந்தது.

திடீரென்று ரகீம் தாத்தா அர்ஸ்லானுடைய கையைப் பற்றி கிசுகிசுத்தார்:

"படு!"

இருவரும் ஓசையின்றி தரைமீது படுத்தார்கள். பைனாக்குலர் வழியாகப் பார்த்த தாத்தா அதை அர்ஸ்லானிடம் கொடுத்தார்.

"களை மண்டிக்கிடக்கும் அந்தக் குன்றைப் பார்!" என்று தாத்தா கிசுகிசுத்தார்.

பைனாக்குலரில் கூர்ந்து நோக்கிய அர்ஸ்லான் லேசாகப் பெருமூச்சுவிட்டுச் சொன்னான்:

"வளைக்கரடி!"

மறுகணமே வளைக்கரடித் தனியாக இல்லை என்பதைக் கண்டான். ஒரு குள்ள நரியானது சிறிய, பருத்த விலங்கைத் தாக்கிக் கொண்டிருந்தது.

தனது பற்களை வளைக்கரடி மீது பதிக்க குள்ளநரி முயன்றது. ஆனால் சிறிய விலங்கோ ஒரு பந்து போலத் தாவி குள்ளநரியினுடைய பாதங்களை விட்டு விலகி அப்பால் உருண்டது. அது குள்ளநரியைத் தவிர்த்தது மட்டுமல்லாது அதைத் தாக்கவும் செய்தது. தனது பின்னங்கால்களில் நின்றவாறு குள்ளநரியினுடைய மூஞ்சியைத் தனது கூரிய நகங்கொண்ட முன்னங்கால்களால் பற்றியது.

"தாத்தா, நாம் விரைந்து வளைக்கரடியைக் காப்பாற்றலாம்!" என்று அர்ஸ்லான் கத்தினான்.

"நமது உதவி இன்றியே அது சமாளித்துக் கொள்ளும்" என்று பதிலளித்த தாத்தா, சண்டையை பைனாக்குலர் வழியாகக் கவனித்தார். "கொழுத்த வளைக் கரடியை அப்படியே விழுங்க குள்ளநரி விரும்புகிறது, ஆனால் அதற்குப் போதிய வலி மை இல்லை. கஷ்டப்பட்டு நிற்கவே அதனால் முடியும்."

உறுதிப்படுத்துவது போல, குள்ளநரி திடீரென்று தனது பக்கவாட்டில் புரண்டது. வளைக்கரடி தனது முன்னங்கால்களால் இறுதி அடி கொடுத்துவிட்டு வேகமாய் ஓடிப்போனது. தனது காயங்களை நக்கிக் கொண்டு, குள்ளநரி புதர்களுக்குள்ளாக ஊர்ந்து சென்றது.

"எவ்வளவு அதிசயங்களை நாம் பார்த்திருக்கிறோம்!" என்று தன் குட்டியிடம் சொன்னான் அர்ஸ்லான். "நீ எண்ணிப் பார்! நாம் வளைக்கரடியுடன் குள்ளநரியின் சண்டையைப் பார்த்தோம். முள்ளம்பன்றியின் வளையைப் பார்த்தோம். அழகிய காட்டுப் பறவைகளைப் பார்த்தோம். முலாம்பழங்கள் பழுப்பதைக் கூடக் கேட்டோம்."

## அதிசயம்

அவர்கள் மேலும் நடந்து சென்றார்கள்.

''ஆச்சரியங்களைப் பற்றி நீ பேசிக் கொண்டிருந்தாய்'' ரகீம் தாத்தா தொடங்கினார். ''ஆனால் ஒருமுறை நான் உண்மையான அதிசயம் பார்த்தேன்.''

''அது எப்படி இருந்தது?'' கண்கள் மின்ன, அர்ஸ்லான் கேட்டான்.

''அது அவ்வளவு நீண்ட காலத்திற்கு முன்பு அன்று, ஆனால் நீ பிறப்பதற்கு முன்புதான். அன்று வானம் தெளிவாக இருந்தது. திடீரென்று புயல் மேகம் சூழ்ந்து வந்தது. முதலில் மழைபெய்தது, பிறகு ஆலங்கட்டி மழையாகத் தொடங்கி, ஆலங்கட்டி மழையுடன் தவளைகள், மீன்கள் வானத்திலிருந்தும் சிதறிக் கீழே விழுந்தன!''

''வானத்திலிருந்தா?!'' நம்பாதவாறு அர்ஸ்லான் கேட்டான்.

''ஆமாம்! பிறகு மண்டல மையத்திலிருந்து ஒரு விரிவுரையாளர் கிராமத்திற்கு வந்து அத்தகைய நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதை விளக்கினார். ஒரு வலிமையான சுழற்காற்று ஏரியில் எதிர்பாராது அடித்து நீரையும் அந்த ஏரியில் இருந்த எல்லாச் சிறிய உயிரிகளையும் உறிஞ்சிக்கொண்டது. அவற்றைத் தொலைதூர இடத்திற்கு எடுத்துச் சென்றது. அது தனது வலிமையை இழந்தபோது, எல்லா உயிரினங்களும் பூமியில் மழையாகப் பெய்தன. அதிசயம் இல்லையா?''

''ஆமாம்!'' என்றான் அர்ஸ்லான். ''இது மாதிரி மழையைப் பார்க்க நான் ஆசைப்படுகிறேன்.''

''என்னைப் போல நீண்ட காலம் நீயும் வாழ்ந்தால், எல்லாவற்றையும் பார்ப்பாய்'' என்று ரகீம் தாத்தா உறுதி தந்தார்.

## சூடான மணல்

தாத்தாவும் பேரனும் சரிவின் மீது ஏறி உயரமான மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள்.

அனுகூலமான உச்சியிலிருந்து அவர்களால் அமுதாரியாவையும் தீவைச் சுற்றியுள்ள கிளையாற்றி பிறைவடிவத்தையும் காண முடிந்தது. செம்மறியாட்டு மந்தைகளும் காணப்பட்டன. கிளையாற்றின் கரைகள் பசுமையாக இருந்தன, ஆனால் தீவு முழுவதும் ஒரு பாலைவனச் சோலையாக இல்லை. தெற்கிலிருந்து சரிவு வரை மஞ்சள் நிற மணல் கிடந்தது.

சூரியன் உச்சியில் இருந்தது. இலையுதிர்காலம் என்றாலும் பகல் ஒரே புழுக்கமாக இருந்தது.

ரகீம் தாத்தா தனது பையினின்றும் உணவை எடுத்தார்.

அர்ஸ்லான் தனது ரொட்டியை இரண்டாக்கி, ஒரு பாதியை மணிக்குக் கொடுத்தான்.

‘‘வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டதா உனக்கு?’’ எனக் கேட்டார் தாத்தா.

‘‘ஆ-மா-ம்’’ அர்ஸ்லான் இழுத்தான்.

‘‘நாளைக்கு நாம் வீடு திரும்புவோம்’’ என்றார் ரகீம் தாத்தா. ‘‘கொஞ்சம் குளிர்ச்சியடையும் போது நான் போய் நமது மந்தையைப் பார்க்கிறேன். அங்கே செம்மறிகள் எப்படியிருக்கின்றன என்பதைக் காண வேண்டும். நாளைக் காலையில் சோளு விதைகளைச் சேகரித்துக் கொண்டு, படகில் நாம் வீடு திரும்பலாம்.’’

ரகீம் தாத்தாவும் அர்ஸ்லானும் மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, சரிவின் அடிவரை இறங்கிப் போய் குட்டி இளந்தளிர்களை மேய்ந்தது. திடீரென்று அது கத்தியவாறு தாவி, அர்ஸ்லானும் அவனது தாத்தாவும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு விரைந்து ஓடியது.

‘‘குள்ளநரியா?’’ அச்சமுற்ற குரலில் அர்ஸ்லான் கேட்டான்.

‘‘காட்டு முயல்!’’ என்று புன்னகையுடன் தாத்தா சொன்னார். ‘‘ஒரு காட்டு முயலைக் கண்டு மணி பயந்துவிட்டது. அதைப் பார்க்கிறாயா?’’

அச்சத்தால் மணலுக்குத் துள்ளி வந்த முயல் திறந்த வெளியின் ஊடாகச் சென்றது.

‘‘காட்டு முயல்குட்டியைப் பிடிக்க விருப்பமா?’’ தாத்தா கேட்டார்.

‘‘ஆமாம்!’’

‘‘அப்படியானால் ஓடி அதைப் பிடி!’’

‘‘ஆனால் என்னால் அதை எட்டிப்பிடிக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும்’’ என்று அர்ஸ்லான் மனத்தாங்கலுடன் கூறினான்.


‘‘நிச்சயமாக உன்னால் முடியும். அது குட்டிதான். அது அச்சத்தால் மணலில் குதித்து ஓடுகிறது. ஆனால் மணல் சூடாக இருக்கிறது. அதனது பாதங்களை அது பொசுக்கிவிடும். அதனால் தொலைதூரம் ஓட முடியாது.’’

அர்ஸ்லான் காட்டு முயலைத் துரத்திச் சென்று பிடித்து விட்டான். தன்னைத் துரத்தி வந்தவனைப் பார்த்த காட்டு முயல் சில தாவல்கள் தாவியது, ஆனால் மணல் வாட்டிக் கொண்டிருந்தது. தரையில் பணிவுடன் படுத்துவிட்டது.

அர்ஸ்லான் தனது சட்டையால் அதை மூடி, சரிவுக்கு எடுத்து வந்தான்.

‘‘அது சுதந்திரமாக ஓடட்டும்!’’ என்ற அர்ஸ்லான் காட்டு முயலை விடுவித்தான். என்னிடம் மணி இருக்கிறது.’’

‘‘இந்த வழி சிறந்தது’’ என்று தாத்தாவும் ஒப்புக்கொண்டார். ‘‘அது சுதந்திரமாக ஓடட்டும்.’’



## துணிவுச் சோதனை

ரகீம் தாத்தாவும் அர்ஸ்லானும் இல்லாத நேரத்தில், மெங்லி பாட்டி துப்புரவு செய்யும் வேலையை மேற்கொண்டாள். பார்ப்பதற்கு அது இன்னமும் முடியாதது போலத் தெரிந்தது. விரிப்புகளும் கம்பளிகளும் முற்றத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. சுவரில் சாய்த்தவாறு ஒரு பெரிய கண்ணாடி வைக்கப் பட்டு இருந்தது.

''மே-மே-மே!'' என்று மணி கோபத்துடன் கத்தியது. அது கண்ணாடி வரை பாய்ந்து சென்று... கழுத்தில் மணியுடன் ஓர் ஆட்டுக்குட்டியைப் பார்த்தது.

இரண்டு குட்டிகள் சேர்ந்தால் எப்போதுமே தொல்லைதான் ஏற்படும்.

மறுகணமே அர்ஸ்லானுடைய சாந்தகுணம் கொண்ட சிறிய நண்பன் கண்ணாடிக்குச் சற்று பின்னே விலகி, தலையை ஆட்டி முழு வேகத்தோடு எதிரி மீது பாய்ந்தது. அந்தக் குட்டியும் தனது எதிரி மீது பாய்ந்தது. 'படார்!' கண்ணாடி சிறு துண்டுகளாகச் சிதறியது.

''மே-மே-மே!'' மணி வருத்தத்தோடு கத்தியது.

குற்றவாளியைத் தண்டிக்கும் நோக்கத்தில் பாட்டி ஒரு துடைப்பத்தை எடுத்தாள், ஆனால் தாத்தா பாட்டியைத் தடுத்துவிட்டார்.

''ஏன் அதை அடிக்க வேண்டும்? அது துணிச்சலான குட்டி! எதிரியிடம் அது பின்வாங்கவில்லை.''

அர்ஸ்லான் தனது நண்பனைக் கட்டித் தழுவிச் சொன்னான்:

''பாட்டி, அது இன்னமும் சிறிய குட்டிதான்! பல விடியங்கள் அதற்குப் புரியவில்லை.''

மெங்லி பாட்டி சற்று நேரம் சிந்தித்துவிட்டு கடைசியில் முடிவு செய்தாள்:

''எப்படியும் கண்ணாடி பழையது, கருத்துப் போனது. புதிதாக ஒன்று வாங்கியிருக்க வேண்டிய நேரம். அதில் பார்க்கின்ற போது ஒருவேளை நாம் மீண்டும் இளமையாகலாம்.''

## தேவதைக் கதைகள்

குளிர்காலம் வந்துவிட்டது. நிலம், வானம், நதி எல்லாமே சாம்பல் நிறமாகி விட்டன.

அர்ஸ்லான் விடியும் முன்பே விழித்தெழுந்தான். தொலைவில் காற்று ஊளையிடுவதை அவனால் கேட்க முடிந்தது—வெகு தொலைவிலிருந்து வந்தது போலக் காணப்பட்டது, ஒருகால் பூமியின் மறுகோடியிலிருந்து வந்திருக்கலாம்.

''தாத்தா, காற்றா வீசுகிறது?'' எனக் கேட்டான் அர்ஸ்லான். ''அநேகமாகப் பனி விழுமே, சரியா?''



''இல்லை, பேரனே, அது காற்று இல்லை. அவை ஓநாய்கள். நான் பட்டிக்குப் போய் செம்மறிகளைப் பார்த்து வருவது நல்லது.''

தாத்தா தனது கோட்டையும் காலணிகளையும் அணிந்து கொண்டு சுவரில் மாட்டியிருந்த தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டார்.

''மணியையும் பாருங்கள்!'' என்ற அர்ஸ்லான் இருட்டில் வெளியே செல்லப் பயந்தான்.

''போய்த் தூங்கு'' என்றார் ரகீம் தாத்தா. ''பொழுது விடிய இன்னும் நேரமிருக்கிறது.''

''குளிர்காலம் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது'' என்று அர்ஸ்லான் அரைத் தூக்கத்தில் எண்ணினான். ''வசந்தகாலம் வராதா என்று ஆசைப்படுகிறேன்.''

பனி இல்லாமல் நாள்கள் கடந்தபோது, குளிர்காலம் சோர்வானதாகவும் உற்சாகமற்றதாகவும் காணப்பட்டது. ஆனால் குளிர்காலத்தின் போதும் நல்ல நாள்கள் இருந்தன. அப்போது குழந்தைகள் மெங்லி பாட்டிக்கும் கிராமத்து பிற பெண்களுக்கும் கம்பளியைப் பிரித்து நூற்கத் தயார் செய்தார்கள். நிறையக் கதைகளை அந்நேரங்களில் கேட்க முடிந்தது.

அர்ஸ்லான் கதை கேட்க வரும் போது எப்போதுமே மணியையும் அழைத்து வந்தான். குட்டியோ கதவுப் பக்கத்தில் சுருண்டு படுத்து தனது தலையை முன்னங்கால்களின் மீது வைத்து வெதுவெதுப்பில் சிறுதூக்கம் போட்டது.

இன்று ரகீம் தாத்தாவினுடைய வீட்டில் பெண்கள் திரும்பவும் ஒன்றுகூடி இருந்தார்கள். குழந்தைகள் கம்பளியைப் பிரித்துக் கொடுத்தார்கள். மெங்லி பாட்டி நூற்புக்கதிரை சுழலச் செய்து நூற்கத் தொடங்கினாள். ஒரு கதை ஆரம்பமானது.

''முன்னைய காலங்களில், எனது பிள்ளைகளே,'' என்று பாட்டி தொடங்கினாள், ''எதிரிகள் நமது கிராமங்களை எப்போதுமே தாக்கிக் கொண்டிருந்தார்கள். நமது கிராமத்து மக்களுக்கு அது மிகவும் கஷ்டமான நேரம். ஆனால் கிராமத்துப் பையன்களில் ஒருவன் வலிவும் துணிவும் மிக்க இளைஞனாக வளர்ந்தான். அவனது துணிச்சல் காரணமாக மக்கள் அவனை வீரன் எனப் பொருள்படும் பதீர் என்று அழைத்தார்கள். நமது கிராமத்தை விட்டு எதிரிகள் விலகி இருக்கத் தொடங்கினார்கள். ஆனால் சிறிது காலத்திற்கே மக்கள் அமைதியைக் கண்டார்கள். ஸ்டெப்பியிலிருந்து ஒரு தீய சக்தி வந்தது. பதீர் தனது கொடுவாளை எடுத்துக்கொண்டு ஒரு குன்றின் மீது ஏறினான். அங்கிருந்து ஆற்றுக்கு அப்பால் பார்த்த போது, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஸ்டெப்பி முழுக்க எதிரிகள் குதிரைகளுடன் நிறைந்து காணப்பட்டார்கள்.

''ஆகவே பதீர் ஒரு முதிய வில்லோ மரத்திடம் சென்று கேட்டான்: 'அன்புக்குரிய வில்லோவே, என்னை ஒளித்துவை'. பதீருக்கு முன்பாக மரம் திறந்து அவனை ஒளித்து வைத்தது. இதற்கிடையே எதிரிகள் பதீர் இருப்பதைக் கண்டுபிடித்து, குன்றின் மீது படையெடுத்தார்கள். ஆனால் அவர்கள் உச்சியை அடைந்த போது, பதீர் எங்குமே காணப்படவில்லை.

''அந்நேரத்தில், துரதிருஷ்டம் காரணமாக அங்கே ஒரு காக்கை வந்தது. அது மரத்திலிருந்து வெளியே தொங்கிய பதீருடைய அங்கியின் சிவப்புப் பின்னல்களை பார்த்துவிட்டது. அவற்றைத் தனது அலகால் இழுக்கத் தொடங்கியது. அவை இழுக்க

வராமல் போகவே, அது கிறீச்சிட்டுக் கரையத் தொடங்கியது. ஆகவே எதிரிகளும் சிவப்புப் பின்னல்களைக் கண்டுகொண்டார்கள். பதீர் மரத்தில் மறைந்திருக்கிறான் என்பதை அவர்கள் உடனே புரிந்துகொண்டார்கள். கொடுவாள்களாலும் கோடரிகளாலும் வில்லோ மரத்தை வெட்டத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களால் மழுங்கச் செய்ய மட்டுமே முடிந்தது. வில்லோ மரம் அவர்களது அடிகளுக்குப் பிளக்கவில்லை. அப்போது அவர்கள் மரத்தைச் சுற்றிலும் காய்ந்த குச்சிகளைப் பரப்பி பெரு நெருப்பு ஒன்றை மூட்டினார்கள். அதன் பிறகு தங்களுக்குள் சிரித்தவாறு, அவர்கள் புறப்பட்டார்கள். பதீரைத் தீர்த்துக்கட்டிவிட்டதாக நினைத்துக்கொண்டார்கள். ஒரு சிறிய தூக்கணாங்குருவி மட்டும் இல்லாதிருந்தால், பதீர் மடிந்து போயிருப்பான். அது தனது அலகில் நீர் கொண்டுவந்து நெருப்பில் ஊற்றத் தொடங்கியது. எதிரிகளும் தூக்கணாங்குருவியைக் கவனித்தார்கள். ஆனால் அது நெருப்பைச் சுற்றி வட்டமிடுவதற்குக் காரணம் மரத்தில் அதனது கூடு இருக்கும் என்று நினைத்தார்கள். பார்வையினின்றும் அவர்கள் மறைந்து விட்டார்கள். ஆனால் தூக்கணாங்குருவியோ நெருப்பை அணைக்கின்ற வரை தொடர்ந்து நீரைத் தெளித்தது. எந்தத் தீங்குமின்றி உயிருடன் பதீர் மரத்தை விட்டு வெளியேறினான்.

''அன்றிலிருந்து மக்கள் காக்கையை வெறுத்தார்கள். அதனது துரோகத்திற்கு இரண்டு முறை தண்டிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். முதலாவதாக, மற்ற பறவைகளை விட முன்னதாக அது குஞ்சு பொரிக்கிறது; அதனது குஞ்சுகள் குளிரில் அடிக்கடி மடிந்து போகின்றன. இரண்டாவதாக, அது தனது அலகு வழியாக முட்டைகள் இடுகிறது என்கிறார்கள்.''

இச்சமயத்தில் மெங்லி பாட்டி புன்னகை செய்தாள்.

''எனினும், அதில் உண்மை இல்லை. காக்கை பெரிய திருடி. மற்ற பறவைகளின் கூடுகளிலிருந்து அது முட்டைகளைத் திருடுகிறது. இதைக் கவனித்த மக்கள் தங்களுக்கு ஏற்ப விளக்கம் கொடுத்தார்கள்.''

''ஆனால் தூக்கணாங்குருவியைப் பற்றி என்ன?'' என்றான் அர்ஸ்லான்.

''தூக்கணாங்குருவி துருக்மேனிய மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. வசந்தத்தில் அது திரும்பி வரும் போது ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைகின்றனர். தூக்கணாங்குருவியின் கூட்டைச் சிதைக்க வேண்டும் என்று போக்கிரிப் பையன்கள் கூட நினைப்பதில்லை.''

## அர்ஸ்லானிடம் தாத்தாவின் பரிவு

''அர்ஸ்லான்! நீ தூங்கிப் போய்விட்டாய்!'' என்று சொல்லி பாட்டி தன் பேரனை எழுப்பினாள். ''எழுந்து மணியை வெளியே பட்டிக்குக் கூட்டிச்செல், பிறகு படுக்கையில் படுத்துக்கொள்.''

அர்ஸ்லான் தனது கோட்டு, தொப்பி இவற்றை அணிந்துகொண்டு தனது குட்டியை பட்டிக்குக் கூட்டிச் சென்றான்.

வெளியே மழையாகவும் இருளாகவும் இருந்தது. குளிர்காற்று மழையை அவனது முகத்துக்கு நேராக வீசி கழுத்துப் பட்டைக்குக் கீழாகக் கசிந்தொழுகச் செய்தது. குளிராலும் அச்சத்தாலும் நடுங்கிக்கொண்டு, அர்ஸ்லான் பட்டிக்குச் செல்லும் அகன்ற மரக் கதவுகளைத் தள்ளி மணியை நோக்கிக் கத்தினான்:

''உள்ளே போ!''

பிறகு அவன் வீட்டிற்குத் திரும்ப ஓடினான்.

ஆனால் நடந்தது என்னவென்றால், கதவுகள் திறக்கப்படவில்லை. அர்ஸ்லான் அவற்றைத் தள்ளியபோது அவை அசைய மட்டுமே செய்தன. பட்டிக்கு வெளியே இரவைக் கழிக்கும்படி மணி விடப்பட்டது. இரவிலே அங்கே ஓநாய்கள் பதுங்கித் திரிந்தன.

மறுநாள் காலையில் நடந்து போன பயங்கரமான விஷயத்தைக் கண்டபோது ரகீம் தாத்தா கண்ணீர் வடித்தார்: மணி உயிருடன் இல்லை என்பதை தன் பேரனிடம் அவர் எப்படிச் சொல்வார்? அவர் அங்கே நின்ற போது பட்டியை நோக்கி ஓடிவந்த அர்ஸ்லான் கேட்டான்:

''தாத்தா, மணி எங்கே?''

''உனது மணி தொலைதூரத்தில் உள்ளது'' என்று ரகீம் தாத்தா ஒரு பெருமூச்சுடன் பதிலளித்தார். ''நேற்று மாலை நீ கதவுகளைத் தள்ளினாய், ஆனால் அவற்றை நீ திறக்கவில்லை. பட்டிக்கு வெளியே மணி இரவைக் கழித்தது. இன்று அதிகாலையில் ஸ்டெப்பியிலிருந்து மான்கூட்டம் இங்கே வந்தது. அவை மணியை விரும்பி, அகன்று விரிந்த ஸ்டெப்பிக்குத் தங்களுடன் அதையும் கூட்டிச் செல்வதென்று முடிவுசெய்தன.''

தன் தாத்தா சொல்வதைக் கேட்க அர்ஸ்லானுடைய கண்கள் விரிந்தன. கன்னங்களில் கண்ணீர் நீரூற்றுப் போலக் கொட்டியது.


''தாத்தா, அது எப்போது திரும்பி வரும்?''

''அது உன்னுடன் கோபம் கொள்ளவில்லை என்றால், திரும்பி வரும். என்றாவது அது திரும்பி வரும்'' என்று ரகீம் தாத்தா பொய் சொன்னார். பிறகு அடுப்பை மூட்டப் புறப்பட்டுச் சென்றார்.

அர்ஸ்லான் அங்கேயே நின்று விரைவான ஸ்டெப்பி மான்களையும் அவற்றிற்கு மத்தியில் சாம்பல் நிற ஆட்டுக்குட்டியையும் பார்க்கலாம் என்ற நம்பிக்கையில் ஸ்டெப்பிக்குள்ளாக நோக்கினான்.

# பாலைவனக் கதைகள்





# 'இரு பாப்ளார் மர'க் கிணறு

காராகூம் பாலைவனத்து மணற்பரப்பிற்கு குலி மாமாவுடன் போய்க் கொண்டிருக்கிறேன். மாமா ஒரு மேய்ப்பர்.

ஒருகாலத்தில் மேய்ப்பர்கள் தங்களது மந்தைகளுடன் ஒரே நேரத்தில் மாதக் கணக்காகப் போவார்கள். ஆனால் இப்போது அவர்களால் கார்களில் பயணம் செய்யவும் இருவார முறைகளில் வேலை செய்யவும் முடிகிறது. அடுத்த முறைப் பணிக்கு குலி மாமா தயாராகிக் கொண்டிருக்கிறார். நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்து 'இரு பாப்ளார் மர'க் கிணற்றை அடைய வேண்டி இருக்கிறது. மக்களுக்கு இருப்பது போலவே, பாலைவனத்தில் உள்ள எல்லாக் கிணறுகளுக்கும் பெயர் உண்டு. இந்தக் கிணற்றுக்கு அருகே இரண்டு பாப்ளார் மரங்கள் வளர்கின்றன. பாலைவனத்தில் இந்த இரண்டு மட்டுமே இருப்பதனால் எல்லா மேய்ப்பர்களுக்கும் அவை தெரியும். மேய்ப்பர்களுடைய முகாமில் எங்களுக்காக ஸாரி தாத்தா காத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய வாழ்க்கை முழுக்கத் தனது மந்தைகளுடன் இந்த மணலில் அலைந்தே போய்விட்டது. வசந்தகால ஆரம்பத்தில் 'இரு பாப்ளார்'களுக்குச் செல்லும் அவர், குளிர்காலத்தின் கடைசி வரை திரும்பி வரமாட்டார். துருக்மேனியாவில் குளிர்காலம் சிறிது காலத்திற்குத்தான்.

புத்திசாலி நாய் அக்பாயும் ஒட்டகம் பாயிரும் கூட எங்களுக்காகக் காத்திருக்கின்றன. ஸாரி தாத்தாவுக்கு மட்டும் வயதாகவில்லை; அக்பாய்க்கும் பாயிருக்கும் வயதாகி விட்டது.



# பாலைவனத்தில் வசந்தகாலம்

காராகூம் பாலைவனத்தில் உயிரற்ற, சூடான மணல் மட்டுமே இருக்கிறது என்று அநேகமாக நினைக்கக்கூடும். ஆனால் எப்போதுமே அப்படி இல்லை.

வசந்தகாலத்தில் ஒவ்வொரு புதரும் முட்செடியும் பூக்கின்றன. சரிவுகளில் செந்நிற கசகசாச் செடிகள் பிரகாசிக்கும், சுற்றிலும் பச்சையாக இருக்கும்.

கழுகு ஒன்று தலைக்கு மேலாக வட்டமிட்டது, பெரும்பாலும் பாலைவன அணிலையோ காட்டு முயலையோ கண்டுபிடிக்க முயலலாம்.

கொழுத்த சிறிய பாலைவன கொறிக்கும் விலங்குகள் பாதையை விட்டு ஓடிச் சென்று தங்களது வளைகளுக்குள்ளாக நுழைந்தன.

கைவிடப்பட்ட பழைய கிணறு ஒன்றின் அருகே ஓய்வெடுக்க நாங்கள் நின்ற போது அங்கே ஒரு நல்லபாம்பைப் பார்த்தோம். அது கழுத்தை உயர்த்திச் சீறியது, ஆனால் அதன் அருகே நாங்கள் போகவில்லை. இப்போது பாம்புகள் சட்டத்தால் பாதுகாக்கப் படுகின்றன: அவற்றின் நஞ்சு மருந்து செய்யப் பயன்படுகிறது.

நாங்கள் பாலைவன மான் கூட்டத்தையும் பார்த்தோம். எவ்வளவு விரைந்து அவை ஓடின!

பிறகு பெரிய, பளிச்சிடும் இறகு கொண்ட பறவை ஒன்று எங்களது 'ஜீப்' வண்டிக்கு மேலாக வானில் வட்டமடித்ததை நீண்ட நேரம் கவனித்தோம்.

முகாமை நாங்கள் அடைந்த போது மாலையாகி விட்டது. மிகப் பெரியதும் வெண்ணிறமானதுமான சூரியன் ஏற்கெனவே தொலை தூரத்து மணற்குன்றுகளைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஒரு கம்பளி மீது அமர்ந்தவாறு மேய்ப்பர்கள் வறுத்த ஆட்டிறைச்சியும் தேநீரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

குலி மாமாவை வாழ்த்த எழுந்து நின்ற ஸாரி தாத்தா என் தோள்மீதும் கை வைத்தார்.

செம்மறிகள் ஒன்று சேர்ந்து நெருக்கிக்கொண்டு நின்றன, புதியவர்களைப் பார்க்க தங்களது கழுத்துகளை நீட்டிக் கொண்டிருந்தன. ஸாரி தாத்தாவுடைய உதவியாள் ஒட்டகத்தின் மீது சாமான்களை ஏற்றினார். உணவு, தண்ணீர் மற்றும் பிற பொருள் களையும் ஸ்தெப்பியில் உள்ள இரவு தங்குமிடத்துக்கு அது சுமந்து செல்லும். மந்தை மேயவும் ஓய்வெடுக்கவும் அங்கே நள்ளிரவு வாக்கில் செல்லும்; ஏனெனில் பகல் நேரத் தில் மிகுந்த வெப்பமாக இருக்கும்.

குலி மாமா விரைந்து தனது கனத்த காலணிகளை மாட்டிக் கொண்டார். அவை முட்களினின்று பாதுகாத்துக் கொள்ளவும், இருட்டில் எதிர்பாராதவிதமாக பாம்புகள் தேள்கள் காலைக் கொத்துவதினின்று தடுத்துக் கொள்ளவும் உதவும்.

''உட்கார்ந்து ஓய்வெடு, குலி,'' ஸாரி தாத்தா குலி மாமாவிடம் சொன்னார், ''நீண்ட பயணத்தால் நீ களைத்துப் போயிருக்க வேண்டும்.''

''ஏன், ஏற்கெனவே போதுமான ஓய்வு எடுத்துவிட்டேன், அப்பா, ஸ்தெப்பிக்குள் ளாகப் போகத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.''

''நானும் வரலாமா?'' என்று கேட்டேன்.

‘‘நீ என்னுடன் நாளைக்கு வரலாம்’’ என்று ஸாரி தாத்தா உறுதியளித்தார். ‘‘இன்றைக்கு நாம் கொஞ்சம் தேநீர் பருகிவிட்டு நட்சத்திரங்களைப் பார்க்கலாம்.’’

‘‘எனக்கு ஒரு கதை சொல்வீர்களா?’’

‘‘நிச்சயமாக.’’

## ஸாரி தாத்தாவின் கதைகள்

சூரியன் மறைந்து விட்டது. பாலைவனத்தில் இருள் சூழ்ந்தது.

கூடாரத்திற்குப் பின்னிருந்து என் நண்பன் பாயிர் வந்தது. என்னைத் தெரிந்து கொண்டு நெருங்கியது. நான் அதனது கழுத்தையும் பக்கவாட்டையும் தடவிக் கொடுத்தேன். ஒட்டகம் பெருமூச்சு விட்டு முழங்காலிட்டுப் படுத்தது. அதுவும் கூட ஸாரி தாத்தாவினுடைய கதைகளைக் கேட்க வந்திருந்தது.

ஸாரி தாத்தா மெதுவாகப் பேசினார், தனது சொந்த வார்த்தைகளையே அவர் கேட்பது போல இருந்தது. ஒரு கதையைச் சொல்லி முடித்ததுமே அடுத்ததைத் தொடங்குவார்.

வயதான அக்பாய் இருளில் ஓசையின்றி வந்து ஸாரி தாத்தாவுக்கு அருகே படுத்துக்கொண்டது. கேட்டபடி அது தூங்கிப் போய்விட்டது. அது மிகவும் வயதானது.


‘‘அநேக ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பணக்கார நிலக்கிழார் வசித்தார். அவரிடம் வராளமான செம்மறிகளும் குதிரைகளும் இருந்தன. அவற்றை எண்ணக்கூட அவரால் முடியவில்லை. ஆனால் ஒருவன் பணக்காரன் என்றால் மிகவும் கருமி ஆகிவிடுகிறான் என்பது எல்லாருக்கும் தெரியும். கால்நடையைத் தொலைக்கும் மேய்ப்பனுக்கு இந்த நிலக்கிழார் கொடுமையான தண்டனை வழங்குவது வழக்கம்.’’ ஸாரி தாத்தாவினுடைய குரல் ஓர் ஓடையின் சலசலப்பைப் போல காதுக்கினியதாக இருந்தது. ‘‘ஏழைகளைத் தொடர்ந்து துன்பம் எப்போதுமே வரும். ஒருமுறை, மேய்ப்பர்களில் ஒருவன் கிராமத்திற்குச் சென்று, மந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி தன் மகனை விட்டு வந்தான். ஒரு நாளிலேயே அந்தச் சிறுவன் ஸ்தெப்பியில் இரண்டு குதிரைகளை இழந்துவிட்டான்.

‘‘அவன் நிலக்கிழாரிடம் ஓடி அவர் கால்களில் விழுந்து கதறி, ‘இக்கி அட் யொக்!’ அதாவது ‘இரண்டு குதிரைகள் காணவில்லை!’ என்றான்.

‘‘‘போய் அவற்றைக் கண்டுபிடி!’ என்று அந்த நிலக்கிழார் கத்தினார். ‘நீ கண்டுபிடிக்கவில்லை என்றால், நான் தரும் சாட்டையடியை நீ மறக்கவே மாட்டாய்!’

‘‘இரும்புக் கொக்கிகள் வைத்துப் பின்னப்பட்ட கனத்த சாட்டை ஒன்று நிலக்கிழாரிடம் இருந்தது. ஓநாயினுடைய கோரப் பற்களைவிட அது பயங்கரமானது.

‘‘சிறுவனோ ஸ்தெப்பியை நோக்கி விரைந்து ஓடினான். தேடித் தேடிப் பார்த்தான். ஆனால் அவனால் குதிரைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அவன் ஓர் உயரமான மணற்குன்றின் மீது ஏறி வேண்டினான்: ‘எனக்கு மட்டும் இறக்கைகள் இருந்திருந்தால், குதிரைகளைக் கண்டுபிடித்து வீட்டிற்கு என் அப்பாவிடமும் அம்மாவிடமும் திரும்புவேன்!’



‘‘தனது வேண்டுதலுக்கு அவன் சரியான நேரத்தைத் தேர்ந்தெடுத்தது போலக் காணப்பட்டது, ஏனெனில் திடீரென்று அவனுக்குச் சிறகுகள் முளைத்தன. மணற் குன்றுகளுக்கும் மலைகளுக்கும் மேலாகப் பறந்தான். கழுகின் இறக்கைகள் அவனுக்கு இருந்தன. பிற பிராணிகளைக் கொன்று தின்கின்ற பறவைகள் அவனது வழியைவிட்டு விலகிப் பறந்தன. இருந்தும் காணாமற் போன குதிரைகளை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

‘‘‘இக்கி அட் யொக்! இக்கி அட் யொக்!’ நம்பிக்கையற்றுக் கத்தினான்.

‘‘ஆகவே அவனுக்கு ‘குயில்’ என்று பொருள்படும் ‘இக்கி அட் யொக்’ என்று பெயரிடப்பட்டது.

‘‘குயில் கூடு கட்டுவதில்லை; தனது முட்டைகளை அடைகாப்பதில்லை. அதற்கான நேரம் அதற்குக் கிடையாது, ஏனெனில் குதிரைகளைத் தேடுவதில் அது எப்போதுமே சுறுசுறுப்பாக இருக்கிறது. மற்ற பறவைகளின் கூடுகளில் குயில் தனது முட்டைகளை இடுகிறது, அதனது குஞ்சுகளும், சிறகுகள் முளைக்கப்பெற்றதுமே, தங்களது வளர்ப்புப் பெற்றோர்களை விட்டு காணாமற்போன குதிரைகளைத் தேடிப் பறக்கின்றன. அவை தேடித் தேடிப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.’’

தேநீருக்காக நீர் கொதிக்கவைக்க நாங்கள் பயன்படுத்திய சிறு நெருப்பு அநேகமாக அணைந்து விட்டது. ஒரே ஒரு சிறிய தணல் மட்டும் திடீரென்று சிவந்து எரியத் தொடங்கியது. ஆனால் கொழுந்து விட்டு எரிய முடியாமல் அதுவும் அணைந்து போயிற்று. ஒரு நொடிக்குப் பிறகு, வெடுக்கென்று மீண்டும் சிவப்பாக மாறியது.

‘‘பறவைகளைப் பற்றி மேலும் ஏதேனும் கதைகள் தெரியுமா உங்களுக்கு, ஸாரி தாத்தா?’’

மிகவும் நளினமாகத் தனது குவளையில் தாத்தா மேலும் கொஞ்சம் தேநீர் ஊற்றினார்.

‘‘எனது பேரனே, ஒவ்வொரு காட்டுப் பறவை மற்றும் விலங்கைப் பற்றி நாட்டுப்புறக் கதை உண்டு. கொண்டலாத்திப் பறவை பற்றி உனக்குச் சொல்கிறேன். ஒருகால் நீ அதைப் பார்த்திருக்கலாம்—பிரகாசமான பல நிறங்களில் இறகுடன் ஒரு கொண்டையும் கொண்டது.’’

‘‘ஆமாம், தாத்தா.’’

‘‘அந்தக் கதை இதுதான்’’ என்று ஸாரி தாத்தா தொடங்கினார். ‘‘ஒருமுறை பெண் ஒருத்தி இரண்டு சிறுமிகளை வளர்த்தாள். ஒருத்தி அவளது சொந்த மகள், மற்றவள் வளர்ப்புமகள். அவளது சொந்த மகள் நல்ல கவனிப்புடன் வளர்ந்தாள்; வளர்ப்புமகளோ கஷ்டப்பட்டாள், காலை முதல் மாலை வரை பாடுபட்டாள். அவளது வளர்ப்புத்தாய் அளவுக்கு மீறி வேலை வாங்கியதால், அப்பாவிச் சிறுமிக்கு தலைவாரக்கூட நேரமில்லை.

‘‘ஒருமுறை வளர்ப்புத்தாய் அவளிடம் பால் கொதிக்க வைக்க உத்தரவிட்டாள். சிறுமி நெருப்பு மூட்டி, பாத்திரத்தில் பாலை ஊற்றினாள். அதை அடுப்பில் வைத்த பிறகு தனது தலையை வாரத் தொடங்கினாள். துருக்மேனியப் பெண்கள், தரையைத் தொடுமாறு நீண்ட அடர்த்தியான கூந்தல் கொண்டிருப்பார்கள்.

‘‘தலையை சீப்பால் வார அச்சிறுமி முயன்றாள், ஆனால் அது முடியில்

சிக்கிக்கொண்டது. அதிருஷ்டமின்மையால், அத்தருணத்தில் பால் கொதித்து பாத்திரத்திற்கு மேலே வந்துவிட்டது.

''மாற்றாந்தாய் கூடாரத்தைவிட்டு வெளியே ஓடிவந்து, வளர்ப்புமகளின் கையைப் பிடித்து ஸ்தெப்பிக்கு இழுத்து சென்று கூறினாள்: 'நீ போகலாம், ஒன்றுக்கும் லாயக்கற்றவளே, ஆனால் பாலாடையைத் திரும்ப எனக்குக் கொண்டுவா. அது இல்லாமல் வராதே!'

''சிறுமியோ தேம்பித் தேம்பி அழுதவாறு ஓடினாள். ஓடிக்கொண்டே இருந்த அவள் திடீரென்று பறக்கத் தொடங்கினாள். அவளது கைகள் இறக்கைகளாயின, அவளது பலநிறத் துணிகள் சிறகுகளாயின. அவளது தலையில் சீப்பு இன்னமும் ஒட்டிக்கொண்டிருந்தது. அச்சிறுமி கொண்டலாத்திப் பறவையாகி விட்டாள். அப்போதிலிருந்து இப்பரந்த உலகைச் சுற்றிப் பறந்து கொண்டிருக்கிறாள். பறக்கும் போது அவள் கத்துகிறாள்: 'கூப்பு! கூப்பு! பாலாடையே, எங்கே இருக்கிறாய்?'

''கூர்மையான பார்வையுடையவனே அதன் தலையிலுள்ள சிறிய சீப்பைப் பார்க்க முடியும். இப்போதுகூட தலையை வாரிக்கொள்ள அதற்கு நேரமில்லை.''

## காலை

பிறகு ஸாரி தாத்தா வேடர்களைப் பற்றியும் விதவையின் மகனான மகமூத் பற்றியும் ஒருகதை சொன்னார். பாதாள நாட்டுக்கு மகமூத் சென்றான். கொடிய வேதாளத்தை வெட்டிச் சாய்த்துவிட்டு, அழகிய இளவரசியைக் காப்பாற்றி சும்ருக் பறவை மீது பறந்து வந்தான்... ஆனால் அவன் எங்கே பறந்தான்? பறவையினுடைய மரகதச் சிறகுகள் மீது படுத்திருப்பது மகமூத் அன்று என்பதைத் திடீரென்று நான் உணர்ந்தேன், அது நான்தான்! பறந்து கொண்டிருந்தது நான்தான்! வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. நான் கண்களைத் திறந்த போது தலைக்கு மேலாகச் சூரியன் இருப்பதைப் பார்த்தேன்.

இரவு மேய்ச்சலிலிருந்து மந்தை நீர் அருந்தும் இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தது.

செம்மறிகள் மூளையற்ற விலங்குகள் என்று யார் நினைத்தாலும் அது தவறு. அவை புத்திசாலி விலங்குகள். மந்தையில் சுமார் ஆயிரம் இருந்தன, ஆனால் ஒரே நேரத்தில் இருநூறு அல்லது முந்நூறு செம்மறிகளால்தான் நீர் பருக முடியும். மந்தையில் எஞ்சிய அனைத்தும் மற்றவை வயிறாரக் குடித்து முடிக்கும் வரை பொறுமையாக நிற்கும். அவை குடித்து முடித்ததுமே பக்கத்தில் விலகி நின்று காத்திருக்கும். நீர் அருந்தும் இடத்திற்கு அவை சேர்ந்து வந்தன, மேய்ச்சலுக்கும் அவை சேர்ந்தே போகும்.

அக்பாய் என்னிடம் ஓடிவந்து எனது தோள் மீது தனது பாதத்தை வைத்தது. ஸாரி தாத்தா என்னை அழைக்கிறார் என்பதற்கு இது அடையாளம்.

மந்தையுடன் குலி மாமா திரும்பி வருவதை எதிர்பார்த்து ஸாரி தாத்தாவும் நானும் உட்கார்ந்திருந்தோம். இன்று அவர் வழக்கத்தைவிடத் தாமதமாக வந்தார். கடைசியாக தொலைவில் அவர்கள் நெருங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தோம். குலி மாமாவினுடைய நடையைக் கொண்டே அந்த இரவில் ஏதோ தொல்லை நேர்ந்திருந்தது என்பதை ஸாரி தாத்தா ஊகிக்க முடியும்.

அவருடைய ஊகம் சரியானது. ஒரு செம்மறி ஆட்டின் குர்தூக்கை அந்த இரவு ஓநாய் ஒன்று கடித்துக் குதறிவிட்டது. குர்தூக் என்பது ஒருவகை செம்மறியின் கொழுப்பு சேர்கின்ற வால் பகுதி.

''அவை எப்படியிருக்கின்றன என்பதை நாம் குகையில் பார்க்க வேண்டும்'' என்றார் ஸாரி தாத்தா.

''குகை எங்கே இருக்கிறது?'' என்று மேய்ப்பரிடம் கேட்டேன். ''எப்படி ஓநாய் குர்தூக்கைக் குதறியது? செம்மறி நன்றாக இருக்கிறதா?''

''செம்மறி பிழைத்துக் கொள்ளும்'' என்றார் ஸாரி தாத்தா. ''நாளை அந்தக் குகையைப் பார்க்கிற வாய்ப்பு உனக்குக் கிடைக்கும். ஸ்தெப்பியில் நாம் சொல்கின்ற பழமொழி உனக்குத் தெரியுமா: நூறு முறை கேட்பதை விட ஒருமுறை பார்ப்பது மேலானது.''

மறுநாள் காலை நாங்கள் ஸ்தெப்பிக்குப் புறப்பட்டோம். நாங்கள் நீண்ட தூரம் போக வேண்டி இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் சுமார் இரண்டு கிலோமீட்டர் நடந்ததுமே ஸாரி தாத்தா என் பக்கம் திரும்பி, ''தரையில் படுத்துக் கொள், அசையாதே!'' என்று கிசுகிசுத்தார். எனக்கு அருகே அவர் படுத்துக்கொண்டு தனது பைனாக்குலரை வெளியே எடுத்தார். பிறகு சற்று முன்னே ஊர்ந்து சென்று தன்னை நெருங்கி வரச் சைகை காட்டினார். ''அவை குகையை விட்டு வெளியேறுகின்றன'' என்று என் காதில் கிசுகிசுத்தார். நன்கு வளர்ந்த இரு ஓநாய்களையும் மூன்று குட்டிகளையும் நான் கண்டேன். ஆண் ஓநாயினுடைய தோளை பெண் ஓநாய் கிள்ளி, தனது முன்னங்கால்களால் பிறாண்டியது. ஆனால் அது பெண் ஓநாயிடம் பற்களைக் காட்டி உறுமக் கூட இல்லை. வினவுவது போல ஸாரி தாத்தாவை நோக்கினேன். ''மிகச் சிறிய உணவுடன் அது திரும்பிவிட்டது. பெண் ஓநாயால் தனது குட்டிகளை விட முடியாது, குடும்பம் முழுவதிற்கும் ஆண் ஓநாய் உணவு கொடுத்தாக வேண்டும். செம்மறி குர்தூக்குகள் பசித்த குடும்பத்தை நீண்ட நேரத்திற்குத் திருப்திப்படுத்த முடியாது.''

''நீங்கள் ஏன் ஓநாய்களை வேட்டையாடப் போகவில்லை?'' என்று கேட்டேன்.

''ஓநாய்கள் கூட பயனுள்ளவை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை நம்மை அச்சுறுத்துவது இல்லை: ஓநாய்கள் தங்களுடைய பக்கத்து ஆட்களுக்குத் தீங்கு செய்வதில்லை. இந்த ஆண் ஓநாய் மட்டுமே நம்பிக்கையிழந்த நிலையில் நமது மந்தையைத் தாக்கியிருப்பது போலத் தெரிகிறது. சற்று பொறு, அந்தக் குட்டிகள்

கொஞ்சம் பெரிதாகின்ற வரை. பிறகு அவற்றை வேட்டையாடப் போகலாம். ஆனால் உயிருடன் பிடித்தாக வேண்டும், அவற்றை வீட்டில் பழக்க முடியும்.''

''ஓநாய்கள் நமது செம்மறிகளைப் பார்த்துக் கொள்ளும்!'' என்று நினைத்தேன். ''எனக்கு எப்படிப்பட்ட தாத்தா வாய்த்திருக்கிறார்! ஓநாய்களுக்கு பசியே ஏற்படாது, செம்மறிகள் பாதுகாப்பாக இருக்கும்!''

## முலாம் பழங்கள்

ஸாரி தாத்தா முலாம் பழங்களைப் பயிரிட்டிருந்தார். பாலைவனத்தில் வளரும் முலாம் பழங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் இனிப்பானவை!

''மேய்ப்பர்களுக்காக பாலைவனம் வேலை செய்யட்டும்!'' என்று வேலை செய்த போது ஸாரி தாத்தா சொன்னார்.

பழைய மணற்குன்றின் சரிவில் ஒரு சிறிய முலாம்பழ வயலை உருவாக்கினார். பாலைவனத் தாவரங்கள் வளரக்கூடிய இடங்கள் முலாம் பழத்தைப் பயிரிடுவதற்கு லாயக்கற்றன. அந்தத் தாவரங்களுக்கு மத்தியில் முலாம்பழச் செடி அழிந்து போகும். சக்திவாய்ந்த பாலைவனத் தாவரங்கள் மண்ணினின்றும் ஒவ்வொரு துளி ஈரத்தையும் உறிஞ்சுகின்றன.

''முதலில் செய்ய வேண்டியது ஓர் இடத்தைத் தேர்ந்தெடுப்பது'' ஸாரி தாத்தா அறிவுரை வழங்கினார். ''பிறகு ஆமை, நில அணில், சூரிய ஒளி அவற்றினின்றும் பயிர்களைப் பாதுகாக்க வேண்டும். நாற்றுகளுக்கு முறையாக நிழல் கிடைக்கவில்லை என்றால், வெப்ப மணல் கத்திரிக்கோலைப் போல வேர்களை வெட்டி எறிந்து விடும். ஆமைகள் வராதபடி மரக்கிளைகளால் நாம் வேலி அமைக்க வேண்டும்; நில அணில்களை நரிகள் பார்த்துக் கொள்ளும். நரி கூட முலாம் பழங்களைச் சாப்பிட விரும்பும், அதற்கு விதைகளைப் பிடிக்காது, நன்கு பழுத்த சுளை பிடிக்கும். நில அணில் விதைகளை முகர்ந்து குழி தோண்ட ஆரம்பிக்கிறது. மணலைப் பறிக்கிறது ஒரு தோண்டு கருவி போல! ஆனால் நொடியில் நரி அங்கே வந்துவிடும். போக்கிரி அணிலின் கழுத்தைப் பற்றிப் பிடிக்கும். 'பயிர்களை கெடுக்காதே, முட்டாள்! முலாம் பழம் பழுக்கும் போது நான் அதன் சுளையைத் தின்று உனக்கு விதைகளை விட்டுவிடுகிறேன். ஆனால் எது நல்லது என்று உனக்குத் தெரியவில்லை என்றால், சாப்பாட்டுக்கு உன்னை நான் தின்ன நேரும்!' ''

ஸாரி தாத்தா அன்று நல்ல மனநிலையில் இருக்கவே, அவரிடம் கேட்டேன்:

''தாத்தா, மந்தையை மேய்க்க எப்போது என்னையும் அழைத்துப் போவீர்கள்?''

''இன்றே புறப்படத் தயாராக இரு. ஸ்தெப்பியில் இன்று நன்றாக இருக்கும். இன்று பௌர்ணமி.''

மாலை வாக்கில் தனது கால்கள் வலிக்கின்றன என்று ஸாரி தாத்தா புகார் செய்யத் தொடங்கிய போது மனம் தளர்ந்து போனேன். ஆனால் ஸாரி தாத்தா தனது வாக்கைக் காப்பாற்றினார். ''குலி மாமாவுடன் போய் அவருக்கு உதவி செய்'' என்றார்.

# மந்தையுடன்

குலி மாமாவுடைய அப்பா மேய்ப்பராக இருந்தவர்; அவருடைய தாத்தாவும் கொள்ளுத்தாத்தாவும் கூட அப்படித்தான்...

தனது வளைதடியில் சாய்ந்தவாறு, குலி மாமா பாலைவனத்துக்கு மத்தியில் அசைவற்று நின்றார். அவருடைய தனித்த உருவம் ஒரு ராட்சசனுடையதைப் போன்று காணப்பட்டது. அவருக்கு எதிரே குன்றுகளுக்கு மேலாக களைத்துப் போன மாலை நேரத்துச் சூரியன் தொங்கியது.

மந்தைக்குப் பின்னால் நாங்கள் மெதுவாக நடந்தோம். நாய்கள் சாகாரும் பசாரும் எங்களுடன் வந்தன. பூமியைத் தொடுகின்ற அளவுக்கு சூரியன் சென்றுவிட்டது, ஆனால் மணலோ இன்னமும் நெருப்பாய்த் தகித்தது.

குலி மாமா நின்றவாறு தலைமை ஆட்டினுடைய மணியோசையைக் கேட்டார். மந்தையை வழிநடத்திச் சென்ற வயதான வெள்ளாடு, நல்ல மேய்ச்சல் கிடைக்கும் என்பதை உணர்ந்து வலப்பக்கம் திரும்பியது. மேய்ச்சலுக்கு செம்மறிகள் அதனைப் பின்தொடர்ந்து சென்றன. சில எட்டுகள் நடந்து சென்ற குலி மாமா திரும்பவும் நின்று, தனது வளைதடியில் சாய்ந்துகொண்டு சூரியன் மறைவதைப் பார்த்தார். சூரியனுடைய செந்நிறக் கதிர்கள் கடைசி வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு ஓய்வுக்காக மூழ்கியது. சூரியனுக்கு ஓய்வு, ஆனால் எங்களுக்கோ வேலை அப்போதுதான் தொடங்கி இருந்தது.

“நாளை சந்திப்போம்!” என்று குலி மாமா சூரியனிடம் சொன்னார். நாங்கள் நடந்து சென்ற இரண்டு மணி நேரத்தில் அவர் பேசியது அந்த வார்த்தைகள் மட்டுமே. சமவெளிகளில் இருள் சூழ்ந்து, வெறுமையான எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தியது. இலேசான சலசலப்புக்கும் நான் நடுங்கினேன். ஒருவேளை ஓநாய்கள் செம்மறி மந்தையை நோக்கி ஊர்ந்து சென்று கொண்டிருக்கலாம்.

ஆனால் வெகு சீக்கிரத்தில் குன்றுகளுக்கு மேலாக நிலா எழுந்தது. குலி மாமா மந்தையினின்றும் தனது கழுதையைப் பிரித்து அதனது கழுத்தைச் சுற்றி ஒரு மணியைக் கட்டினார். எங்களுக்காகவும் நாய்களுக்காகவும் உணவையும் நீரையும் கழுதை சுமந்தது. இரவு நேரத்தில் அது பாதை மாறிப் போய்விட்டால், நாங்கள் பசியோடும் தாகத்தோடும் இருக்க நேரிடும்.

கடைசியாக மணலின் வெக்கை தணிந்து, பாலைவனத்தில் குளுமை பரவியது. பால் ஒளியில் குளித்தது போல நிலவு ஒளியில் குன்றுகள் வெளிச்சம் பெற்றன. மிகவும் வெளிச்சமாக இருந்ததால், காலுக்குக் கீழாக பனி போல மணற் துகள்கள் பளபளத்தன.

ஆடுகள் ஓய்வின்றி மேய்ந்தன.

குலி மாமாவினுடைய பாதங்களில் நாய்கள் படுத்து, தங்களது முன்னங்கால்களின் மீது தலைகளை வைத்து ஓய்வெடுத்தன. அவற்றின் கண்கள் மூடியிருந்தன, இருந்தும் லேசான சலசலப்புக்குக் கூட காற்றில் இலைகள் ஆடுவது போல அவற்றின் காதுகள்

அலைந்தன. அன்றிரவில் நாய்கள் அமைதியாக இருந்தன. அத்தனை வெளிச்சம் நிறைந்த இரவில் மந்தையைத் தாக்க எந்த ஓநாய்க்கும் துணிச்சல் வராது.

நள்ளிரவு வாக்கில் ஆடுகள் மேய்வதை நிறுத்திவிட்டு திறந்த வெளியில் ஒன்று சேர்ந்து நின்று படுக்கத் தொடங்கின.

அவற்றை விட்டு கழுதையைத் தனியே ஓட்டி உணவுச் சாமான்களை குலி மாமா கீழே இறக்கினார். பிறகு காய்ந்த குச்சிகள் சிலவற்றை முரித்து நெருப்புப் பற்ற வைத்தார்.



செப்புக் கெண்டிக்குள்ளாகக் கொஞ்சம் நீர் ஊற்றி நெருப்பின் மீது கொதிக்க வைத்தார். நாய்களுக்காக ரப்பர் கிண்ணத்தில் கொஞ்சம் நீர் ஊற்றினார். சாகார் எழுந்து நின்று பருகியது, பசாரோ சோம்பலாகப் படுத்தபடி பருகியது.

நெருப்புச் சிறிதாக எறிந்தாலும் போதுமான வெதுவெதுப்பைக் கொடுத்தது.

நீர் கொதிக்கத் தொடங்கியதும் குலி மாமா கடுந்தேநீர் தயாரித்தார். அது எனது தூக்கக் கலக்கத்தை விரட்டியடித்தது.

நெருப்பிலிருந்து சுமார் பத்து எட்டுத் தொலைவில் இருந்த சிறு மேட்டின் மீது அமர்ந்து நாங்கள் தேநீர் அருந்தினோம். நெருப்புக்கு அருகே நீண்ட நேரம் தங்குவது ஆபத்தானது: அது பாலைவனத்தின் ஊர்வனவற்றை தன்னருகே ஈர்க்கும். பயங்கரமான தேள்களும் விஷமுள்ள பாலைவனச் சிலந்திகளும் அதில் இருக்கும்.

கடைசிக் காய்ந்த குச்சிகள் எரிந்து போய் நெருப்பு அணைந்தது. சுற்றிலும்

எல்லாமே அசைவற்று இருந்தன. நிலவு ஒளிகூட மங்கிப்போனதாகக் காணப்பட்டது. நட்சத்திரங்கள் வெளித்தெரிந்தன. நாய்கள் காவல்காத்தன, மந்தை துயில்கொண்டது.

மேய்ப்பனுடைய கடினத் தலையணையாகிய தனது வளைதடியைத் தலைக்கு கீழே வைத்துப் படுத்து திரும்பவும் வானத்தை நோக்கினார் குலி மாமா. நானுங்கூட மேலே பார்த்தேன். இதோ துருவ நட்சத்திரமும் பெரங்கரடியும். இரவு முழுவதும் துருவ நட்சத்திரத்தைச் சுற்றிப் போவதற்குப் பெருங்கரடி ஊர்ந்துச் செல்கிறது. காலை விடியலின் போது பெருங்கரடி துருவ நட்சத்திரத்துக்குப் பின்னே கிழக்கில் இருக்கும். அந்நேரத்தில் கார்த்திகை விண்மீன் கூட்டம் மணற்குன்றுகளுக்கு மேலாகத் தோன்றும்.

வானியல் நிபுணரைப் போல மேய்ப்பர்களுக்கு வானத்தைப் பற்றி நன்றாகத் தெரியும்.

ஒருமுறை ஸாரி தாத்தா என்னிடம் சொன்னார்:

‘‘கேளு, பேரனே, பாலைவனத்தை உனது வீடாக வைத்துக் கொள்ள நீ விரும்பினால், உன் உள்ளங்கையை அறிந்தது போல அதையும் தெரிந்திருக்க வேண்டும். உனது விரல்களைப் போல வானத்தைப் பற்றி அறிய வேண்டும். வானத்தைப் பற்றித் தெரியாமல் உன்னால் பாலைவனத்தைப் பற்றி அறிய முடியாது.’’

ஆடுகள் கிளர்ச்சியுற்று தங்களது மேய்ச்சலைத் தொடர்ந்தன. கிணற்றை நோக்கி மெதுவாக திரும்பி நகர்ந்தன. குலி மாமாவும் நானும் எழுந்து அவற்றைப் பின் தொடர்ந்தோம்.

வானம் பிரகாசமாகிக் கொண்டு வந்தது, காற்றிலே புழுதி மணமும் புல்லின் மணமும் இனியதாக நிறைந்திருந்தது.

காலையில் ஸாரி தாத்தா நெருப்பின் அருகமர்ந்து எங்களை வரவேற்று நறுமணமுள்ள பச்சைத் தேநீர் வழங்குவார்.

‘‘வருக, வருக, எனது இளம் மேய்ப்பனே!’’ என்று என்னிடம் கூறுவார்.

## ஒட்டகம் எதற்குப் பயப்படுகிறது

பெருஞ்சிலந்தியின் கடி பெரும் துயரத்தை ஏற்படுத்தும், தேள் கொட்டினால் உயிருக்கே ஆபத்தாகும்.

மனிதனுக்கு இந்தளவு ஆபத்தான இந்த உயிரிகள் ஒட்டகத்தைப் பாதிப்பதில்லை. எனினும், நில அணில்கள் அல்லது மண்ணெலிகள் வாழும் இடங்களை நிச்சயமாகத் தவிர்த்து விடும். வளை தோண்டும் இந்த விலங்குகள் நமக்கு எந்த அச்சுறுத்தலையும் தருவதில்லை, ஆனால் ஓர் ஒட்டகத்திற்கு அவை மிகவும் ஆபத்தானவை. அவற்றினுடைய விசாலமான நிலத்தடி வீட்டில் தள்ளாடி விழவோ காலைக்கூட முறித்துக்கொள்ளவோ கூடும்.

## ராட்சசப் பல்லி

பாலைவன முதலை என்றும் அழைக்கப்படும் ராட்சசப் பல்லி தனது வாயைத் திறந்து காட்டும், ஆனால் அதை நெருங்கினால் திரும்பி ஓடிவிடும். வெப்பமான நேரங்களில் ராட்சசப் பல்லி ஆமை வளைகளுக்குள்ளாக நுழைந்துக் கொண்டு குளுமை வரும் வரையில் காத்திருக்கும்.

இத்தகைய பல்லிகளில் சில ஒன்னரை மீட்டர் நீளத்திற்கு வளரும். அது கோபமடைகின்ற போது, அச்சுறுத்த உப்பிக்கொள்ளத் தொடங்கும். அதற்கு எதிராக கொடுவாள் கூட பயனற்றது என்று சொல்கிறார்கள். ராட்சசப் பல்லி கொறிவிலங்குகளைத் தின்று வாழ்கிறது. ஆனால் அதனது விருப்பமான உணவு பறவை முட்டைகள்.

## ஜிக்-ஜிக்கி

ஜிக்-ஜிக்கி ஒரு வியக்கத்தக்க சிறிய பறவை. மரங்களில் அல்லது தரையில் கூடு கட்டுவதற்குப் பதிலாக, சிறிய குழியிலோ அல்லது க்கைவிடப்பட்ட கிணற்றிலோ வேறு பள்ளத்திலோ அது கட்டுகிறது. வானம் கீழே விழப்போகிறது என்று அது பயப் படுவதாகக் கூறுகிறார்கள். தனது கூட்டில் அது பாதுகாப்பாக இருக்கும் போது கூட, ஜிக்-ஜிக்கி தனது சிறிய கால்களைத் தூக்கிக்கொண்டு தூங்குகிறது. என்றாவது ஒருநாள் உண்மையாகவே வானம் சரிந்து விழுந்தால் அதைத் தடுத்துக்கொள்ளத் தயாராக இருப்பது போலத் தெரிகிறது.

## மைனா

பாலைவனத்தில் வசிக்கும் எல்லாவிதக் காட்டு விலங்குகளையும் பற்றிப் பேசுவது சிரமமானது.

உதாரணமாக, மணல் பூனையும் சிவிங்கியும் வாழ்கின்றன. பாலைவனத்தைக் கடந்து பலவிதமான பறவைகள் இடம் பெயர்ந்து செல்கின்றன, ஆனால் ஆண்டு முழுவதும் சில அங்கே வாழ்கின்றன: பாலைவனப் புறா, பாலைவனக் குருவி, ஆந்தை, பாலைவன காக்கை... ஆனால் இந்திய மைனாப் பறவை எல்லாவற்றையும் விட மிகவும் அதிகமாக விரும்பப்படுவது. அது மிக அருமையாகப் பாடக் கூடியது. பேசவும் அதனைப் பயிற்றுவிக்க முடியும்.

தேநீர் கடை ஒன்றுக்குச் சொந்தக்காரனான இப்ரகீம் தனது கடையில் ஒரு மைனா வைத்திருந்ததாகச் சொல்கிறார்கள். கடைக்கு யாரேனும் வந்தால், ‘‘இப்ரகீம், இதோ வாடிக்கையாளர் வந்திருக்கிறார்’’ என்று சொல்லியது. வந்தவர் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த போது, தனது எசமானனிடம் நினைவுபடுத்தும்: ‘‘இப்ரகீம், பணத்தை வாங்கிக்கொள்!’’



## பாம்புகள்

பாலைவனத்தில் பல பாம்புகள் உள்ளன, ஆனால் அவை எல்லாமே விஷமுள்ளவை அல்ல. மணற்பாம்பும் வெண்ணிறப் பாம்பும் தீங்கற்றவை.

நல்லபாம்பும் பல்வேறுவிதமான விரியன்பாம்புகளுமே தவிர்க்கப்பட வேண்டியன. எனினும் இந்தப் பயங்கரமான பாம்புகளைப் பாம்புப் பிடாரர்கள் தேடி அலைகிறார்கள். ஏனெனில் பாம்பின் விஷம் ஏராளமான நோய்களைக் குணப்படுத்துகிறது. சமீப ஆண்டுகளில் பாம்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து போவதாகப் புகார் சொல்கிறார்கள். இது ஓர் அபாய அறிவிப்பு!

காராகூம் பாலைவனத்தில் வாழும் மற்றொரு பாம்பு கிலுகிலுப்பைப்பாம்பு. சில நேரங்களில் இரவில் ஒரு விநோதமான ஒலியைக் கேட்கலாம். உடனே எல்லாப் பாலைவன உயிரிகளும் எச்சரிக்கையாகி விடுகின்றன—கிலுகிலுப்பைப்பாம்பு இரைதேடிப் புறப்படுகிறது!

## வட்டத்தலைப் பல்லி

துருக்மேனியாவில் இந்தப் பல்லி சரிகெல்நெஸி என்று அழைக்கப்படுகிறது. அதன் பொருள் 'மஞ்சள் திட்டுபவன்'. மணல் மற்றும் கிளைகளின் வர்ணத்திலான மஞ்சள் பழுப்பு நிறத் தோல் கொண்டது இந்தப் பல்லி. இது திட்டுபவன் என்று அழைக்கப்படுவதன் காரணம் சூரிய உதயத்திலிருந்து மறைகின்ற வரை சூரியனைப் பார்த்துத் திட்டும்.

அந்தப் பல்லி அமைதியாகத் திட்டுகிறது, மணலில் தன்னை நன்கு மறைத்துக் கொள்கிறது. ஆனால் அதனது ஆத்திரம் அதை வெளியிட்டு விடுகிறது. அதனது தொண்டையில் உள்ள சிறிய பை வெந்நீரால் நிரப்பப்பட்டது போல நடுங்கவும் களகளவென ஓசையெழுப்பவும் செய்கிறது.

மணற்குன்றுகளுக்கு அப்பால் சூரியன் மூழ்கத் தொடங்கும் போது அந்தப் பல்லி மகிழ்கிறது, தனது நிந்தனைகளே சூரியனை அழித்து விட்டதாக நினைத்துக்கொள்கிறது. ஆனால் மறுநாள் காலையில் வானத்தில் சூரியன் பிரகாசமாக எழுகிறது; அது மீண்டும் ஏசுகிறது. அதனது ஆத்திரம் தனது எதிரிகளிடம் அதை வெளிவிடுகிறது. ஆனால் அதை அடக்க முடியாது.

தொடுவானத்திற்குப் பின்னால் சூரியன் மறைகின்ற போது, அது கடைசித் தடவை என்று சரிகெல்நெஸி நினைக்கிறது. ஆனால் ஒவ்வொரு மறுநாளும் புதிய சூரிய உதயம் இருக்கவே செய்கிறது.

# சூரியன் மறைவு

மங்கலான பித்தளைத் தட்டுப் போல, மறைகின்ற சூரியனின் மிகப் பெரிய வட்டம் எல்லையற்ற மணற்கடலுக்கு மேலாகத் தாழத் தொங்குகிறது. வானத்தில் வெண் சாம்பல் நிறத் திரையிட்டு நாள் முழுக்க கருணையின்றி அது கொழுத்தியது. ஆனால் சூரியன் மறைவு நெருங்குகையில், ஒரு திடீர் மாற்றம் நிகழ்கிறது. வானம் நீல நிறமாக மாறுகிறது, பகல் வெப்பம் மாறி குளுமை ஏற்படுகிறது.

மணல் துகள்கள் மின்னுகின்றன. உள்ளூர எரிந்த மணற்குன்றுகளும் சூரியன் மறைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால் அசைவற்றுப் போயின. இரவு வரவுமே, குளுமையான இளந்தென்றல் காராகூம் குன்றுகளுக்கு மேலாக மிதந்து செல்லும். மணற்குன்றுகள் திரும்பவும் உயிர்பெற்று எழும், புல்லிதழ்கள் தங்களுக்குள் மென்மையாக சலசலத்துக் கிசுகிசுக்கும். பெரியதும் பிரகாசமானதுமான தெற்கு நட்சத்திரங்கள் பாலைவனத்திற்கு மேலாக எழுந்து நிற்கும்.

இப்போதோ எல்லாமே அமைதியாகவும் அசைவற்றும் இருக்கிறது. மூச்சை அடக்கிக்கொண்டு சூரியன் மறைவைக் கண்டு அதிசயிக்கிறோம்.

தொலைதூரத்து மணற்குன்றுகளின் உச்சிகளைத் தொட்ட சூரியன், மணல் அலைகளில் மூழ்குவதற்கு முன்னால் காராகூம் மீது இறுதியாக செந்நிறக் கதிர்களைப் பாய்ச்சுகிறது. தெற்கில் அந்திக் கருக்கலே இல்லை. சூரியன் மறையவுமே இருள் உடனே தொடங்குகிறது, சூரிய உதயம் பகல் வருவதை அறிவிக்கிறது.


தேவதைக்
கதைகள்



## ஷிர்டாக்கும் யார்திகுலக்கும்

வஞ்சகத்தில் நீ வல்லவனாய் இருந்தால்
வலிந்து திருடனை நீ மறைத்தால்
யார்திகுலக் விரைந்து உன் கதவைத்
தட்டிட நேரம் அதிகம் ஆகாது.

இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தது யார்திகுலக்கைத் தவிர வேறு யாருமில்லை. அன்று அவன் மிக உற்சாகமாக இருந்தான். பெரும்பாலும் அதன் பொருள் யாரேனும் ஒரு போக்கிரிக்கு அவன் சரியான பாடம் கொடுத்திருந்தான் என்பதாகும்.

கிராமப்புறச் சாலையில் யார்திகுலக் உல்லாசமாகச் சென்றான். அவனது பாடல் வானம்பாடியின் அதிர்வொலி போல ஒலித்தது.

திடீரென்று அவன் மௌனமாகிப் போனான். சாலையின் பக்கத்தில் சிறு குன்றின் மீது ஒரு குட்டையான மனிதன் நின்று கொண்டிருந்தான். யார்திகுலக்கை விட அவன் அரைத் தொப்பி அளவுக்குக் குட்டை.

''வணக்கம்'' அந்தச் சிறிய மனிதனை வியப்புடன் நோக்கியவாறு சொன்னான் யார்திகுலக்.

''வணக்கம்!''

''நண்பனே! என் பெயர் யார்திகுலக். உன்?''

''ஷிர்டாக் என்பார்கள்'' என்று சிறிய மனிதன் பதிலளித்தான்.

''மேல் பகுதி துணியால் ஆன தொப்பியா நீ?''

''அப்படித்தான்.''

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?''

''வெள்ளாடு ஒன்றை விற்கப் போகிறேன்.''

''எங்கே உனது வெள்ளாடு?''

‘‘யாரோ ஒருவன் என்னிடம் வந்து கேட்டான்: ‘உன்னுடைய வெள்ளாட்டை ஒரு குட்டிக்காக மாற்றிக் கொள்வாயா? உனது பயணத்தை அது சுலபமாக்கும்’. ‘சரி’ என்று நான் சொன்னேன்.’’

‘‘பிறகு உனது குட்டியை ஒரு சேவலுக்காகவும், சேவலை ஒரு முட்டைக்காகவும், முட்டையை ஓர் ஊசிக்காகவும் வியாபாரம் செய்தாய்... அந்தக் கதை எனக்குத் தெரியும்.’’

‘‘சேவலை ஒரு முட்டைக்காக நான் வியாபாரம் செய்யவில்லை!’’ என்றான் ஷிர்டாக்



மனத்தாங்கலுடன். ‘‘அதை ஒரு காட்டு முயலுக்காகவும், காட்டு முயலை இந்த அழகிய தொப்பிக்காகவும் மாற்றிக் கொண்டேன். இதை எல்லாரும் ‘ஷிர்டாக்’ என்று அழைக்கிறார்கள்.’’

‘‘உன்னை நான் சரியாகப் புரிந்து கொண்டிருந்தால், ஒரு தொப்பிக்காக ஒரு வெள்ளாட்டை மட்டும் நீ மாற்றி கொள்ளவில்லை, பேரத்தில் ஒரு புதிய பெயரையும் பெற்றுவிட்டாய்.’’

‘‘உண்மையில் நீ சொல்வது சரி, யார்திகுலக். கிர்தினேக் என்பதை விட ஷிர்டாக் என்று அழைப்பது சிறந்தது.’’

கிர்தினேக் என்றால் துருக்மேனிய மொழியில் ‘குட்டையான’ எனப் பொருள்படும்.

‘‘ஷிர்டாக், நீ பெயரை மாற்றிக்கொண்ட பிறகு சற்று வளர்ந்திருப்பதாகத் தோன்றுகிறதா?’’ என்று யார்திகுலக் கேட்டான்.

''உண்மைதான்'' ஷிர்டாக் ஒப்புக்கொண்டான். ''ஆனால் நான் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். நாம் நம்மை அளந்து பார்க்கலாம்.''

அவர்கள் முதுகோடு முதுகு வைத்துக்கொண்டார்கள். இருவரில் தான் குட்டை என்பதை உணர்ந்த ஷிர்டாக், யார்திகுலக்கிற்குச் சரியாக நிற்கும் வரை தனது கால் விரல்களில் நின்று தன்னை உயர்த்திக்கொண்டான்.

''பார்க்கிறாயா?''

''நான் எல்லாவற்றையும் பார்க்கிறேன்'' என்று யார்திகுலக் பதிலளித்தான்.

இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். பிறகு உட்கார்ந்து ஓய்வெடுக்க முடிவு செய் தார்கள்.

## ஷிர்டாக்கும் தூர்திலியும்

சிறு பையன் அழுது கொண்டிருந்தான். பெரிய பையன்கள் அவனது வில்லை உடைத்துவிட்டார்கள்.

''அருமையான ஆளப்பா! சிறிய விஷயம் தவறானால் கூட சிறுமியைப் போல அழுகிறாய்!'' என்று ஷிர்டாக் கோபமாகச் சொன்னான்.

தனது சட்டைக் கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பையன் சுற்றிலும் கவனிக்கத் தொடங்கினான்.

''இதோ நான் வந்துவிட்டேன்!'' தனது பெருவிரல்களில் நின்று தன்னை உயர்த்தியவாறு ஷிர்டாக் சொன்னான்.

''ஆகா! என்ன அருமையான சாமான்! உண்மையான மனிதனைப் போல. என்ன தொப்பி!'' பையன் உற்சாகத்தோடு கத்தினான், தனது வில் உடைந்ததைப் பற்றி மறந்தவனாக.

''நான் சாமான் இல்லை. என் பெயர் ஷிர்டாக்.''

''ஷிர்டாக்?''

''ஆமாம், ஷிர்டாக். உன் பெயர் என்ன?''

''என் பெயர் தூர்திலி!'' பையனுடைய கண்கள் மின்னிக் கொண்டிருந்தன. அத்தகைய பொம்மையை அவன் பார்த்ததே இல்லை: அது பேசியது, நகர்ந்தது, விவாதமும் செய்தது! ''நான் உன்னைத் தூக்கலாமா?''

''தூக்கு!'' என்ற ஷிர்டாக், பையனுடைய நீட்டிக் கொண்டிருந்த உள்ளங்கையின் மீது ஏறினான்.

மிக நன்றாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக தூர்திலி அந்தச் சிறிய மனிதனை தனது முகத்திற்கு அண்மையில் உயர்த்தினான். அப்போது ஷிர்டாக் குதித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தான்:

ஷிர்டாக் என்பவன் வாழ்ந்தான்.
தூர்தாக் என்பவனும் வாழ்ந்தான்.
இருவரும் நண்பர்கள் ஆயினர்,
இருவரும் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

''நாம் ஏன் நண்பர்களாகக் கூடாது!'' என்று முன்மொழிந்த தூர்திலி கணநேரச் சிந்தனைக்குப் பிறகு சொன்னான்: ''நீ உண்மையிலே நிஜமாக இருந்தால்.''

''நிச்சயமாக, நான் நிஜமானவன்!'' என்றான் ஷிர்டாக்.

திரும்பவும் ஷிர்டாக்கைத் தரையில் இறக்கி விட்ட தூர்திலி திடீரென்று கவலையடைந்தான்.

''ஏன் உதட்டைப் பிதுக்குகிறாய்?'' என்று ஷிர்டாக் குழப்பத்துடன் கேட்டான்.

''நாம் உண்மையாகவே நண்பர்களா?''

''உண்மையாகத்தான்.''

''அப்படியானால் என் வீட்டிற்கு வருவாயா?''

''எதற்காக வர?''

''விளையாட. நீ விரும்பினால் புத்தகம் படித்துக் காட்டுகிறேன்.''

''சரி'' என்று ஷிர்டாக் ஒப்புக்கொண்டான், ''நாம் போய் ஒரு புத்தகம் படிக்கலாம்.''

அது தேவதைக் கதைகள் கொண்ட புத்தகம். மனம்போனவாறு அதைத் திறந்தார்கள். கழுதையினுடைய காதுகள் கொண்ட அரசனைப் பற்றிய கதையை தூர்திலி படித்தான். அரசனுடைய நாவிதன் பயங்கரமான ரகசியத்தை அறிந்திருந்தான், அதை வேறு யாரிடமும் சொல்ல முடியாது என்பது அவன் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. அந்த ரகசியத்தை வெளியிட்டால் தலையைச் சீவி விடுவதாக அரசன் அச்சுறுத்தியிருந்தான். ஆகவே அப்பாவி நாவிதன் ஒரு கைவிடப்பட்ட கிணற்றுக்குள்ளாகத் தனது ரகசியத்தைச் சத்தம் போட்டுச் சொன்னான். காலம் செல்லவும், கிணற்றுக்கு அருகே நாணல் வளர்ந்தது. அவ்வழி வந்த மேய்ப்பன் ஒருவன் ஒரு நாணலை வெட்டிப் புல்லாங்குழல் செய்தான், அது அரசனுடைய கழுதைக் காதுகள் பற்றிய ரகசியத்தை அவனுக்கும் முழு உலகத்திற்கும் அறிவித்தது.

''மிகவும் அறிவூட்டுகிற கதை'' என்றான் ஷிர்டாக். ''உன்னால் ஒரு ரகசியத்தைக் காப்பாற்ற முடியுமா, தூர்திலி?''

''நிச்சயமாக என்னால் முடியும்.''

''நல்லது. இதை நினைவில் கொள், தூர்திலி, நமது நட்பைப் பற்றி யாரிடமாவது நீ சொன்னால் நான் காணாமற் போய்விடுவேன்.''

''எப்படி?''

''இது போலத்தான்.''

நொடிப் பொழுதில் அந்தச் சிறிய மனிதன் மறைந்து போனான்.

''ஷிர்டாக்! ஷிர்டாக்!'' தூர்திலி மூர்க்கத்தனமாகக் கத்தினான்.

''இதோ இருக்கிறேன்! உரக்கக் கத்த வேண்டாம்!'' தனது காதுகளைப் பொத்தியவாறு ஷிர்டாக் அதே இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

''திரும்பவும் காணாமற் போய்விடாதே!'' என்று தூர்திலி கெஞ்சினான். ''நான்

அது பற்றி மூச்சு விடமாட்டேன். நீ விரும்பினால், எனக்கு மிகவும் விருப்பமான கார்ல்சன் பற்றிய கதையைப் படிப்பேன். அதற்கு கடைசிப் பகுதி கிடையாது, ஆனால் நான் எப்படியும் படிப்பேன்.''

''முடிவு என்ன ஆயிற்று?''

''என் தம்பி அதைக் கிழித்துவிட்டான். அவன் இன்னமும் குழந்தைதான். ஆனால் புத்தகம் மிகவும் விருவிருப்பானது. முடிவு இல்லை என்றாலும் பரவாயில்லை.''

''ஆனால் கதை எப்படி முடிகிறது என்பதை நீ அறிய விரும்பவில்லையா?''

''நிச்சயமாக நான் விரும்புகிறேன்!''

''அப்படியானால் இப்போது விடைபெற்றுக் கொள்வோம்'' என்றான் ஷிர்டாக். ''உனக்காகப் புதிய புத்தகம் ஒன்றைக் கண்டுபிடிக்க முடியும் என்று நினைக்கிறேன்.''

## வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்

ஷிர்டாக் போன உடனேயே, தூர்திலி சைக்கிளில் ஏறி அவனது அப்பா வேலை செய்த லாயத்துக்கு ஓட்டிச் சென்றான். தூர்திலியும் அவனது அப்பாவும் மிகவும் நெருக்கமான நண்பர்கள்.

இலாயத்தை நெருங்கிய போது ''அப்பா!'' என்று தூர்திலி கத்தினான், ''நானாகவே ஒரு புதிய நண்பனைக் கண்டு கொண்டேன். அவன் நம்முடன் வசிக்கப் போகிறான்.''

''உன்னுடைய இந்தப் புதிய நண்பன் யார்?'' துளியும் வியப்படையவில்லை என்பது போலக் காட்டிக்கொண்டு, அவனது அப்பா கேட்டார்.

''அப்பா, அதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்! அவன் மிகச் சிறிய மனிதன்! நான் எப்படி விவரிக்க முடியும்? கடைசிப் பகுதி இல்லாமல் நம் வீட்டில் இருக்கும் புத்தகம் நினைவிருக்கிறதா? அந்தப் புத்தகத்தில் வரும் பையனுக்கு கார்ல்சன் என்ற பெயருடைய நண்பன் இருந்தான்.''

''உனக்குச் சொந்தமாக கார்ல்சன் இருக்கிறானா?'' என்று அவன் அப்பா கேட்டார்.

''கார்ல்சன் இல்லை, ஷிர்டாக். அவன் மிகவும் சிறியவன். உள்ளங்கையில் அடங்கிவிடுவான். வாருங்கள், அவனை உங்களுக்குக் காட்டுகிறேன். எங்களது நட்பைப் பற்றி யாரிடமும் மூச்சு விடக்கூடாதென்று என்னிடம் உறுதிவாங்கி இருக்கிறான். ஆனால் உங்களைத் தவிர வேறு யாரிடமும் நான் சொல்லவில்லை... வாருங்கள் போகலாம்! வேகமாக!''

''சரி'' என்று அவன் அப்பா ஒப்புக்கொண்டார். ''நாம் போவோம்.''

தூர்திலியினுடைய சைக்கிளை மோட்டார் சைக்கிளின் பக்க வண்டியில் வைத்துக் கொண்டு, வீடு நோக்கிப் புறப்பட்டார்கள்.

''ஷிர்டாக்!'' தனது அறைக்குள் ஓடிக் கொண்டே தூர்திலி கத்தினான். ''எங்கு இருக்கிறாய்?''

ஆனால் சிறிய மனிதன் அறையில் இல்லை.

''ஒருவேளை இன்னமும் திரும்பி வராமல் இருக்கலாம்! புத்தகத்தைத் தேடிச் சென்றிருப்பான்.''

''தூர்திலி, உனக்கு அபாரமான கற்பனை ஆற்றல்'' முகத்தைச் சுழித்தவாறு அவன் அப்பா சொன்னார்.

''அப்பா, அவன் இங்குதான் இருந்தான்!'' என்று தூர்திலி கத்தினான். திடீரென்று மேசையின் மீது இருந்த புத்தகத்தைக் கண்டான். ''அப்பா, பாருங்கள்!'' என்று சத்தம் போட்டான்.

அது பையனையும் கார்ல்சனையும் பற்றிய புத்தகம்—புத்தம் புதியது, கடைசிப் பகுதி கொண்டது.

''அவன் திரும்பி வந்துவிட்டான்!'' தூர்திலி கத்தினான், கைகளைத் தட்டினான். ''தன் வாக்கைக் காப்பாற்றி விட்டான்!''

அப்பா புத்தகத்தை எடுத்துத் தனது கையில் புரட்டினார்.

''உண்மையில் அதிசயந்தான்! உன் நண்பனின் பெயர் என்ன?''


''ஷிர்டாக்!''

திடீரென்று தூர்திலியினுடைய தலைக் கவிழ்ந்து, கன்னங்களின் வழியாகக் கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது.

''என்ன நடந்தது?'' அவனது அப்பா வியப்புடன் கேட்டார்.

''ஷிர்டாக் தன் வாக்கைக் காப்பாற்றி விட்டான், ஆனால் நான் காப்பாற்றவில்லை. எங்களது ரகசியத்தை நான் வெளியிட்டுவிட்டேன். இப்போது அவன் மீண்டும் திரும்பி வர மாட்டான்.''

''நடந்தது நடந்ததுதான்'' என்ற அப்பா தூர்திலியை அணைத்துக் கொண்டார். ''வாக்குக் கொடுத்து விட்டால், காப்பாற்ற வேண்டும்! ஒருவனுடைய வாக்கு இரும்பு போல உறுதியாக இருக்க வேண்டும்.''



# தவறான திட்டம்

யார்திகுலக்கைப் போய்ப் பார்ப்பதென்று ஷிர்டாக் முடிவு செய்தான். ஒரு பழைய முசுக்கட்டை மரத்திற்கு அருகே சிறிய வீடு ஒன்று இருந்தது. கதவு மூடப் பட்டு ஒரு குச்சியால் முட்டுக்கொடுக்கப்பட்டு, வீட்டுக்காரன் வீட்டில் இல்லை என்பதைக் காட் டியது.

ஷிர்டாக் புறப்பட்டுப் போகவிருந்த போது, தரையின் மீது அம்புக்குறி இடப்பட் டிருந்ததைத் திடீரென்று பார்த்தான். சில எட்டுகளுக்குப் பிறகு மற்றொரு அம்புக் குறியைப் பார்த்தான். அவை யார்திகுலக்கின் இருப்பிடத்தைச் சுட்டிக்காட்டுவது போல இருந்தன.

அமானுடைய பழத் தோட்டத்தைச் சுற்றி இருந்த உயரமான வேலிக்கு அம்புக்குறிகள் ஷிர்டாக்கைக் கொண்டு சென்றன. ஓர் அம்புக்குறி மரப்பலகைகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டியது. ஷிர்டாக் தனது முழு பலத்துடன் பலகை மீது சாய, அது வழி விட்டது.

பழத்தோட்டம் விசாலமானதாக இருந்தது. ஆப்ரிகாட் மரக்கிளைகள் பழுத்த பழங்களின் நிறைதாங்காது வளைந்து தொங்கின.

படார்! ஆப்பிள் அளவிலான ஒரு பெரிய ஆப்ரிகாட் ஷிர்டாக்கினுடைய பாதங்களில் விழுந்தது.

ஷிர்டாக் கழுத்தை நிமிர்த்தி மேலே பார்த்தான். நிச்சயமாக அது பற்றி அவனுக்குத் தெரியும்—யார்திகுலக் திரும்பவும் குறும்பு செய்திருக்கிறான்.

‘‘அமானுடைய பழத்தோட்டத்தில் இந்த மரத்தில் என்ன செய்து கொண் டிருக்கிறாய்?’’

‘‘உனக்காகக் காத்திருக்கிறேன்.’’

‘‘எனக்காகவா?’’

‘‘ஷிர்டாக், நீதான் சிறுவர் சிறுமிகளின் சிறந்த நண்பன். எல்லாரையும் இங்கே கூப்பிடு. இந்த அற்புதமான பழங்களை மரத்தினின்றும் குலுக்குகிறேன். அவர்கள் எல்லாரும் தின்று சுவைக்கட்டும்.’’

‘‘ஆனால் யார்திகுலக், அமான் அவர்களை விட மிகவும் கருமித்தனம் செய்யும் ஆள் யாரும் இல்லை என்பது உனக்கு நன்றாகத் தெரியும். குளிர்காலத்தில் கூட ஒரு வாளி பனிக்கட்டி தரமாட்டார் என்று சொல்வார்கள்.’’

‘‘காலப்போக்கில் அவர் பாடம் கற்றுக் கொண்டு விட்டார்! எல்லா நாய்களையும் தூங்க வைத்து விட்டேன், அமான் அவர்களும் இன்று நகரத்தில் இருக்கிறார். விரைந்து போய் உன் அருமை நண்பர்களைக் கூப்பிடு.’’

ஷிர்டாக் கூடாதெனத் தலையை அசைத்தான்.

‘‘தங்களுக்குச் சொந்தமில்லாததை என் நண்பர்கள் எடுக்கமாட்டார்கள்.’’

‘‘ஆனால் சுற்றிலும் சற்று பார்! பழச்சுமை தாங்காமல் கிளைகள் வளைந்திருக் கின்றன. இத்தகைய விளைச்சலை அமான் அவர்களாலேயே சேகரிக்க முடியாது. பாதி ஆப்ரிகாட்டுகள் மரங்களிலேயே அழுகிப் போய்விடும்.’’

''இல்லை, யார்திகுலக்! உனது திட்டம் சரிப்பட்டு வராது. அமான் அவர்களே சிறுவர்களையும் சிறுமிகளையும் அழைக்குமாறு ஏற்பாடு செய்வதே நல்லது.''

''அப்படியானால் சரி! நான் ஏதாவது கண்டுபிடிப்பேன்!'' யார்திகுலக் மரத்தினின்றும் கீழே இறங்கினான். ''என் வீட்டுக்கு நாம் போகலாம்.''

''நானும் வர விரும்புகிறேன். ஆனால் சிறுமி மெங்லி ஏதேனும் சங்கடத்தில் இருக்கிறாள் என்று உணர்கிறேன். நான் போய் அவளுக்கு உதவ வேண்டும்.''

ஷிர்டாக் தனது தொப்பியை இழுத்து விட்டுக்கொண்டு சீட்டியடித்தான். அதே நொடியில் காட்டுப்புறா ஒன்று தரையில் இறங்கியது. ஷிர்டாக் அதன் முதுகின் மீது ஏறிக்கொண்டு பறந்து போனான்.

## மெங்லியும் கோழிக்குஞ்சும்

ஊர் சுற்றும் நாய் ஒன்று கோழிக்குஞ்சு ஒன்றைக் கவ்விப் பிடித்தது. மூர்க்கத்தனமாகக் கத்தியபடி, தாய்க்கோழி நாயை நோக்கி விரைந்தது. தாய்க்கோழிக்கு உதவ மெங்லி வீட்டை விட்டு வெளியே ஓடினாள். கோழிக்குஞ்சை விட்டுவிட்டு அந்த நாய் ஓட்டம் பிடித்தது.

ஓர் இறக்கை தொங்க, கோழிக்குஞ்சு புழுதியில் தட்டுத்தடுமாறி விழுந்தது.

மெங்லி துயரக் கண்ணீர் வடித்தாள்: அப்பாவிக் கோழிக்குஞ்சை அவள் எப்படிக் காப்பாற்றுவாள்?

''கண்ணீர் எந்த உதவியும் செய்யாது'' என்று மெல்லிய குரல் ஒன்று பேசியது. ''அதற்குத் தேவை மருந்தும் நல்ல பராமரிப்பும்.''

சிறுமி சுற்றிலும் பார்த்தாள், ஆனால் யாருமே காணப்படவில்லை.

''நான்தான் உன்னுடன் பேசுகிறேன். என் மீது காலை வைத்துவிடாமல் கவனமாக இரு!''

மெங்லி கீழே தனது பாதங்களை நோக்க, தொப்பியணிந்த சிறிய மனிதன் ஒருவனைக் கண்டாள்.

''நீ ஷிர்டாக்கா?''

''ஆமாம்.''

''எனக்கு உதவ வந்திருக்கிறாயா?''

“நாம் வேலையை ஆரம்பிக்கலாம், மெங்லி! ஒரு பழைய தொப்பி அல்லது கிழிந்த போர்வைத் துண்டு கொண்டுவா, கோழிக்குஞ்சுக்குக் கூடு தயாரிக்க வேண்டும்! ஆனால் முதன்முதலில் கோழிக்குஞ்சுக்குக் குடிக்க ஏதாவது கொடுக்க வேண்டும். கொஞ்சம் தவிடும் அவித்த முட்டையும் நன்கு வெட்டி தயாரி.”

மெங்லி கோழிக்குஞ்சுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்துவிட்டு அதற்குக் கூடு தயாரிக்கவும் உணவு கொடுக்கவும் ஏற்பாடு செய்தாள். இதற்கிடையே, ஷிர்டாக்



தேவையான எல்லாவற்றையும் கொண்டுவந்து விட்டான்: நாணல், மூமியோ மற்றும் மீன் எண்ணெய். கோழிக்குஞ்சினுடைய ஒடிந்த காலுக்கு நாணல் வைத்துக் கட்டி, மலையிலிருந்து கிடைக்கும் அற்புதமான மருந்தாகிய மூமியோவை கொஞ்சம் நீருடன் கலந்து நோயாளிக்குக் கொடுத்தார்கள். பிறகு மீன் எண்ணெய்யை காயமுற்ற இறக்கையில் தேய்த்தார்கள்.

மெங்லியினுடைய முற்றத்திற்கு ஷிர்டாக் மூன்று நாள்களுக்கு காலையில் வந்தான்; நான்காவது நாளன்று சொன்னான்:

“இந்த மாதிரி அவசரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது இப்போது உனக்குத் தெரியும். கோழிக்குஞ்சு சீக்கிரமே முற்றிலும் குணமடைந்து விடும். போய்வருகிறேன், மெங்லி.”

“நன்றி, ஷிர்டாக்! என்னுடைய நினைவாகத் தயவுசெய்து இதை ஏற்றுக்கொள்.”

பட்டு நூல்களால் தானே செய்த சின்னஞ்சிறிய இடைக்கச்சை ஒன்றை சிறிய மனிதனுக்கு அளித்தாள்.

ஷிர்டாக் அந்த இடைக்கச்சையை தனது இடுப்பில் கட்டிக்கொண்டு நீரில் தனது பிரதிபலிப்பைப் பார்த்தான். அது கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றான். காட்டுப்புறா முற்றத்தில் இறங்க, ஷிர்டாக் அதனது முதுகில் ஏறிக்கொண்டு பறந்து போனான்.

உண்மையில் கோழிக்குஞ்சு குணமடைந்து விட்டது. அது பல வண்ணச் சிறகுகளுடன் பெரிய கோழியாக வளர்ந்தது.

## கசப்பு மருந்து

தெங்லி குளிரால் தாக்கப்பட்டு நோயுற்றான். விநோதமான, குழப்பமான கனவுகள் காணத் தொடங்கினான். வெண்ணிற அரபியக் குதிரை ஒன்றில் சாமர்கண்ட் நகரத்தில் சவாரி செய்து உலுக்பெக் குன்றின் மீது ஏறி தொலைநோக்கி வழியாக நிலவைப் பார்ப்பது போலக் கனவு கண்டான். நிலவின் மீது அவனது அப்பா டிராக்டரால் வயலை உழுது கொண்டிருப்பதைக் கண்டான். பிறகு அவன் தூலா நகரைப் பற்றி கனவு காணத் தொடங்கினான். சரியாகச் சொன்னால், நகரத்தை அன்று, படைக்கருவி அருங்காட்சியகம் பற்றி. அருங்காட்சியகத்தைச் சுற்றிப் பார்த்து வந்த அவன் ‘காட்சிப் பொருள்களைத் தயவு செய்து தொடாதீர்கள்’ என்ற அறிவிப்பைக் கண்டான். எனினும், கள்ளத்தனமாக துப்பாக்கி ஒன்றின் விசையை இழுத்தான். ஒரு வெடி முழங்கியது... அதே நொடியில் ஒரு கத்தலுடன் விழித்து எழுந்து படுக்கையில் அமர்ந்தான். அவனுடைய தாயார் உடனடியாக அறைக்குள் நுழைந்து மருந்து சாப்பிடுமாறு அவனைக் கெஞ்சத் தொடங்கினாள்.

“அது கசக்கிறது!” என்று சொல்லிய தெங்லி மருந்தையும் தண்ணீர் கிளாசையும் அப்பால் தள்ளிவைத்து விட்டு தூங்கப் போவது போலப் பாசாங்கு செய்தான். உண்மையில் சீக்கிரமே அவன் நன்கு தூங்கிப் போய்விட்டான். திரும்பவும் அதே கனவைக் காணத் தொடங்கினான்.

இது தெங்லிக்கு துளிகூட வியப்பு ஏற்படுத்தவில்லை. சற்று முன்னர்தான் அவனுக்கு ‘சாமர்கண்ட்’, ‘தூலாவில் படைக்கருவி அருங்காட்சியக’ பேட்ஜுகள் இரண்டு கொடுக்கப்பட்டன. ஆனால் திடீரென்று அவன் ஓரளவு அதிர்ச்சியுற்றான், ஏனெனில் சாமர்கண்டும் வெண்ணிறக் குதிரையில் தானுமாகப் பார்ப்பதற்குப் பதிலாக தொப்பியுடன் இருந்த சிறிய மனிதன் ஒருவனைப் பார்த்தான்.

''உன் அம்மாவுக்கு என் சிரமம் கொடுக்கிறாய்?'' என்று அந்த மனிதன் கேட்டான். ''உனக்குச் சுகமில்லாது இருக்கிறது, இந்த மருந்தை இப்போது குடி!''

''ஆனால் நீ யார்?'' தெங்லி எச்சரிக்கையுடன் கேட்டான்.

''என்னை உனக்கு அடையாளம் தெரியவேயில்லையா?''

''நீ ஷிர்டாக்காக இருக்கலாம். ஆனால் ஷிர்டாக் அன்புடன் இருக்க வேண்டும், நீயோ கத்துகிறாய்.''

''நான் அன்பானவன். நீ சீக்கிரம் குணமடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உன் அம்மாவைக் கூப்பிட்டு மருந்தைச் சாப்பிடு. இத்தகைய வீரச்செயலுக்கு எந்தப் பரிசும் உனக்கு வாக்களிக்க முடியாது. ஆனால் உனக்கு ஒரு கதை சொல்வேன்.''

எந்தச் சிந்தனையுமின்றி தெங்லி தன் அம்மாவை அழைத்து மருந்தைக் குடித்தான். அம்மா விளக்கை அணைத்து விட்டு அமைதியாக அறையை விட்டு வெளியேறினாள்.

''ஷிர்டாக்!'' தெங்லி கிசுகிசுத்தான். ''நான் மருந்து சாப்பிட்டு விட்டேன்! நீ எங்கே இருக்கிறாய்?''

''இங்கே இருக்கிறேன்'' என்ற ஷிர்டாக் தலையணையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ''உன் மருந்தை ஒழுங்காகக் குடித்துவிட்டாய்; இப்போது கேள்.'' ஷிர்டாக் தனது கதையைத் தொடங்கினான்.



## நன்மையும் தீமையும்

மிக நீண்ட காலத்திற்கு முன்னால் கிழவன் ஒருவன் வாழ்ந்தான். வயதான மனைவியையும் வலுவிழந்த கிழட்டுக் கழுதையையும் தவிர அவனுக்குச் சொந்தமாக எதுவும் இல்லை. பாலைவன மணலில் விறகு பொறுக்கி அதைச் சந்தையில் விற்று கிழவன் வாழ்க்கையை நடத்தினான்.

ஒரு சமயம் மணற்பரப்பில் தேடி அலைந்த போது வானத்தை எட்டுகிற இரண்டு சுழற்காற்றுகளை, ஒன்று கருப்பும் மற்றது வெள்ளையுமாகப் பார்த்தான்.

நன்கு பார்க்க வேண்டும் என அவன் அருகே சென்ற போது வெண்ணிறச் சுழற்காற்று திடீரென்று வெண்ணிறப் பாம்பாக மாறியது.

பாம்பு கிழவனிடம் ஊர்ந்து வந்து மனிதக் குரலில் பேசியது:

''கிழவனே! நான் விரும்பியவாறு என்னால் உருமாற்றிக் கொள்ள முடியும். இப்போது நான் ஊசியாக மாறுவேன், நீ விரைந்து என்னை உனது பைக்குள்ளாக ஒளித்து வைத்துக் கொள்ள வேண்டும். கருநிறப் பாம்பு எனது பரம விரோதி. அது

உன்னைக் கடந்து போனதும், பையிலிருந்து ஊசியை வெளியே எடு, நீ விரும்பியது எதுவாக இருந்தாலும் உனக்கு வழங்குகிறேன்.''

அடைக்கலம் தேடியதற்கு உதவ கிழவன் ஒப்புக்கொண்டான்.

''வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் நான் ஊசி யாக மாறுவேனாக!'' வெண்ணிறப் பாம்பு இப்படிச் சொன்ன உடனேயே ஊசியாக மாறியது.

கிழவன் விரைந்து அதை எடுத்து தனது பைக்குள் போட்டுக்கொண்டான்.

அப்போது கருப்புச் சுழற்காற்று சுழன்றடித்துக் கொண்டு அங்கே வந்து கருநிறப் பாம்பாக மாறியது.

''ஏய், கிழவனே,'' எனக் கேட்டது, ''இப்பக்கமாக வெண்ணிறப் பாம்பு ஒன்றைப் பார்த்தாயா?''

கருநிறப் பாம்பைக் கழித்துக் கட்டுவதற்காக கிழவன் தனது கையை அசைத்துக் காட்டிச் சொன்னான்:

''அது என்ன என்று எனக்கு உறுதியாகத் தெரியாது, ஆனால் ஒருவித வெண்ணிறச் சுழற்காற்று அப்பக்கமாக அடித்துக் கொண்டு சென்றது.''

கருநிறப் பாம்பு உடனே சுழற்காற்றாக மாறி தேடிக் கொண்டு புறப்பட்டது.

கிழவன் ஊசியை வெளியே எடுத்துச் சொன்னான்:

''உனது எதிரி போய்விட்டது!''

ஊசி திரும்பவும் பாம்பாக மாறியது.

''ஓ, எனது இரட்சகனே! என்னிடம் நீ எது கேட்டாலும் உனக்குக் கிடைக்கும்!''

''நான் அதிகம் கேட்கமாட்டேன். விறகுக் கட்டு தானாகவே கழுதையின் முதுகில் ஏறிக்கொள்ளவும் நான் ஓட்டாமல் தானாகவே கழுதை செல்லவும் முடிந்தால் போதும்.''

''வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் கிழவனுடைய ஆசை நிறைவேறட்டும்!'' வெண்ணிறப் பாம்பு உத்தரவிட்டது.

உடனே கிழவனுடைய ஆசை நிறைவேறியது. விறகு தானாகவே கழுதையின் முதுகில் ஏறிக் கொண்டது, கழுதையும் அதுவாகவே வீடு நோக்கிச் சென்றது. நகரச் சுவர்களின் அருகே அவன் அரசனுடைய மகளைச் சந்தித்தான். வெண்ணிற ஒட்டகத்தின் முதுகில் பொன் முலாமிடப்பட்ட பல்லக்கில் அவள் அமர்ந்திருந்தாள். எந்தத் தூண்டுதலும் இன்றி தனது எசமானனுக்கு முன்னால் சென்ற கழுதையைப் பார்த்ததும், ஒட்டகத்தை நிறுத்தும்படி தனது வேலையாட்களுக்கு அரசனின் மகள் உத்தரவிட்டு, கிழவனிடம் பேசினாள்:


''இதைப் பார்க்கும் போது, பயிற்சி பெற்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. கிழவனே, யார் இதற்குப் பயிற்சி அளித்தது என்று கூறு.''

''நீங்கள் யார்?'' கிழவன் கேட்டான்.

''நான் அரசனின் மகள்.''

''அப்படியானால் நான் பதில் சொல்லமாட்டேன். என்னுடைய பதில் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், என்னைத் தூக்கிலிட உத்தரவிடுவீர்கள்.''

''நீ பயமின்றி பேசலாம்'' அப்பெண் உறுதி சொன்னாள்.



‘‘நல்லது, பசிதான் அதற்குப் பயிற்சி அளித்தது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.’’

அரசனின் மகள் தொடர்ந்து சென்றாள், ஆனால் ஒற்றர்களோ தாங்கள் பார்த்ததை உடனடியாக அரசனிடம் அறிவித்துவிட்டார்கள்:

‘‘சந்தையில் விறகு விற்கும் ஒரு கிழவனிடம் உங்கள் மகள் பேசிக் கொண்டிருந்தாள்.’’

கோபமுற்ற அரசன், கிழவனைப் பிடித்து வந்து தனக்கு முன்னர் நிறுத்தும்படி கட்டளையிட்டான்.

கிழவனை மாளிகைக்குள்ளாக இழுத்துக் கொண்டு வர, அரசன் விசாரணையின்றி உத்தரவிட்டான்:

‘‘விசுவாசம் இல்லாத இந்தக் கயவனுக்குக் கசையடி கொடுத்து நகரை விட்டுத் துரத்துங்கள்!’’

அரசனுடைய ஆட்கள் கிழவனுக்குக் கசையடி கொடுத்தார்கள், காவலர்கள் அவனுடைய கலகலத்துப் போன குடிசைக்குத் தீ வைத்தார்கள், அவனும் அவன் மனைவியும் நகரை விட்டுத் துரத்தப்பட்டார்கள்.

ஆகவே அவர்கள் மணற்பரப்பில் அலைந்த போது வெண்ணிறப் பாம்பு திடீரென்று அவர்களுக்கு முன்னே தோன்றியது.

‘‘கிழவனே, உனக்கு என்ன நேர்ந்தது?’’

கிழவன் பதிலளித்தான்:

‘‘ஏதோ அற்ப விஷயத்திற்காக எங்கள் அரசன் எனக்குக் கசையடி கொடுத்து, நாட்டை விட்டே துரத்திவிட்டான். நீ எனக்கு ஒரு மாளிகை கட்டித்தந்தால் நல்லது. களிமண் அடுப்புகள் மாளிகைச் சுவர்களுக்கு வெளியே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.’’

‘‘வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் கிழவனுடைய ஆசை நிறைவேறட்டும்!’’ வெண்ணிறப் பாம்பு உத்தரவிட்டது.

இமைப் பொழுதில் சலவைக்கல் மாளிகை ஒன்று பாலைவனத்தில் எழுந்தது. கிழவனும் கிழவியும் அதில் தங்கி ஆடம்பரமும் வசதியுமான வாழ்க்கை வாழத் தொடங்கினார்கள்.

ஒருநாள் வேட்டைக்கு வந்த சமயம் பாலைவனத்தில் இருந்த இந்த மாளிகையை அரசன் காண நேர்ந்தது. உடனே அரசன் தனது காவலர்களை அழைத்து உத்தரவிட்டான்:

‘‘எனது அநுமதி இல்லாமலே யாரோ எனது இடத்தில் மாளிகை கட்டியிருக்கிறான். அந்த விசுவாசமற்ற போக்கிரியைப் பிடித்து வந்து என் முன் நிறுத்துங்கள். அவன் தடுக்க முயன்றால், அவன் தலையை என்னிடம் கொண்டுவாருங்கள்!’’

பயங்கரமான இரைச்சலுடனும் ஒலியுடனும் அரசனுடைய காவலர்கள் சலவைக்கல் மாளிகைக்குச் சென்றார்கள். அதே கணத்தில் வெண்ணிறப் பாம்பு கிழவனுக்கு முன்னர் தோன்றிக் கேட்டது:

‘‘அவர்களை நான் என்ன செய்யட்டும்?’’

‘‘உனக்குச் சரியெனத் தோன்றுவதைச் செய்’’ என்று கிழவன் பதிலளித்தான்.

‘‘வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் கிழவனின் சம்மதத்துடனும் இந்த வீரர்கள் அரசனுடைய மண்டபத்திற்கு பின்னோக்கிச் சவாரி போவார்களாக!’’

வெண்ணிறப் பாம்பு சொன்னது போலவே எல்லாம் உடனே நடந்தன.

அரசனுடைய மண்டபத்திற்குக் காவலர்கள் நடுங்கிக் கொண்டு பின்னோக்கிச் சென்றார்கள்; தலைமைக் காவலன் அரசனது பாதங்களில் விழுந்து, ‘‘அத்தகைய எதிரியிடமிருந்து கடவுள் எங்களைக் காப்பாற்றட்டும்! அரசரே, அவனுடன் நீங்களே போர் தொடுங்கள். எங்களுக்கு என்ன நேர்ந்தது என்று பாருங்கள். நாங்கள் அவனது முகத்தைக் கூட பார்க்கவில்லை!’’ என்றான்.

‘‘உதவாக்கரைகளே!’’ என்ற அரசன் கோபத்தால் தனது பாதங்களை மிதித்தான். தலைமைக் காவலனின் கன்னத்தில் அறை கொடுத்த பிறகு, தலைமை அமைச்சனுடன் சலவைக்கல் மாளிகைக்கு விரைந்து சென்றான்.

அவர்கள் நெருங்கி வருவதைக் கண்ட கிழவன் வெண்ணிறப் பாம்பிடம் சொன்னான்:

‘‘அரசன் தலைமை அமைச்சனுடன் வருகிறான்!’’

‘‘அவர்களை நான் என்ன செய்யட்டும்?’’ வெண்ணிறப் பாம்பு கேட்டது.

‘‘உனக்குச் சரியெனத் தோன்றுவதைச் செய்’’ என்று முன்னர் சொன்னது போலவே கிழவன் பதிலளித்தான்.

‘‘வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் கிழவனின் சம்மதத்துடனும் அரசன் ஆண் கழுதையாகவும் தலைமை அமைச்சன் கழுதைக்குட்டியாகவும் போவார்களாக! அவர்கள் கனைத்துக் கொண்டு சலவைக்கல் மாளிகையை ஏழு முறை சுற்றி வருவார்களாக!’’

அரசனும் தலைமை அமைச்சனும் உடனடியாக ஆண் கழுதையாகவும் கழுதைக் குட்டியாகவும் மாறி கரகரப்பான குரலில் கனைத்துக் கொண்டு சலவைக்கல் மாளிகையைச் சுற்றி துரிதமாக வரத் தொடங்கின.

அதே நேரத்தில் கிழவனுடைய மனைவி களிமண் அடுப்பில் வெளியே ரொட்டி சுட்டுக் கொண்டிருக்குமாறு நேர்ந்தது. இரண்டு கழுதைகள் பாய்ச்சலில் வருவதைப் பார்த்ததும், ஒரு குச்சியால் அவற்றை அப்பால் விரட்டினாள், அது அரசனும் தலைமை அமைச்சனும் என்பது தெரியாதபடி. மாளிகையை ஏழு முறை சுற்றி வந்த பிறகு கழுதைகள் நின்றன.

‘‘வெண்ணிறப் பாம்பின் பெயராலும் கருநிறப் பாம்பின் பெயராலும் கிழவனின் சம்மதத்துடன் முன்னர் இருந்தது போல இருவரும் ஆவீர்களாக!’’ வெண்ணிறப் பாம்பு கட்டளையிட்டது.

ஆகவே ஆண் கழுதையும் கழுதைக்குட்டியும் அரசனாகவும் தலைமை அமைச்சனாகவும் திரும்பவும் மாறினர்.

‘‘ஓ மரியாதைக்குரிய வெண்ணிறப் பாம்பே!’’ கிழவன் சொன்னான். ‘‘அவர்களுக்கு மிகவும் சுமாரான பிழைப்பை வழங்கு. இதன் பிறகு அவர்கள் வீடு இல்லாமல் நாட்டைச் சுற்றி அலையட்டும், மற்றவர்கள் பற்றி அவர்கள் ஆசைப்பட்டது போல. அவர்களும் தாங்களாகவே நன்மையையும் தீமையையும் உணரட்டும்!’’

மறுநாள் தெங்லி தனது மருந்தை சிரத்தையுடன் குடித்தான். அன்று இரவு ஷிர்டாக் மீண்டும் அவனைப் பார்க்க வந்து மற்றொரு கதை சொன்னான்.

## ஒற்றைக்கண் அண்டங்காக்கை

முன்னொரு காலத்தில் மாடு மேய்ப்பன் ஒருவன் தன் மனைவியுடன் வாழ்ந்தான். அவனுக்கு களிமண் குடிசையும் ஒரு பசுவும் இருந்தன. மேய்ப்பனுடைய மனைவி பசுவிடம் பால் கறந்தாள். மேய்ப்பன் பாலடைக்கட்டி தயாரித்து காய்வதற்காகக் கூரையின் மீது வைத்தான். யாரோ வந்து அதைத் திருடிக்கொண்டு போவதை ஒரு நாள் கண்டுபிடித்தான்.

அவனும் அவன் மனைவியும் திருடனைப் பிடிக்க மறைந்திருந்து காத்திருப்ப தென்று முடிவு செய்தார்கள். அவர்கள் எவ்வளவு நேரம் காத்திருந்தார்களோ யாருக்கும் தெரியாது, கடைசியில் ஒற்றைக்கண் அண்டங்காக்கை ஒன்று கூரையின் மீது இறங்கி பாலடைக்கட்டியைக் கொத்தத் தொடங்கியதைப் பார்த்தார்கள்.

மேய்ப்பன் அண்டங்காக்கையைப் பிடித்து அதனது கழுத்தைத் திருகவிருந்த போது அது கெஞ்சியது:

"என்னைக் கொல்லாதே, உனக்கு நல்ல வெகுமதி தருவேன். நாளை என் வீட்டுக்கு வா; யாரைக் கேட்டாலும் உனக்கு வழிகாட்டுவார்கள்."

மேய்ப்பனும் அவனுடைய மனைவியும் அண்டங்காக்கையினுடைய வார்த்தைகளை நம்பி அதைப் போகவிட்டார்கள்.

மறுநாள் தனது மந்தையை கிராமத்திற்கு ஓட்டிச் சென்ற மேய்ப்பன், ஒற்றைக்கண் அண்டங்காக்கையினுடைய வீட்டைத் தேடிப் புறப்பட்டான்.

எவ்வளவு நேரம் நடந்தானோ யாருக்கும் தெரியாது, கடைசியாக ஒற்றைக்கண் அண்டங்காக்கையினுடைய வீட்டை வந்தடைந்தான். அது மேய்ப்பனை இதயபூர்வமாக வரவேற்று, எல்லாவகையான இனிய உணவுகளையும் பரப்பி விருந்தளித்தது. அதன் பிறகு மேய்ப்பன் உட்கார்ந்து மனம் விட்டு நீண்ட நேரம் அதனுடன் பேசி மகிழ்ந்தான்.

பிரிகின்ற வேளையில், மேய்ப்பனுக்கு ஒரு மேசை விரிப்பை ஒற்றைக்கண் அண்டங்காக்கை பரிசளித்தது.

"'விரிவாய் மேசை விரிப்பே, விரிவாய்! உணவை நிறைப்பாய்!' என்று சொன்னதுமே, மேசை விரிப்பின் மீது எல்லாவித உணவு வகைகளும் தோன்றும். வயிறு நிறையச் சாப்பிட்டதும் 'மூடுவாய் மேசை விரிப்பே, மூடுவாய்!' என்று சொல்."

வீடு திரும்பியதும் மேய்ப்பன் தன் மனைவியிடம் சொன்னான்:

"உன் கைகளைக் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்!"

''நாம் என்ன சாப்பிடப் போகிறோம்? நான் எதுவும் சமைக்கவில்லையே'' என்று அவன் மனைவி சொன்னாள்.

மேய்ப்பன் தனது கைகளைக் கழுவிக்கொண்டு கம்பளியின் மீது அமர்ந்தான். தனது முன்னால் மேசை விரிப்பைப் போட்டுவிட்டுச் சொன்னான்:

''விரிவாய் மேசை விரிப்பே, விரிவாய்! உணவை நிறைப்பாய்!''

மேசை விரிப்பு விரிய, அதன் மீது எல்லாவகையான உணவுகளும் இருந்தன!

அவர்கள் சாப்பிட்டு முடிந்த பிறகு மேய்ப்பன் சொன்னான்:

''மூடுவாய் மேசை விரிப்பே, மூடுவாய்!''

மேசை விரிப்பு மூடிக் கொண்டது.

''நாளைக்கு அரசனையும் அரசவைப் பிரதானிகளையும் விருந்திற்கு அழைக்கலாம் என்று நினைக்கிறேன்!'' என்றான்.

''அந்த எண்ணத்தை மறந்து விடுங்கள்'' என்று கெஞ்சினாள் அவன் மனைவி. ''நமது அதிசயப் பொருளை அவர்கள் எடுத்துப் போய்விடுவார்கள்.''

''நான் தீர்மானித்து விட்டால் அது தீர்மானித்ததுதான்!'' என்று மேய்ப்பன் பிடிவாதமாகக் கூறினான். ''மேசை விரிப்பை நான்தான் பெற்றேன்.''

ஆகவே அவன் அரசனையும் அவனது பிரபுக்களையும் பெரும் விருந்திற்கு அழைத்தான். அவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்து கம்பளத்தில் அமர்ந்த போது, மேய்ப்பன் மேசை விரிப்பைப் போட்டு கட்டளையிட்டான்:

''விரிவாய் மேசை விரிப்பே, விரிவாய்! உணவை நிறைப்பாய்!''

கண் இமைக்கும் நேரத்தில் அற்புதமான உணவுவகைகள் அரசனுக்கும் அவனது அரண்மனைப் பிரதானிகளுக்கும் முன்னால் தோன்றின.

விருந்தினர்கள் உண்டு மகிழ்ந்து விட்டு விடை பெற்றுச் சென்றார்கள். ஆனால் அரண்மனைக்குத் திரும்பிய உடனேயே அரசன் தனது இரு காவலர்களிடமும் சொன்னான்:

''அந்தப் பிச்சைக்கார மேய்ப்பனிடமிருந்து அந்த அதிசயமான மேசை விரிப்பைக் கைப்பற்றி வாருங்கள். அவன் தர மறுத்தால் அவன் தலையைச் சீவி விடுங்கள்!''

காவலர்கள் மேய்ப்பனுடைய குடிசைக்குச் சென்று மந்திர மேசை விரிப்பைக் கைப்பற்றினார்கள்.

மேய்ப்பனுக்கோ ஒற்றைக்கண் அண்டங்காக்கையிடம் திரும்பச் செல்வதைத் தவிர வேறு வழியில்லாது போய்விட்டது. அதனது வீட்டை அடைந்ததும் புகார் செய்யத் தொடங்கினான்:

''எங்கள் அரசன் உனது மேசை விரிப்பை எடுத்துக்கொண்டு விட்டான்.''

ஆகவே மேய்ப்பனுக்கு கழுதை ஒன்றைக் கொடுத்து அண்டங்காக்கை அறிவுறுத்தியது:

'''ஹே!' என்று உத்தரவிடு, விட்டை போடுவதற்குப் பதிலாகத் தரையில் தங்கத்தைக் கொட்டும்.''

மேய்ப்பன் கழுதை மீது ஏறிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான், ஆனால் சாலையோ அரசனுடைய மாளிகையைக் கடந்து சென்றது.

''தொல்லையைத் தவிர்ப்பது நல்லது!'' என்று தனக்குள் எண்ணிய மேய்ப்பன்

கழுதையைத் தனது குதிகாலால் குத்தி, ''ஹே! ஹே!'' என்று கத்தினான். ஏனெனில் இது வழக்கமாகக் கழுதைகளைத் தூண்டுவதற்குப் பயன்படும் சொற்கள்தாம்.

இதைக் கேட்டதும் கழுதை தரையில் தங்கத்தைக் கொட்டத் தொடங்கியது. இந்த அதிசயத்தைக் கண்ட அரசன் கழுதையையும் பறித்துக்கொண்டான்.

மறுநாள் அப்பாவி மேய்ப்பன் திரும்பவும் அண்டங்காக்கையைப் பார்க்கப் புறப் பட்டான். நடந்து செல்கையில் அழுது புலம்பினான்.

''யார் உனக்குத் தீங்கு இழைத்தது?'' என்று ஒற்றைக்கண் அண்டங்காக்கை கேட்டது.

''எங்கள் அரசன் கழுதையை எடுத்துக் கொண்டான்!''

அண்டங்காக்கை சிடுசிடுத்தது, ஆனால் மேய்ப்பனுக்கு வர்ணம் பூசப்பட்ட பெட்டி ஒன்றை மூன்றாவது பரிசாகக் கொடுத்து அறிவுறுத்தியது:

'''திறவாய் பெட்டியே, திறவாய்! வெளியே வா, கொட்டாப்புளியுடன் வெளியே வா!' என்று சொல்ல, கொட்டாப்புளியுடன் ஒருவன் பெட்டியை விட்டு வெளி குதித்து அண்மையில் இருக்க நேரும் ஒவ்வொருவரையும் அடித்து நொறுக்குவான். நிறுத்த வேண்டுமென்று நினைத்தால் 'ஓய்வெடு, கொட்டாப்புளியுடன் ஓய்வெடு!' என்று சொல். அந்த மனிதன் குதித்துத் திரும்பவும் பெட்டிக்குள்ளாகப் போய்விடுவான்.''

பெட்டியைத் தூக்கிக்கொண்டு மேய்ப்பன் அரண்மனையை நோக்கிச் சென்றான். பெட்டியைக் கண்ணுக்குத் தெரிகிற இடத்தில் வைத்த பிறகு, பக்கத்திலே மறைந்து கொண்டு, தனது மறைவிடத்திலிருந்து கத்தினான்:

''திறவாய் பெட்டியே, திறவாய்! வெளியே வா, கொட்டாப்புளியுடன் வெளியே வா!''

பெட்டியை விட்டு அந்த மனிதன் கொட்டாப்புளியுடன் தாவிக்குதித்து, அரசனையும் தலைமை அமைச்சனையும் அரண்மனைப் பிரதானிகளையும் நையப்புடைக்கத் தொ டங்கினான். பிறகு அரண்மனை முழுவதையும் நொறுக்கித் தள்ளினான்.

அப்போதுதான் மேய்ப்பன் அவனைப் பார்த்துச் சத்தம் போட்டான்:


''ஓய்வெடு, கொட்டாப்புளியுடன் ஓய்வெடு! மூடிக்கொள்வாய் பெட்டியே, மூடிக் கொள்வாய்!''

பெட்டி மூடிக்கொண்டது. மேய்ப்பன் தனது மேசை விரிப்பை எடுத்துக் கொண்டு, கழுதையையும் கூட்டிக்கொண்டு வீடு திரும்பினான். பின்னர் ஏற்பாடு செய்த பெரிய விருந்திற்கு நாட்டிலிருந்த அனைவரையும் அழைத்திருந்தான்.

அன்றிலிருந்து அவன் வறுமையின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தான், வறியவர்களுக்கு உதவினான், பசித்தவர்களுக்குப் பசியாற்றினான்.

அவன் இறந்த பிறகு நல்ல பெயரை விட்டுச் சென்றிருந்தான்.

மூன்றாம் நாளில் தெங்லி முற்றிலும் குணமாகி விட்டான். ஆனால் ஷிர்டாக் மீண்டும் அவனைப் பார்க்க வந்து மகிழ்ச்சிமிக்க கதை ஒன்று சொன்னான்.



# கெய்லெவ்

முன்னொரு காலத்தில் கெய்லெவ் என்ற ஒரு மனிதன் வாழ்ந்தான். ஒருநாள் அவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்து அவன் மனைவி சொன்னாள்:

''சந்தைக்குப் போய்க் கொஞ்சம் வெண்ணெய் வாங்கி வாருங்கள்.''

வெண்ணெய்யை வைப்பதற்குக் குழிவான சுரைக்குடுவையை எடுத்துக்கொண்டு, கெய்லெவ் தனது கழுதை மீது ஏறி சந்தைக்குப் புறப்பட்டான்.

வீடு திரும்பும் வழியில் தங்கி ஓய்வெடுக்க கெய்லெவ் தீர்மானித்தான்.

கழுதையை விட்டு இறங்கி, வெண்ணெய் நிறைந்த சுரைக்குடுவையைத் தரையில் வைத்துவிட்டு, தனது கழுதையைக் கட்டிப்போட ஓர் இடத்தைத் தேடத் தொடங்கினான். ஆனால் அந்த இடமோ தரிதாகவும் தமதளமாகவும் இருந்தது. சிறிய புல் கூட கண்ணிற்படவில்லை. அப்போது அவனது பார்வை சுரைக்குடுவையின் மீது விழுந்தது. அதனது வாயில் கழுதையைக் கட்டிப்போடத் தீர்மானித்தான்.

''எப்படிப்பட்ட புத்திசாலி நான்!'' தரையில் படுத்த போது தனக்குள் கெய்லெவ் எண்ணிக் கொண்டான்.

அசையாமல் நின்றதில் கழுதை சீக்கிரமே களைப்புற்றுப் போனது; அது தனது கழுத்தை நிமிர்த்திக் கனைத்தது, பிறகு சுரைக்குடுவையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டே நடக்கத் தொடங்கியது. கெய்லெவ் குதித்து எழுந்து அதைப் பின்தொடர்ந்து ஓடினான். அதைப் பிடித்துவிட இருந்தபோது கழுதை தனது நடையை விரைவுபடுத்தி முழுவீச்சில் தாவி ஓடலாயிற்று.

ஒரு மேட்டிலிருந்து மற்றொரு மேடாக சுரைக்குடுவை குதித்தோடி கடைசியில் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிப் போய்விட்டது. கழுதையும் பார்வையினின்றும் மறைந்து போனது.

கழுதையைத் தேடுவதைத் தவிர கெய்லெவுக்கு செய்ய ஏதுமில்லாது போய்விட்டது. வழியில் ஒருவனைச் சந்தித்தான்.

''என் கழுதையைப் பார்த்தாயா?''

கெய்லெவ் வெகுளி என ஊகித்துக்கொண்டு அந்த மனிதன் அவனைக் கேலி செய்ய முடிவு செய்தான்.

''பார்த்தேன்.''

''எங்கே?''

''அது மாளிகையில் இருக்கிறது; நீதிபதியாக அமர்த்தப்பட்டிருக்கிறது.''

எந்தச் சிந்தனையுமின்றி, கெய்லெவ் நீதிபதியினுடைய வீட்டிற்கு ஓடி, அவனைத் தெருவிற்குள்ளாக இழுத்து, சத்தம் போடத் தொடங்கினான்:

''நல்லது, இப்போது நாம் புறப்படலாம்!''

இந்தக் குழப்பத்தை மக்கள் பார்த்தார்கள். விரைவிலேயே பார்வையாளர்களின் கும்பல் ஒன்று கெய்லெவையும் நீதிபதியையும் சுற்றிக் கூடியது.

''கெய்லெவ், எங்கே அவரை இழுத்துக்கொண்டு இருக்கிறாய்?''

''வீட்டுக்கு. இது என்னுடைய கழுதை! வெண்ணெயுடன் இருந்த சுரைக்குடுவையில்

அதைக் கட்டிப் போட்டேன், அது ஓடி வந்து விட்டது. சுரைக்குடுவை தூள்தூளாக உடைந்து, வெண்ணெய் முழுதும் சிதறிப் போனது. என் கழுதையும் இல்லாமல் நான் போக வேண்டுமா?'' கெய்லெவ் தனது கதையை கூட்டத்தினர்க்கு விவரித்து நீதி பதியைப் பார்த்து 'நகரு!' என்று திரும்பவும் கத்தினான்.

என்ன செய்வதென்று தெரியாமல் நீதிபதி குழம்பிப் போனான்: மக்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள், கெய்லெவ் அவனை இழுத்துக் கொண்டிருந்தான்.

''புத்திசாலித்தனமானது அவனுக்குப் பணம் கொடுத்து விடுவதுதான்'' என்று எண்ணிய நீதிபதி கழுதை, சுரைக்குடுவை, வெண்ணெய் இவற்றிற்கு நட்டஈடாக அவனுக்குப் பணம் கொடுத்தான்.

கெய்லெவ் பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். ஆனால் நீதி பதியினுடைய சேவுகர்களில் ஒருவன் பொறாமைப்பட்டான்.

''அந்த வெகுளி எப்படி எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு போக முடியும்? அதைத் திரும்பப் பெற ஏதாவது வழி கண்டாக வேண்டும்.''

அவன் கெய்லெவுக்கு முன்னால் ஓடிச் சென்று இரு முலாம் பழங்களுடன் சாலையில் உட்கார்ந்தான். கெய்லெவ் நெருங்கி வருவதைப் பார்த்ததும், அவற்றில் ஒன்றைத் துண்டு போட்டுத் தின்னத் தொடங்கினான். கெய்லெவுக்கு பயங்கரமான தாகமாக இருந்தது. நீதிபதியினுடைய சேவகன் ஒரு கீற்று வெட்டி அவனிடம் கொடுத்தான்.

''மிகவும் சுவை உண்மையில்!'' என்றான் கெய்லெவ்.

''ஆனால் இந்த முலாம் பழம் அதைவிட அருமையானது'' என்றான் சேவகன். ''இது சீக்கிரமே ஒரு குதிரைக்குட்டி ஈனும்.''

''உன் முலாம் பழம் எவ்வளவு விலை?'' வினவினான் கெய்லெவ்.

''ஒரு கழுதை என்ன விலையோ சரியாக அதே விலைதான்.''

''பேரம் அனுகூலமானது'' என்று நினைத்தான் கெய்லெவ். ''இது எனது தாகத்தைத் தீர்க்கும், கழுதைக்குப் பதிலாக குதிரையும் கிடைக்கும்.''

கெய்லெவ் முலாம் பழத்திற்காகப் பணத்தைக் கொடுத்ததும் நீதிபதியினுடைய சேவுகன் சொன்னான்:

''வீடு போய்ச் சேரும் வரை முலாம் பழத்தை நறுக்காதே—உனது குதிரைக்குட்டி ஓடிப் போய்விடும்.''

நீர் நிறைந்த கூஜாவைப் போல முலாம் பழத்தை கெய்லெவ் சுமந்து சென்றபோது தடுமாறினான். பழம் அவனது கைகளை விட்டு நழுவி தரையில் விழுந்து உடைந்தது.

அதே இடத்தில் ஒரு முயல் தூங்கிக்கொண்டு இருக்கும்படி நேர்ந்தது. உரத்த ஓசையினால் திடுக்குற்று, அது குதித்தோடியது.

''என்னுடைய குட்டி ஓடுகிறது'' என்று ஓடுவதைப் பார்த்து கெய்லெவ் எண் ணினான்.

சலிப்புடன் பெருமூச்சு விட்டு வீடு சென்றான்.

அவனைப் பார்த்ததும் அவனது மனைவி கேட்டாள்:

''வெண்ணெய் எங்கே?''

கோபத்துடன் கெய்லெவ் பதிலளித்தான்:

‘‘முட்டாள் பெண்ணே, நானே குதிரைக்குட்டி ஒன்றை இழந்து விட்டேன், நீயோ வெண்ணெய்யைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாய்!’’

தனது அவக்கேடு முழுவதையும் கெய்லெவ் தன் மனைவியிடம் சொன்னபோது அவள் கூறினாள்:

‘‘எனக்கு வாய்த்த கணவன் எப்படிப்பட்ட ஏமாளி!’’



## ஸ்டெப்பி மான்

ஷிர்டாக் பற்றி இதுவரை நீங்கள் படித்த கதைகள் எல்லாமே ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளிவந்தவை. ஒருமுறை அறிமுகமில்லாத ஒருவர் என்னைப் பார்க்க வந்தார்.

‘‘நான் உங்களுடைய வாசகன்’’ என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ‘‘ஷிர்டாக்குடனான எனது சந்திப்புப் பற்றி உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்.’’

‘‘எனக்குத் தெரிந்த வரை’’ என்றேன், ‘‘ஷிர்டாக் குழந்தைகளுக்கு மட்டுமே தன்னைக் காட்டிக்கொள்வான்.’’

‘‘எனது குழந்தைப்பருவத்தில் நிகழ்ந்தது பற்றியே உங்களிடம் சொல்ல வந்திருக் கிறேன்’’ என்று புன்னகையுடன் அவர் பதிலளித்தார்.

‘‘என் பெயர் மெய்லிஸ்’’ புதிதாக எனக்கு அறிமுகமானவர் தனது கதையைத் தொடங்கினார். ‘‘என் அப்பா ஒரு வேடுவர். ஒருமுறை அவர் தனது பையில் சிறிய ஆட்டுக்குட்டி போன்ற ஒன்றைக் கொண்டுவந்தார். அது ஓர் இளம் ஸ்டெப்பி மான். ஸ்டெப்பியில் அதைத் தனிமையில் பார்த்திருக்கிறார். அதனது தாய்க்கு ஏதோ துயரம் நேர்ந்தது போலக் காணப்பட்டது. அதிருஷ்டவசமாக, எங்களது பெட்டை வெள்ளாடு குட்டி ஈன்றிருந்தது, அதனிடம் மான்குட்டியைக் கொண்டுவந்தோம். முதலில் பெட்டை ஆடு அதைத் துரத்தியது. பிறகு அதன் மீது பரிவு கொண்டு அதை பார்த்துக் கொள்ளவும் பாலூட்டவும் தொடங்கியது. இப்போது அதற்கு மூன்றுக்குப் பதிலாக நான்கு குட்டிகள் இருந்தன. நாங்கள் எல்லாரும் மானை நேசித்தோம். அதுவும் எங்களிடம் பாசத்துடன் இருந்தது. கோடை, பிறகு இலையுதிர் காலம், குளிர்காலம் சென்று வசந்தத்தில் ஒருநாள் காலையில் ஸ்டெப்பிக்குள்ளாகச் சென்ற மான் திரும்பவே இல்லை. தாய் ஆடு பரிதாபமாக அலறியது. நானும் அழுதேன். நள்ளிரவில் விழித்தெழுந்து, ‘கவலைப்படாதே! உனது மான் திரும்பி வரும். நானே அதைத் திரும்ப ஓட்டி வருவேன்!’ என்று ஒரு குரல் சொல்லக் கேட்டதாகத் தோன்றுவது என் நினைவிலிருக்கிறது. மூன்றாம் நாள் மான் வீடு திரும்பியது. ‘நள்ளிரவில் என்னோடு

பேசியது யார்?' என்று நானே எண்ணிப்பார்த்து, நிச்சயமாக அது ஒரு மந்திரவாதியாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

''ஆனால் சுதந்திரத்தை அநுபவித்த பிறகு எங்களது மான் முன்பு போல இல்லை. நான் அதைத் தழுவ முயன்ற போது விலகிக் கொள்ளும்.

'''அடுத்த முறை அது திரும்பி வராது' என்று என் அப்பா சொன்னார். மானை ஒரு கயிற்றினால் கட்டிப்போட்டார்.

''நாள்கள் சென்றன; ஒருமுறை எங்களிடம் சில விருந்தினர்கள் வந்தனர்.

'''நாளை உங்களுக்கு மான் கறியுடன் விருந்து வைப்பேன்!' என்று தன் நண்பரிடம் அப்பா சொன்னார்.

''அன்று இரவு நீண்ட நேரம் தூங்காது விழித்துக் கிடந்தேன். திடீரென்று நிலவொளியில் தொப்பி அணிந்த சிறிய மனிதனைக் கண்டேன்.

'''என் பெயர் ஷிர்டாக்' என்றான். 'எதற்காக சும்மா படுத்திருக்கிறாய்? நாளை உன் நண்பனுக்காக என்ன காத்திருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா? அதற்காகத்தான் ஸ்டெப்பியிலிருந்து அதை நான் திரும்பக் கொண்டுவந்தேன் என்று நினைக்கிறாயா?'

''நான் குதித்தெழுந்து அந்தச் சிறிய மனிதனை நன்கு பார்க்க முயன்றேன், ஆனால் அவன் மறைந்துவிட்டான். பிறகு நான் வீட்டை விட்டு மெதுவாக வெளியே சென்றேன். கால்நடைப் பட்டிக்கு ஊர்ந்து சென்று, மானைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டேன். அதன் காதின் பின்புறம் தடவிக் கொடுத்து, கட்டியணைத்தேன். அதனது நெஞ்சு பலமாக அடித்ததை என்னால் கேட்க முடிந்தது.

''ஸ்டெப்பிக்குள்ளாக அது எப்படி ஓடியது என்பது எனக்கு நினைவிருக்கிறது. பொழுது விடிந்து கொண்டிருந்தது. பாய்ந்து சென்ற அதனது குளம்புகளிலிருந்து தூசி எழுந்தது. துயரத்தாலும் மகிழ்ச்சியாலும் நான் நிறைந்து நின்றேன்.''

ஷிர்டாக் பற்றி மெய்லிஸ் என்னிடம் சொன்னது இதுதான். அவரது கதையை எனது புத்தகத்தில் சேர்த்ததன் மூலம், ஷிர்டாக்கைப் பார்த்த பிற வாசகர்களிடமிருந்து அல்லது அந்தச் சிறிய மனிதனுடன் நட்புக் கொண்டவர்களிடமிருந்து இது போன்ற கதையைக் கேட்க முடியும் என நம்புகிறேன்.

## அன்புக் குழந்தைகளே!

இந்நூல் பற்றிய உங்கள் கருத்து என்ன? அடுத்து வரும் வெளியீடுகளுக்கு அது உதவக் கூடும். ஆகவே உங்களது இனிய எண்ணங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்புவதை மகிழ்வுடன் வரவேற்கிறோம்: **Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR.**

